**ABBEY TRAINING.NET**
Off Licence / Restaurant
வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் அனைவருக்கும் Personal Licence & Premises Licence எடுத்து தருவோம்
வகுப்புகள் NCPLH Certificate Course Life in the UK
NESS & Co.
Immigration, Conveyancing, Licencing, Family Disputes & Others
Call: S.Thavanessan (NESS)
020 8665 2226 / 020 8640 5050 / 07956 913 164
38 London Road, Tooting SW17 9HP

BILINGUAL FORTNIGHTLY
# ஒரு பேப்பர்
ORU PAPER
FREE
PAPER - 07 ♦ ISSUE - 132 ♦ 17 FRIDAY SEPTEMBER 2010

**RAJA & CO SOLICITORS**
We provide following Legal Services:
Conveyancing:
Buying and Selling
Houses, Flats & Business
- Criminal Cases
- Civil Litigation
- Family
- Immigration

TOOTING
10 Upper Tooting Road, Tooting Bec, London SW17 7PG
Tel: 020 8772 4900

COLLIERS WOOD
2A Robinson Road, Colliers Wood. SW17 9DJ
Tel: 020 8543 4974

We hold 'Legal Aid Franchise' in Immigration, Crime & Family

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM




**R.T. REFRIGERATION & AIR - CONDITIONING**
All type aircon, fridge, freezer, Cold rooms, freezer rooms, maintanance and shop fitting, aluminium shop fronts & roller shutters.
தொடர்புகளுக்கு: Senthil
Free Phone : 08002343140 Tel : 0785 586 7456
31, Buxton Crescent, Cheam, Sutton, SM 9TR

**TOP MARKS FOR MATHS - A* TUTOR**
GCSE, A/S & A/2 Students
All examinaton boards Covered by highly experienced mathematician.
Also coach for 11+ and Grammar school exams.
For further details call
KAMALANATHAN BSC (HONS)
Tel : 020 8883 3126
Mobile: 079 7083 9507
North, East, North-East & North- West London areas

**Ersan & Co SOLICITORS**
Ersans has a wealth of experience in providing specialist help and advice for Personal Injury claims. We offer a free assessment of your claim and a "No Win No Fee" package to ensure that no deductions are made from any compensation to which you may be entitled.
"We will make sure that you will receive 100% of your compensation and our service will not cost you a penny"
தனியாருக்கு ஏற்படும் காயங்களுக்கு நட்டஈடு பெறுவதற்கு உதவிசெய்வதில், 'எர்சன்ஸ்' (Ersans) சிறந்த அநுபவம் உடையவர்கள். உங்களுடைய விண்ணப்பத்தை இலவசமாகப் பரிசீலனை செய்து, 'வெற்றியில்லையேல் கட்டணம் இல்லை' என்ற அடிப்படையில் எவ்விதக் கழிவும் இன்றி உங்களுக்குரிய நட்டஈட்டுத் தொகை கிடைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளோம்.
உங்களுடைய நட்டஈட்டுத்தொகை 100 சதவீதம் உங்களுக்குக் கிடைக்கவும், எமது சேவைக்காக உங்களுக்கு எவ்வித செலவும் இல்லாதிருக்கவும் உறுதிசெய்வோம்.
ERSAN & CO SOLICITORS
7 Willoughby Road, Turnpike Lane, London N8 0HR
Tel: 0208 342 7070
Fax: 0208 342 7071 Mobile: 07816 646345
E-mail: info@ersans.co.uk

**SAME DAY UK VISA SERVICES**
Indefinite Leave to Remain(ILR)
One Day Visa Service From: £299
OISC Registered Immigration Advisor
K. KANDEL
Contact Us for more information
TEL: 0208 572 6386
MOB: 07772 641 180
www.ukvisaexpert.com
NO WIN NO FEE
KAMAL KANDEL OISC N:F200700150
www.ukvisaexpert.com
4 Hazel House, Pownall Road, TW3 1YN

"Door way to profit your investment" home2u
HOME FOR SALE
Lewisham: 83, Ladywell Road, London, SE13 7JA
SALES, LETTINGS AND MORTGAGES
We also do commercial properties
Tel: 020 8690 5000 | Mob: 079 4902 6917
Fax: 020 8314 1111

ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

# VINCENT SOLICITORS

- ✓ இந்த நாட்டில் பல வருடங்களுக்கு மேல் அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டோருக்கு உத்தரவாதத்துடன் கூடிய நிரந்தர வதிவிட உரிமை பெற்றுத் தரப்படும். (லெஹசி)
- ✓ பலவருடங்களாக உங்கள் விண்ணப்பம் பல்வேறு காரணங்களால் சரியான முறையில் அனுமதிக்கப்படவில்லை என்பதை நாம் நன்கு அறிவோம்.
- ✓ ஆகவே நன்கு அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகள் குழுவினர் தமிழ்பேசும் மக்களுக்கான இலவச ஆலோசனை சேவை வழங்கி வருகின்றனர்.
- ✓ (Legacy) லெஹசி என்பது நிராகரிக்கப்பட்ட உங்கள் அகதி அந்தஸ்து உரிமையை நிரந்தர வதிவிட உரிமையாக பெறுவதற்கான ஒரு ஏற்பாடு என்பதை அறிவோம்.
- ✓ பிரித்தானியா, இலங்கை, பாஸ்போட் விணிணப்பம் மற்றும் Travel Document விண்ணப்பம்.
- ✓ மாணவர் விசா நீடித்தல் மற்றும் விசா நிராகரிப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்தல்
- ✓ PSW, Tier - 1, Tier - 2, Tier - 4 விண்ணப்பங்கள் மற்றும் உறவினர்களை பிரித்தானியாவிற்கு அழைப்பித்தல்
- ✓ பிரித்தானியச் சட்டத்தின் கீழ் திருமணம் செய்வதற்கு அனுமதி பெற்றுத் தரப்படும்.



**020 8574 0666**

**11-13 Southall Street, Southall, UB1 1SU** (ஹிமாலயா சினிமா எதிரே)

மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்

குறிப்பு : போலி வாக்குறுதிகளை நம்பி ஏமாற வேண்டாம்.

**Price starts from £1100**

176 Merton High Street
South Wimbledon SW19 1AY

**020 8540 0359**
**077 456 456 45**

www.postechnology.co.uk

Metrologic

Chip and PIN

TOSHIBA Leading Innovation

IBM

FREE 3 YEARS WARRNTY & BARCODE PRINTER

# R.S. Finance

## Commercial Mortgages & Business Loans



Contact: **Sri**
220 - HIGH STREET NORTH, EAST HAM,
LONDON, E6 2JA.
Tel: **020 8475 0755**
Fax: **020 8470 4755** / Mob: **07803 600 543**

**Re-Mortgages**
(Raising Funds to Start Own Business and Other Needs)
**Secured Loans**

**Commercial Loans**
Shops (Pharmacies)
Petrol Stations
Restaurants & Hotels
Care Homes Etc.

Loans will be arranged for lease hold and free hold businessess

Arrangements are made to meet the senior business manager from leading banks in our premises to fullfil your business loan requirements.

**Whatever your needs, Regarding your Commercial Loans**

ஒரு குறிப்பிட்ட அல்லது நீண்டகாலமான தோல்வியாதிகளால் அவதியுறுகின்றீர்களா?

பின்வரும் தோல் வியாதிகளிற்கு மூலிகை வைத்தியத்தின் மூலம் எம்மிடம் உங்களுக்கான சிகிச்சை உண்டு.

உங்களின் அனைத்து பிரச்சினைகளுக்கும் இங்கே தீர்வு உண்டு.
we may have herbal solutions for your Skin Problem

Eczema, Vitiligo, Psoriasis, Allergy, Itching, Blemishes, Acne, Pimples, Boils, Urticaria, Discolouration, Melasma etc.





உங்கள் தாம்பத்திய வாழ்க்கையில் சிக்கல்களா? காலத்தை விரயமாக்காமல் உடனே தொடர்புகொள்ளுங்கள்.

இன்றே எங்கள் சிறப்பான வைத்தியர்களுடன் தொடர்புகொள்ளுங்கள்.
(தமிழ் பெண் வைத்திய நிபுணரிடமும் தொடர்புகொள்ளலாம்)

herbalAid
10 Park Avenue, Southall, Middx UB1 3AQ
herbalaid@hotmail.co.uk

Tel : 02088430330 Mobile : 07546651898



உங்கள் வாழ்க்கைத் துணையை தேட இன்றே அழையுங்கள்...

தொடர்புகளுக்கு

*Arumbukal Marriage Brokers*

Tel : 02086821057 | 020 3318 8848

Mob: 07889 930 130 Fax : 02086821057

E.Mail : info.arumbukal@gmail.com




## ஏன் இந்த சிந்தனைக் குழப்பம்?

வணக்கம் இரவி அருணாசலம் 'சரியான முறையில் அணுகியிருந்தால் கருணாவையே கூட நாம் தியாகியாக்கியிருக்கலாம் 'என்று கூறுகிறீர்களே, அப்ப தலைவருக்கு அறிவு குறைவென்று சொல்ல வருகிறீர்களா? அடுத்ததாக, கோப்பியை (கேபீ) சூழ்நிலை கைதி என்று திரும்பத் திரும்ப கூறுகிறீர்கள். அதற்கும் சாதரான கைதிக்கும் உள்ள வித்தியாசம் என்ன? நாடு கடந்த அரசின் உருவாக்கத்திற்கும் கேபிக்கும் எந்த சம்பந்தமும் இல்லையென்று உருத்திரகுமாரனே சொல்லிவிட்டார். இப்ப கேபீ தான் அதை செய்ததாக சொல்கிறீர்கள்! ஏன் இந்த சிந்தனைக் குழப்பம்?

ஈழத் தமிழ் தாயின் விடுதலை உணர்வையும், ஆன்மாவையும் கே பியின் பேட்டிகள்தான் குத்திக் கிழிக்கிறது அண்ணா.

நீங்கள் சொன்ன கடைசி விடயம் தான் உண்மை. இந்த கே பீ, நெடியவன் கதைகள், எல்லாத்தையும் விட்டுப் போட்டு, போர்க்குற்றம், போராளிகளின் விடுதலை, மீள் குடியேற்றம் என்ற விசயங்களில் கவனத்தை செலுத்துவோம்.

*- நிமலன்*

## நம்பிக்கைதான் வாழ்க்கை

சகல குழப்பங்களில் இருந்து விடுபட, 'நம்பிக்கைதான் வாழ்க்கை' என்று அருளிய, கேப்பீயானந்தாஜியை நம்புமாறு கூறிவருகிறார் சேயோன். அது எப்படி ஐயா, சிங்களச் சிறையில் வாடும் கேப்பீயானந்தாஜியால், சீரியல் பேட்டிகளை அளிக்க முடிகிறது? 'இனி போராட்டம் சரி வராது. மகிந்தரை நம்புங்கள்' என்பவரை மறப்பதுதான் தமிழினத்திற்கு நல்லது. ஊ.. லல்லா.... யாரையா நெடியவன்.? எங்களுக்குத் தெரியாது. நெடியவன் பிழையென்றால் , கேபி சரியென்று ஆகிவிடுமா? போங்கடா நீங்களும் உங்கள் விடுதலை உணர்வும். ஒற்றைத் தராசு நிறுவையை காட்டாது என்று யார் சொன்னது சேயோன்! இப்போது பாவனையில் ஒற்றை தராசுதான் இருக்கிறது. இரட்டை தராசை சில நகைக்கடைகளில்தான் காணலாம்.

*- சுதன்ராஜ்*

## நடுக்கடலுக்கு போனாலும் நக்கு தண்ணிதான் ...

யாழ்ப்பாணத்திற்கு போன போல் சத்தியநேசனுக்கு டக்கிளஸ் கொம்பனி மேள தாளத்தோடை வரவேற்பு கொடுத்திருக்கு. தலைகால் தெரியாத புழுகில் எங்களாலதான் யாழ் மக்கள் நடுவீதிக்கு வந்துள்ளதாக வேறு இவர் உளறித் தள்ளியிருக்கிறார். 'குடுக்கிற காசுக்கு மேலா குரைக்கிறான்ரா கொய்ராலே' என்ற மாதிரியிருக்கு இவருடைய பேச்சு.

*- அழகு*

## நோ வின் நோ பீஸ் சொலிசிற்றர் சைத் தெரியுமா?

International Tamil Student Association Limited பற்றி இதற்கு முந்திய பேப்பரில் தவறாக எழுதியிருக்கிறீர்கள். பரமேஸ்வரனின் வழக்கு பற்றி உங்களுக்கு தெரிந்திருக்கும். நோ வின் நோ பீஸ் சொலிசிற்றர்ஸ் பற்றி உங்களுக்கு தெரியுமோ? கவனமாக எழுதுங்கோ. உங்கட பேப்பருக் குத்தான் நல்லது.

*- ராஜன், ஹரோ*
*(தொலைபேசி வாயிலாக)*

## தகவல் களஞ்சியம்

உமா மகாலிங்கம் அவர்கள் தரும் தகவல் களஞ்சியம் எளிய நடையில் இலகுவாக புரிந்து கொள்ளக்கூடிய முறையில் அரிய தகவல்களை தருகிறது. அவருக்கு எமது வாழ்த்துகள். அதுபோல் அரசியல் தவிரந்த உலக நடப்பு விடயங்கள் பற்றியும் அவர் எழுதினால் நன்றாக இருக்கும்.

*- பரமகுமாரன்*

## போட்டோவுக்கு நன்றி!

அண்மையில் தமிழ் போர் லேபர் ஒழுங்கு செய்த டேவிட் மிலிபாண்ட் அவர்களுடனான சந்திப்புக்கு சென்றேன். வருங்காலப் பிரதமரான அவருடன் நின்று படம் எடுக்கும் வாய்ப்புக் கிட்டியது. அதனை ஒழுங்கு செய்தவர்களுக்கு ஒரு பேப்பர் வாயிலாக நன்றி சொல்லிக் கொள்கிறேன். இது போல் இப்போதைய பிரதமர் டேவிட் கம்ரன், உதவிப் பிரதமர் நிக்கிளெக் ஆகியோருடனும் நின்று படம் எடுக்க விரும்புகிறேன். தமிழ் கொன்சவர்டிவ், தமிழ் லிபரல் ஆகிய கட்சிகள் மனசு வைத்தால் இது நடக்கும். நடவடிக்கை எடுப்பார்கள் என நம்புகிறேன்.

*- தவசீலன்*

## நாடு கடந்த அரசிற்கு ஆதரவளியுங்கள்

இல்போர்ட் செல்வவிநாயகர் ஆலயத்தில் நாடுகடந்த அரசாங்கத்தின் எம்பிக்கள் நடாத்திய கூட்டத்திற்கு எண்ணி ஐந்தோ ஆறுபேர்தான் வந்திருப்பார்கள். எம்பிமார் பத்துப்பேர் வந்தார்கள். மக்கள் நாடுகடந்த அரசாங்கத்தில் நம்பிக்கையிழந்து போய்விட்டார்கள் போல் தெரிகிறது. இந்நிலையை மாற்றவேண்டிய கடப்பாடு நாடுகடந்த அரசாங்கத்தினரிடமே உள்ளது.

*- மணிசேகரன்*

## அவரைக் குழப்ப வேண்டாம்!

செம்மொழி மாநாட்டுக்குச் சென்று தமிழ் வளர்த்துவிட்டு வந்துள்ள ஆய்வாளர் பேராசிரியர் பற்றிமாகரன் அவர்கள் இந்தியாவுடன் தான் ஒரு உரையாடலை ஆரம்பித்துள்ளதாக ஜீ.ரீ.வி. இல் கூறியிருக்கிறார். தயவு செய்து அவர் மீது விமர்சனங்களை மேற்கொண்டு அவரைக் கேவலப்படுத்த வேண்டாம். அவர் தனது அரசியல் இராசந்திரத்தை உபயோகித்து ஆவன செய்வார் என்ற நம்பிக்கை கொள்வோம். ஏனெனில் நம்பிக்கைதான் வாழ்க்கை.

*- கணேந்திரன்*

## எங்கே அவர்கள்?

இலங்கை பொதுத்தேர்தலில் தமிழ் தேசியத்துக்கான மக்கள் முன்னணிக்கு வாக்களிக்குமாறு வேண்டினீர்கள். இப்போது அவர்களின் சத்தத்தையே காணவில்லை. ஒரு பேப்பர் லால் அவர்களை நம்பினோம். இப்போது அவர்கள் எங்கு போய் ஒளிந்து கொண்டார்கள்?

*- தனிநாயகம்*

## கருநாநிதியைக் கைவிடுங்கள்

புலம்பெயர் நாடுகளில் எந்த ஒரு தமிழனும் கருநாநிதியை நம்பவில்லை. ஒரு பேப்பர் தான் செத்த பாம்பை திரும்ப திரும்ப அடிக்கிறது. வேறு எவ்வளவோ பிரயோசனமான சங்கதிகள் இருக்கின்றன. எழுத ஒருவரும் இல்லையென்றால் இருக்கவே இருக்கிறது இணையதளங்கள். சுடுவது ஒன்றும் உங்களுக்கு புதிதில்லை தானே.

*- மதிவதனன்*

## என்ன செய்ய வேண்டும்?

குழப்பங்கள் நிறைந்திருக்கிற சூழலில் ஒரு பேப்பர்ரே ஒரே ஒரு ஆறுதல். தமிழ் தேசிய உணர்வை அணையவிடாது காப்பது நீங்கள் தான்.

*- திவாகரன்*

ஒரு பேப்பர் தொடர்பான உங்களுடைய கருத்துக்களைத் தற்பொழுது தொலைபேசி வாயிலாகவும் பதிவு செய்து கொள்ள முடியும்.

பூராயம் பகுதிக்கான கடிதங்களைத் தொலைபேசியில் பதிவு செய்வதற்கான இலக்கம் 020 7043 4314.

*ஆ—ர்*

## நல்லூர் திருவிழாவுக்கு 50 ஆயிரம் வெளிநாட்டவர்கள் வரமுடியுமானால் சீரழிந்துள்ள தாயகத்தை கட்டியெழுப்ப வருவதற்கு ஏன் தயக்கம்? - வித்தியாதரன்

மூத்த பத்திரிகையாளர் ந.வித்தியாதரன் சுவிஸில் நடைபெற்ற சுற்றத்து முற்றம் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசும்போது புலம்பெயர்ந்து வாழும் மக்களை நோக்கி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடக்கு - கிழக்கில் ஜனநாயக வழியில் உறுதியோடு போராடக் கூடிய இளைஞர் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும். இந்த பணிக்காக ஊடகத் துறையிலிருந்து தற்போது விலகியிருக்கும் நான் முழுமையாக ஈடுபடத் தயாராக இருக்கிறேன். இதற்கான முழுப் பொறுப்புக்களையும் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஏற்றுச் செயற்பட வேண்டும்.

ஆயுதப் போராட்டத்தை இலங்கை அரசு தோற்கடித்துவிட்டது என்பதற்காக எமது உரிமைகளையும் இறைமையையும் விட்டு விட முடியாது. அதை மீட்க வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு இப்போது அனைத்து தமிழ் மக்களுக்கும் உள்ளது.

ஆயுதப் போராட்டத்தின் மூலம் உரிமைகளை - இறைமையை - மீட்கப் போராடிய எங்களை வரலாறு வேறு திசைக்கு திருப்பிவிட்டது. ஆனாலும் ஜனநாயக பாதை ஊடாக எமது பயணத்தை தொடர்ந்து முன்னெடுத்து உரிமை - இறைமை என்ற இலக்கை நாம் அடைய வேண்டும். ஜனநாயக வழியில் செல்லும் போது நாம் யாரிடமும் மண்டியிடமுடியாது.

இலங்கை அரசு தற்போது வைத்திருக்கும் தீர்வு ஒன்றே ஒன்றுதான். சிங்கள தேசம் என்ற தீர்வை தவிர மகிந்த ராஜபக்சவிடம் வேறு எந்த தீர்வும் இல்லை. போர் முடிவடைந்த பின்னர் அரசுத் தலைவர் மகிந்தவை நான் சந்தித்தபோது, தற்போது பிரிக்கப்பட்டிருக்கும் வடக்கு கிழக்கை இணைத்து தமிழ் மக்களுக்கான தீர்வை வழங்க வேண்டும் என்று கோரியபோது, அதற்கு அவர் வடக்கு கிழக்கு இணைப்பு என்பது ஒருபோதும் நடக்கவே நடக்காது. அது விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து புதைக்கப்பட்டுவிட்டது என்று கூறினார். இந்த மனநிலைதான் இலங்கை அரசுக்கு இருக்கிறது.

எனவே, ஜனநாயக வழியில் உறுதியுடன் போராடக் கூடிய இளைஞர் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும். தமிழ் தேசிய கூட்டமைப்பு கிராமங்கள் தோறும் கிளைகள் அமைக்க வேண்டும். இந்த இரு கட்டமைப்புக்களும் இணைந்து செயற்பட வேண்டும். புலம்பெயர் தேசங்களிலும் இந்த கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட வேண்டும். தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைமை பொறுப்பின் கீழ் இந்த கட்டமைப்புக்கள் இணைந்து செயற்பட வேண்டும். இந்த பணியில் இணைந்து செயற்படுவதற்காக ஊடகத் துறையிலிருந்து தற்போது விலகியுள்ள நான் தயாராக உள்ளேன்.

### மக்கள் கருத்து

அத்திவாரம் இல்லாமல் வீடுகட்ட முயலும் வித்தியாதரன் சிலவேளை சிந்திக்கத் தவறி இருக்கலாம். தமிழனுக்கு இன்னும் சரியான அடித்தளம் இலங்கையில் கிடைக்கவில்லை. மீண்டும் கட்டியெழுப்பினால் தமிழனின் வீடு மறுபடியும் உடையும் என்பதைச் சொல்ல விரும்புகின்றேன். முதலில் தமிழர் பிரச்சனைககு விடிவும் முடிவும் தேவை.

*- ராஜ் லோகன்*


வித்தி சொலுறதில பிழை இல்லை என்பது என் அபிப்பிராயம். கட்டி எழுப்பிறது என்டால் கோட்டை கோபுரம் மட்டும் எண்டு அர்த்தம் இல்லை. அடிப்படை வாழவாதாரமே இல்லாத போரினால் பாதிக்கப்பட்ட வறிய மக்களின் வாழ்வுக்கு உதவுவதும் அவர்களை எழுப்பி விடுவதும் கூட கட்டி எழுப்புதல் எண்ட வரையறுக்குள் தான் வரும். எந்தப் போரால் நாங்கள் இங்கிருக்கிறோமோ அதே போரால் தான் அதுகள் கொட்டிலும் இல்லாமல் இருக்குதுகள்.

*- சஜீவன்*

மீண்டும் எழுபதுகளுக்கு மக்களை அழைத்துச் செல்லும் முயற்சி. எல்லாக் கட்டமைப்புக்களையும் கூட்டமைப்பின் தலைமையின் கீழ் கொண்டு வந்தால் குரங்கின் கையில் பூமாலை போல் ஆகி விடும்.

*- வாத்தியார்*

*(நன்றி யாழ்)*



Kerala Ayurveda

TRADITIONAL KERALA AYURVEDIC MASSAGE THERAPY – A HERBAL REMEDY

We are delighted to announce that Kerala ayurveda has opened a new branch in Kenton, Harrow. We hope to see you soon.

Our unique Ayurveda Pancha Karma therapy

- ✓ Reduces aches and pains
- ✓ Reduces stress and tension
- ✓ Cleanses body toxins
- ✓ Refreshes the skin, deep cleans & moisturises
- ✓ Helps Skin allergy and eczema
- ✓ Improves sleep patterns
- ✓ Release muscle tensions
- ✓ Relieve migraine
- ✓ Relieve nasal and sinus blocking

Full BODY Massage £35 £25



241, Kenton Lane, Kenton, Harrow HA3 8RP Call: 020 8907 8990

ஒரு பேப்பர்
ORU PAPER

FRIDAY, SEPTEMBER 17, 2010, ISSUE 132

## திலீபன் இனங் காட்டிய இந்தியா

இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாதிடப்பட்ட சிலவாரங்களில், ஐந்து கோரிக்கைகளை முனவைத்து நீர்கூட அருந்தாது, உண்ணா நிலைப்போராட்டம நடாத்திய தியாக தீபம் திலீபன் அவர்கள் வீரசாவடைந்து இருபத்தி மூன்று ஆண்டுகள் நிறைவடைகிறது.

தன்னை வருத்தி அமைதி வழியில் அவர் நடாத்திய போராட்டம் வெற்றிபெறாத நிலையில், அவரது உயிர் அவரை விட்டுப்பிரிந்தது. இருப்பினும், மிக முக்கியமான செய்தியொன்றை அவர் தனது மரணத்தின் மூலம் வெளிப்படுத்தியிருந்தார். இந்திய, சிறிலங்கா அரசுகள் ஈழத்தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வழங்குவதற்கு தயாராக இலலை என்ற அச்செய்தியை இதுநாள் வரை புரிந்து கொள்ளாதவர்களும் இருக்கிறார்கள் என்பது ஒரு வேதனையான விடயம்.

திலிபனின் சாவிற்குப் பின்னர், குமரப்பா புலேந்திரன் உட்பட்ட பன்னிரு போராளிகள் கைது செய்யப்பட்ட போதும், ஒப்பந்தத்தின் பிரகாரம் போராளிகளினை பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றிருந்த இந்தியா, சிறிலங்கா அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராக எந்த நகர்வையும் மேற்கொள்ளவில்லை. தொடர்ந்து விடுதலைப் புலிகளுடன் மோதலில் ஈடுபட்டபோதும், ஆயிரக் கணக்கான அப்பாவிப் பொது மக்களை கொன்று குவித்து, தனது உண்மை முகத்தை வெளிகாட்டியது இந்தியா.

இவற்றையெல்லாம் பழங் கதைகளாகக் கருதி, இன்னமும் இந்தியா ஈழத் தமிழர்களுக்கு உதவும் என்ற நம்பிக்கையில் செயற்படுபவர்கள், ஒப்பந்தத்தில் உள்ளவற்றுக்கு அதிகமான உரிமைகளைப் (13 plus) அது பெற்றுத் தரும் என்று பேசி வருகிறார்கள். இதனடிப்படையில், இன்று அதிகளவு பாராளுமன்ற பிரதிநித்துவத்தை கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவின் அனுமதியுடனேயே ஒவ்வொரு நகர்வையும் மேற்கொள்கிறது.

இதனை மறுதலிக்கும் வகையில், பதின் மூன்றாம் திருத்தச் சட்ட மூலத்தில் வழங்கப்பட்ட மாகாண சபைக்கான காணி அதிகாரம், காவற்துறை அதிகாரம் எனபனவற்றை பறித்தெடுக்கும் பதினெட்டாம் திருத்தச் சட்டமூலம் கடந்த வாரம் கொண்டு வரப்பட்டபோது, இந்தியா எது வித அசைவையும் காட்டவில்லை. சிறிலங்கா அரசின் சனநாயக விரோத நடவடிக்கையை கண்டித்து அமெரிக்க இராசங்க திணைக்களம் அறிக்கை ஒன்றினை வெளியிட்டபோதும், இந்தியத் தரப்பிலிருந்து எதுவித கருத்தும் தெரிவிக்கப்படவில்லை.

திலீபனின் நினைவில் நனையும் இந்நாட்களில் அவர் விட்டுச் சென்ற செய்தியையும் கருத்தில் எடுத்துச் செயற்படுவோம்.

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*போன கிழமை கொஞ்சம் பிசியாய் போயிட்டுது. கனபேர் போனடித்து ஏன் அப்பிடி எழுதின னிங்கள், ஏன் இப்பிடி எழுதினனிங்கள், நீங்கள் அவற்றை ஆட்களா, இவற்றை ஆட்களா என்று கேட்டு நச்சரிக்கத் தொடங்கிவிட்டார்கள். நடந்தது இவ்வளவுதான, கடந்த பேப்பரில் எங்கட ஆசிரியர் குழுவைச் சேர்ந்தவர்களால் எழுதப்பட்ட சில கட்டுரைகள், ஏற்கனவே புலம்பெயர் நாடுகளில் தலையிடியாய் இருக்கிற குழுக்களின் நிலை சார்ந்து எழுதப்பட்டதாக இருந்தது. இதை வைத்து எங்களை உண்டு இல்லை என ஆக்கி விட்டார்கள் சிலர்.*

*உண்மையச் சொன்னால் **ஒரு பேப்பர்** இந்த குழுக்களை தாண்டி தமிழ் மக்களின் நலன் ஒன்றில் அக்கறை வைத்துச் செயற்படவே விரும்புகிறது. தொடர்ந்து அவ்வாறே இருக்கும் என வாசகர்களுக்கு உறுதியளிக்கிறோம். ஆன படியால் ஆத்திரப்படுகிறதை விட்டுட்டு, உங்கடை கருத்துகளை எழுதி அனுப்புங்கோ.*

*இன்னொரு வாசகர் தொலைபேசியில், **ஒரு பேப்பர்** ரில் பிரசுரிக்கப்பட்ட வாசகர் கடிதம் ஒன்றைப் பற்றி கவலை தெரிவித்து விட்டு, No Win No Fee என்ற அடிப்படையில் இயங்குகிற சட்டத்தரணிகள் இருப்பது பற்றி எங்களுக்கு ஞாபகப்படுத்தினார். பொதுவாகவே விமர்சனங்களை இலகுவில் யாரும் ஏற்றுக் கொள்வதில்லை என்பதனை நாம் அறிவோம். ஆனால் அதுக்காக சமூகத்தில் நடக்கிற முறைகேடுகளை அறிவிக்காமல் இருக்க முடியாது. வாசகர் கடிதங்களாக இருந்தாலும், விசாரணைகளை மேற்கொண்டு விட்டே நாம் பிரசரத்துக்கு எடுத்துக் கொள்கிறோம்.*

*அதிலை தவறு இருந்தால் சுட்டிக் காட்டும் முழு உரிமையையும் வாசகர்களுக்கு தந்துள்ளோம்.*

*புதிய எழுத்தாளர்களுக்கு எழுதுவதற்கு சந்தர்ப்பம் வழங்கி உங்களை ஊக்கப் படுத்துவதில் **ஒரு பேப்பர்** எப்போதும் முன்நிற்கும் என்பதனை நீங்கள் அறிவீர்கள். ஆகவே உங்களது படைப்புகளை எழுதி அனுப்புங்கள். முன் அனுபவம், எழுத்து நடை, இலக்கணம் எதுவுமே தேவையில்லை. ஆனால் விசயம் இருக்க வேண்டும். சும்மா கிறுக்கினாலும் அதிலை ஒரு செய்தியிருந்தால் பிரசுரிப்போம்.*

***ஒரு பேப்பர்** ரில் விளம்பரங்களை பிரசுரிக்க விரும்புவர்கள் ஆறாம் பக்கத்தில் கொடுக்கப் பட்டுள்ள இலக்கங்களில் சோபனா அல்லது சாரதாவை தொடர்பு கொண்டு விபரங்களை அறிந்து கொள்ளலாம். மின்னஞ்சல் மூலமாகவும் தொடர்பு கொள்ளலாம்.*

***ஒரு பேப்பர்** ரில் பிரசுரிக்கப்படும் திருமணம் பற்றிய விளம்பரங்களை ஒரு மணம் (orumanam.com) என்ற எமது இணைய தளத்திலும் பார்வை யிடலாம்.*

*அடுத்த பேப்பரிலை சந்திப்பம்.*

***ஒரு பேப்பர்** காரன்கள்+காரிகள்*

# Might is Right in Sri Lanka today



By Leela Isaac
GROUNDVIEWS.ORG

"I define Justice or Right as what is in the interest of the stronger party – the ruling class in any state, but I can see you don't agree" says Thrasymachus, the sophist to Socrates in Plato's – The Republic. The sophists dismissed conventional morality as a sham and substituted self-interest.

In Sri Lanka today might has been proved right in several instances. The forces, that Lasantha Wickramatunga continued to criticize in his regular columns were definitely stronger and he was easily eliminated. The fact that he was brutally slaughtered in a high security zone in broad day light shocked only a minority. The majority continued to remain silent. Might was proved right. Not so long ago Eknaligoda was abducted, again for his critical writings and made to disappear. General Sarath Fonseka who saved the country is today stripped of his rank, denied his pension and incarcerated. Not many people even want to point out the injustice done to these men. Their reasoning seems to be – Lasantha and Eknaligoda should not have criticized powerful politicians. As for General Sarath Fonseka he is being punished for his ambition. He should have quietly retired and not contested the Presidential election. That was his mistake. He could even be executed for treason. There will be death for his ambition but no honour for his valour, being stripped of his rank and medals and subjected to severe humiliation. Majority of Sri Lankans may accept this as just, for it is those with might who do it and might is proved right.

"A land without opposition" is the subject of the editorial in a daily newspaper this week. There is no collective protest from the opposition parties. The leader of the opposition Mr. Ranil Wickramasinghe has been named Ranil Rajapakse for the support he lends the powerful Rajapakse regime. In the occasional public statements he makes he may sound critical of these many acts of injustice but all his actions prove that he supports the powerful regime.

Many admire this regime for the power it wields and they want to be a part of it. The SLMC leader Rauf Hakeem seems convinced that Mahinda Rajapakse should remain President for life. We still do not know what ministerial post he has been offered for his timely support. The next to join the merry band of ministers could very well to be Sri Ranga. The opposition has allowed itself to be completely swallowed up by the regime, because it is profitable to be with the strong and mighty ruling clan. It is also the right thing they seem to believe.

"The President can contest for ever once the constitution is amended" is the main headline in a week end newspaper. Already these amendments have been approved by the cabinet. Very soon it could be passed in parliament with 160 members in favour. That is more than two thirds majority. According to these amendments the President can not only remain in power for life but also wield enormous power without any checks. The more power the President acquires the more attractive he seems to the people, at least to the majority.

> Rauf Hakeem seems convinced that Mahinda Rajapakse should remain President for life. We still do not know what ministerial post he has been offered for his timely support

The police, the guardians of the law also act in favour of those in power, proving that might is right. Wimal Weerawansa the powerful minister was only exercising his right to protest in front of the UN office. But the Buddhist monks near the Fort railway station protesting against the detention of General Sarath Fonseka were treated as law breakers. The police did not see this as their democratic right to express dissent as in the case of Wimal Weerawansa.

What hope do we have then for a just and stable society in Sri Lanka? Today justice seems to be what is good for the ruling party. And there is no Socrates among us to whom we could appeal: "Prove to us, therefore, not only that justice is superior to injustice, but that, irrespective of whether Gods or men know it or not, one is good and the other evil because of what it inevitably does to its possessor".

But all is not lost. There are still a few dissenting voices that do not agree with Thrasymachus's definition of justice. To quote one example – Renaissance man in his Sunday Leader column (July 18/2010) under the heading "I am mad as hell and I'm not going to take it anymore!" says. "We have rationalists justifying every step of the Rajapakse clan's path to total and absolute power, we have erstwhile Troteskyists performing semantic gyrations in an effort to prove that the current regime doesn't preside over corruption that isn't without equal even in Sri Lanka. We have Stalinists providing an example of self righteousness—justifying god knows what horror that those of us who once lived in a Sri Lanka of decency and where the Rule of Law prevailed could never have anticipated".

But then a time may also come when all such dissenting voices will become silent if not silenced.

# இந்திய எல்லை தாண்டிய பேரினவாதமும் சிங்கள எல்லை மீறிய பேரினவாதமும்



இலங்கைக்கு பயணம் செய்த இந்தியப் படைத் தளபதி ஏ. கே சிங் அவர்கள் இலங்கை அரசு சிறுபான்மையினர்களுக்கு இரங்கி ஏதாவது போட்டுக் கொடுக்க வேண்டும் என்றபாணியில் பேசினார்.

இது இந்தியாவின் எல்லை தாண்டிய பேரின வாதத்தின் உச்சக் கட்டம். இலங்கையில் தமிழர்கள் தனி நாடு அமைத்தாலோ அல்லது அதிக உரிமை பெற்றாலோ அது தனது நாட்டை இறுகிய பிடிக்குள் வைத்திருக்கும் இந்தியப் பேரினவாதத்திற்கு ஒரு அச்சுறுத்தலாக அமையும் என்று இந்திய அரசு உறுதியாக நம்புகிறது.

இலங்கையில் தமிழர்கள் உரிமை பெற்றால் தமிழர்கள் மட்டுமல்ல மற்ற மாநிலங்களும் அதிக அதிகாரம் கேட்கக் கூடும் என்று இந்தியப் பேரினவாதிகள் அஞ்சுகிறார்கள்.

இந்திய அரசியலமைப்பை வரைந்த அம்பேத்கார் அவர்கள் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்க விரும்பினார். ஆனால் உலக வரலாற்றில் மிக மோசமான பேரினவாதியான ஜவகர்லால் நேரு அதை எதிர்த்தார்

இலங்கை பிரித்தானியக் காலனித்துவ ஆட்சியில் இருந்து விடுபட்ட பின்னர் தமிழர்களை தமிழ் அரசியல் கட்சியான தமிழ் காங்கிரசுக் கட்சியின் தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் ஒன்றிணைக்க முற்பட்டார்.

அவர் தனது காங்கிரசையும் இந்தியாவிலிருந்து வந்து இலங்கையில் வாழ்ந்த தமிழர்களின் தலைவராக இருந்த ஆறுமுகம் தொண்டமான் தலைமையில் இயங்கிய தோட்டத் தொழிலாளர் காங்கிரசையும் ஒன்றிணைக்க முற்பட்டார்.

இதற்காக ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் எஸ் தொண்டமானைச் சந்தித்து உரையாடினார். தொண்டமான் இது தொடர்பாக அப்போது இந்தியப் பிரதமராக இருந்த ஜவகர்லால் நேரு அவர்களிடம் ஆலோசனை கேட்டார்.

பேரினவாதியான நேரு, தொண்டமானைப் பெரும்பான்மை சமூகத்துடன் ஒத்துழக்குமாறு பணித்தார். தொண்டமானும் அதன் படியே செய்தார். ஆனால் சிங்களப் பேரினவாதிகள் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமையைப் பறித்த போது தொண்டமான் நேருவிடம் முறையிட்டார். நேரு இது உள்நாட்டு விவகாரம் என்று பகிரங்கமாகச் சொல்லித் தட்டிக் கழித்தார்

1983இற்குப் பின்னர் இந்தியா தான் தமிழர்களின் நண்பனாக நடித்து தமிழர்களை ஆயுத பாணிகளாக்கி அவர்களைச் சிங்களவர்களுடன் மோதவிட்டு இலங்கையை அமெரிக்கா சார்பாகச் செல்லவிடாமல் தடுக்க முற்பட்டது.

1987இல் இலங்கைப் பிரச்சனைக்கு ஒரு தீர்வு என்ற பேச்சு வரும் போது இந்தியாவில் உள்ள அதிகாரப் பரவாலாக்கத்திலும் கூடுதலாக எதையும் இலங்கையில் செய்ய முடியாது என்று ராஜீவ் காந்தி(கான்) பகிரங்கமாகவே கூறினார்.

இவை யாவும் இந்தியப் பேரினவாதம் எல்லை தாண்டி வந்து இலங்கையிலும் பேரினவாத ஆட்சியே நடக்க வேண்டும் என்ற ஒரு நிலைப்பாட்டை எடுத்தது என்பதற்கு உள்ள ஆதாரங்கள் பலவற்றில் சில. அதற்காக இலங்கையில் தமிழர்களின் ஆயுத போராட்டத்தை ஒடுக்க சீனாவிற்கு சில விட்டுக் கொடுப்புகளை இந்திய செய்து கொண்டு வருகிறது.

இந்தியக் கொள்கை வகுப்பாளர்களும் ஆட்சியாளர்களும் இந்தியாவின் பிராந்திய நலன்களைக் கூட இதற்ககாகப் பலியிட்டனர்.

1980களில் திருகோணமலைத் துறை முகத்தில் எண்ணெய் மீள் நிரப்பு வசதிகளை அமெரிக்கா செய்ய முற்பட்ட போது ஆத்திரம் கொண்டெழுந்த இந்திய அரசு அம்பாந்தோட்டையில் சீனா துறை முகம் அமைப்பதை அனுமதித்தது எப்படி? தமிழர்களுக்கு எதிராக சீனாவுடன் இந்தியா திரைமறைவில் கைகோத்துக் கொண்டதா? 1987இல் செய்யப்பட்ட ராஜீவ்-ஜே ஆர் ஒப்பந்தத்திற்குப் பிறகு இந்திய இலங்கை உறவு தமிழர்களை அடிமைப்படுத்துவதிலேயே முனைப்புக் காட்டியது

எல்லை தாண்டிய இந்தியப் பேரினவாதம் சிங்களவர்களுக்கு தமிழர்கள் மீதான போரில் சாதகமான நிலையை ஏற்படுத்தி இப்போது தமிழர் நிலங்களில் தமிழர்களை அபகரிக்கும் சிங்களப் பேரினவாதத்திற்கு துணை நின்று தமிழர் நிலங்களில் தமிழர்களைச் சிறுபானமையினராக்கி அவர்களை நிரந்தர அடிமைகளாக்க முயல்கிறது.

தமிழர்களின் தீரமிக்க எழுச்சியால் கதிகலங்கிப் போயிருந்த சிங்களப் பேரினவாதம் சிங்களப் பேரினவாதத்திற்ர்கு இந்தியப் பேரினவாதம் கைகொடுத்து உதவி வருகிறது. இந்திய எல்லை தாண்டிய பேரினவாதத்தின் உதவியுடன் இப்போது சிங்களப் பேரினவாதம் எல்லை மீறி நிற்கிறது.

இப்போதும் இத்தனை அழிவுகளுக்குத் தமிழர்களை உள்ளாக்கிய பின்னும் இந்தியப் பேரினவாதம் தனது சில்லறைக் கைக்கூலிகள் மூலம் தமிழர்களுக்கு இந்தியாவை விட்டால் வேறு கதி இல்லை இன்று போதிக்க முயல்கிறது.

தமிழர்கள் தங்களது பாரம்பரிய நண்பனாகக் கருதி வந்த இந்தியாவை இனியும் நம்பாமல் மாற்றி யோசிக்க வேண்டிய காலம் இது.

*- வேல் தர்மா*

தூங்காதிரு

துணிந்து செல்

வேங்கையாக எழு

வெற்றி ஒன்றைப்

பெறு

OPINION

# Tamils for Labour......Real Buffoons!

**By Periasamy Kanthavel**

Buffoons, jesters, 'jokesters', fools, wit-crackers are persons generally employed to tell jokes and provide general entertainment. But our, non-hat wearing professionals and their followers, sporting spotless matching suits are real dangerous guys.

They faithfully carried out their master's dictates with real sincerity and enthusiasm. The task given was to 'alienate the expatriates from the LTTE and of course the Tamils National Flag, popularly known as the Tiger Flag. This exercise was only a part of the grand plan of the Imperialist Forces led by the British government viz. "the demise of LTTE".

## The International Crisis Group (ICG)

This is an international, non-profit, non-governmental organization whose mission is to prevent and resolve deadly conflicts around the world. It is generally recognised as the world's leading independent, non-partisan, source of analysis and advice to governments, and intergovernmental bodies like the United Nations on the prevention and resolution of deadly conflicts.

The very popular website, Tamilnation.org, now not existing and badly missed by many, 'let the cat out of the bag' by raising the important and timely doubt; "A question that will arise in many minds is whether the International Crisis Group is concerned simply to work 'through field-based analysis and high-level advocacy to prevent and resolve deadly conflict' or whether the Crisis Group is in truth a track 2 level Western intervention directed to secure the foreign policy objectives of the West in relation to conflicts". What a great person is Mr. Nadesan Sathiendra!

## Political Space for non-Tiger political Voices.

The International Crisis Group was only founded in 1995. Nevertheless, this eight years old prestigious group of greats, turned its attention to our problem, generally referred to as 'ethnic conflict'. Thereof, under the caption, "Sri Lanka's Return to War; Limiting the Damage", the ICG released the Asia Report No 146 of 20 February 2008.

Out of the 35 page report, there are some recommendations viz., 'the LTTE & the Tamil Diaspora'. Let me enumerate them for clarity, of course with some real comments.

1. "The tigers should be required to take some steps towards transformation, such moves may well require new leader, in part to encourage Prabhakaran's removal."

*The great learned veterans, champions of democracy and human rights should have the basic truth that the Tamils know to choose their leader, and that is their sacred right.*

2. "Western government's policies on Sri Lanka should consciously include attempts to open up political space within their Tamil communities for non-Tiger political voices".

*Non Tigers can join the Tamils once they stop their pranks like being informants. All Tamils are Tigers, they are always welcome.*

3. "So long as there is widespread support for separatism and militancy in the diaspora, peace in Sri Lanka will be hard to come by..."

*The Nanthikadal massacre, the subsequent treatment of Tamils, ethnic cleansing and destruction of the traditional values of Tamils have shown that cessation is the only possible result. Talking of militancy is now irrelevant.*

The rot started exactly on the 11th January 2007 at 7.30pm, at The Globe in Reading. The title of the program was; 'The Ethnic Minority Task-force Forum 2007 – Labour: the future for Britain'. That was a drama staged by Tamils for Labour, lead by Senthivel Kanthia directed by Keith Waz, Leicestershire MP, who has the reputation of doing anything for something. He was the Chair, on his right were Martin Salter MP Reading West, David Lammy MP, and on his left were Hilary Benn MP and our guy, Senthil. His face showed his determination to go ahead with the evil task, even he didn't bother about his tie knot. After some boring lousy speeches by the other guys, Keith Waz took a collection of questions. One of the questions, in fact the most important one as well planned was, " Can the British government support a group that uses suicide bombing to achieve their goal?". Our chap was asked to answer the question, he got up and said, "No, No". This guy should have known the basic thing that in politics there is no Yes and No.

Now it is well known that India and the UK governments cooked the plot and if one visualizes the Nanthikadal Massacre as a vehicle, say a new car, then the oil was these Buffoons among the British Tamil expatriates, with GTV as the hose.

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:
பிரித்தானியா
அ. இரவி - மணி - அகிலன்
மாதவன்

கனடா
தயா - அரவிந்தன் - சிந்து

பிரான்ஸ்
சிறி

ஜேர்மனி
சபேசன்

சுவிஸ்
சயந்தன்

பொறுப்பாசிரியர்
- கோபி -

மக்கள் தொடர்பு
சாரதா

விளம்பரம்
சோபனா

அச்சு
தர்சினி (கனடா) பானு

வடிவமைப்பு
மயூரன் - விஜி

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - மாயா

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி – நிர்வாகம்
பானு

வழங்கல்
உதயகுமார்-சிவா-பிரகாஸ்

உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
கனடா 416 613 2850

தொலைநகல் (Fax)
லண்டன் 020 7043 4312
கனடா 416 438 7855

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
ORU PAPER
G11 LOMBARD HOUSE
2 PURLEY WAY
CROYDON, CR0 3JP
மின்னஞ்சல்:
info@orupaper.com
இணையம்:
www.orupaper.com

*'Oru Paper' is a bi-lingual paper published from London by Orupaper Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*

# உலகத் தமிழர்களே ஒன்றுபடுவோம்

'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்றார் அப்பர் சுவாமிகள். பாரதியார் இவ்வாறு சொன்னார்.

'நமக்குத் தொழில் கவிதை
நாட்டிற்குழைத்தல்
இமைப்பொழுதும் சோராதிருத்தல்'

இவ் வரிகளுக்கு என் விளக்கம் அவசியமில்லை ஆனால் மேலும் ஒன்றை விளக்கவே இவ்வரிகளை எழுதினேன்.

என் கடமையை செய்கிறேன். புலம்பெயர் தமிழர் சமூகத்தில் நான் ஒருவன் எனக்கென்று அரசியல் உண்டு. சுதந்திரமாகவும் பகுத்தறிவாகவும் சிந்திக்கிற தகுதியுமுண்டு. யாரும் என்மேல் தம் கருத்தை ஏற்ற முடியாது. சிந்தனையில் மாற்றத்தை ஏற்படுத்தலாம். கார்ல் மார்க்ஸ், லெனின், மாசேதுங், பெரியார் ஆகியோர் அவ்வாறுதான் என் மீது மாற்றத்தை ஏற்படுத்தினர். சதா சிந்திப்பதன் ஊடாக அடுத்த அடியை எடுத்து வைக்கிறேன்.

என் பயணத்தில் இடர்கள் வருகிறபோது துக்கப்படுகிறேன் அது கட்டுக்கடங்காத கண்ணீர் பெருக்கமாகவும் இருக்கலாம். சிறு விம்மலுடன் தாண்டியும் போகலாம். வேதனை எவ்வாறு ஓர் உணர்வோ அவ்வாறே கோபமும். சிறுமை கண்ட போது பொங்குகிறேன். 'சீர்தூக்கிப்பார்த்துப் பொங்கு' என்றார் நண்பரொருவர். அப்படியெல்லாம் செய்ய முடியாது. அதனால் எதிரிகளை அதிகம் சம்பாதிக்கிறேன். அப்பொழுதெல்லாம் பாரதிதாசனின் வரியே என்னை ஆற்றுப்படுத்துகிறது.

' ஏற்ற செயல் செய்தற்கு
ஏன் அஞ்ச வேண்டும்'

இந்த வியாக்கியானம் எதற்கு என்றால் விமர்சனம் கண்டு யாரும் சுருங்கி விடாதீர்கள் உங்கள் முஷ்டிகளில் பலத்தைச் சேமிக்காதீர்கள். விமர்சனத்தை எதிர் கொள்ளுங்கள். நம்மூர்க் கவிஞர் வில்வரத்தினம் கூறியதுபோல

'எதையும் எதிர்கொள்
முகம் திருப்பாதே
மனம் சலிக்காதே'

என்பதை நெஞ்சுக்குள் எடுங்கள். உலகில் எவரும் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவர்கள் அல்லர். அதுவும் பொது வாழ்க்கைக்கு வந்த ஒருவருக்கான விமர்சனம் பொதுவான வழிகளின் ஊடாகவே ஊடகங்களின் ஊடாகவே வரும். அதற்காக மனஞ்சுருங்கி உடல் குறுகி முகம் கறுத்து போவதாக இருந்தால் பொது வாழ்க்கைக்கு வந்திருக்கவும் தேவையில்லை.

**சற்று மாறுதலுக்காக**

எழுதுவது: **சேயோன்**

இதன் பின்னணியிலிருந்து சுருக்கமாக சில குறிப்புக்களை பதிகின்றேன். மனிதன் என்பவன் சிந்திக்கும் விலங்கு. அரசியல் பிராணி என்ற கருத்துக்கள் உண்டு. ஒரு புறத்தில் இரண்டும் ஒன்றே. முதலில் மனிதனாக அடுத்து தமிழனாக அதையடுத்து ஈழத் தமிழனாக மேலிருந்து கீழ்நோக்கி நகர்கின்றேன். இறுதியில் ஊரானாக, உறவினனாக நண்பனாக மகனாக அப்பனாக சகோதரனாக துணைவனாக சுருங்கி விடுகிறேன். அவ்வப்பாத்திரங்களுக்கு ஏற்ற பணிகளும் உள்ளன. அவ்வப் பணிகளில் இயல்பான அளவில் நிறைவு காணலே இங்கு முக்கியம்.

இங்கு இப்பொழுது தமிழனாக ஈழத்துத் தமிழனாக எமக்கு விதிக்கப்பட்ட பணிகள் என்ன. புலம்பெயர் தேசத்தில் இருந்து நாம் ஆற்றக் கூடியது யாது? மீண்டும் மீண்டும் ஒப்பாரி எதற்கு? என்றாலும் ஒரு காலம் வரையில் ஒரு தலைமையும் கைகாட்ட ஒரு அமைப்பும் இருந்தது. காலால் இட்ட கடமையை தலையால் செய்தோம். இப்போது நிர்க்கதியானோம். இனி நாங்களாகச் சிந்தித்து, நாங்களாக அமைப்பாகி அடுத்த கட்டமென்ன என்ன என்று ஆய்வு செய்யவேண்டும். அதைநோக்கி நகர வேண்டும்.

ஆயுதப் போராட்டம் அது இது என்று கதைத்தால் அது பொய்க்கதை. இப்போதைக்கு அது இல்லை இருக்கிறதென்றாலும் அது தாயகத்திலேயே தான் உருவாக வேண்டும். புலம்பெயர் தேசத்தில் யாராவது ஆயுதப் போராட்டம் அது இது என்று கதைத்தால் அது உங்கள் மடியிலுள்ள பணத்தைக் குறிவைக்கிறார் என்று அர்த்தம். இப்போது எம்முன் பரந்து விரிந்து கிடக்கிற பணி ஒன்று தான். எமது தேச விடுதலைத் தீயை அணைய விடாது காக்க வேண்டும். அதை அணைப்பதற்கு சிங்களம் முயலும் ஆனால் அதனால் முடியாது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முதலான போலி அமைப்புக்களே அதனைச் செய்யும். அவற்றினால் தான் அது இயலும்.

இலங்கைத் தீவில் சிங்களத்துடன் சேர்ந்து வாழ முடியாது. சிங்களம் ஒருபோதும் உரிமையை தரப் போவதில்லை, இறைமையை ஒருபோதும் அங்கீகரிக்கப் போவதில்லை. எமக்கான உணவை நாம்தான் உண்ண வேண்டும். எமக்கான உரிமையை நாம் தான் எடுக்க வேண்டும். இந்த இடத்தில் உலகத் தமிழர் அனைவரும் ஒன்றுபட வேண்டும் ஒருமித்த கருத்தைக் கொள்ள வேண்டும். புலம்பெயர் தேசங்களிலும் தாய்த்தமிழகத்திலும் சிங்கப்பூர், மலேசியா என்ற தேசங்களிலும் வாழும் தமிழர் அனைவரும் ஒன்று திரள வேண்டும். ஓங்கி ஒருமித்துக் குரல் கொடுக்க வேண்டும். தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் நம்மை ஆபத்துச் சூழ்கிறது. தமிழீழ தேசம் சிங்களத்தால் கபளீகரம் செய்யப்படுகிறது தமிழ்ப் பண்பாடு சிங்களத்தால் சிதைக்கப்படுகிறது. தமிழர் நிலம் சிங்கள இராணுவ மயப்படுகிறது. தமிழர்களுக்கென்றொரு பொருளாதாரம் இல்லாமல் ஆக்கப்படுபடுகிறது. உலகத் தமிழர்களே மினைக்கெட இனி ஒரு சொட்டு நேரம் இல்லை

நெடுமாறன் ஐயா, வை.கோ அண்ணா நீங்களும் உங்களைப் போன்றவர்களும் ஈழத் தமிழர்களுக்காக ஆற்றிய பணி ஆயிரம். ஆனால் இன்னும் ஆற்றவேண்டிய பணிகள் நூறாயிரம். ஐந்தாம் கட்ட ஈழப்போர் வெடிக்கும் அவர் வருவார் இவர் வருவார் என்ற கதைகள் எல்லாம் வேண்டாம். அதை இனிக்கேட்கவும் நம்பவும் எவரும் இல்லை. நீங்கள் ஈழத் தமிழர்களுக்கு ஏதாவது செய்ய விரும்பினால் முதலில் உலகத் தமிழர்களை ஒன்று கூட்டுங்கள். அடுத்தது என்ன செய்வது என்று ஆலோசியுங்கள் நாங்களும் பின்னால் வருவோம் இப்பொழுது யாவருக்காகவும் காத்திருக்கிறோம்.

இது வெறுங்காத்திருப்பு அல்ல. உள்ளத்தில் விடுதலைத் தீயை ஏந்தி வைத்தபடி நம்பிக்கை ஒளியை கண்ணில் நிறைத்தபடி காத்திருக்கிறோம். கைவிடாதீர்கள். தமிழர்களுக்கென்று ஒரு நாடு இல்லையென்றால் தமிழ் மொழியும் இல்லை. அதி விரைவில் அழிந்து விடும். கடைசிக் காலத்தின் முதற்படியில் நிற்கிறோம். கவனியுங்கள்.

# ஓரேயொருவரை சந்திக்க மறுக்காதீர்கள்!

ஒரு வாழ்க்கையில் ஒரு முறையாவது சிலரை சந்தித்து விட வேண்டும் என்கிற எண்ணம் நம்மில் பலருக்கும் இருக்கும். அப்படி சந்திக்க விரும்பும் நபர்கள் அவரவர் தன்மையைப் பொருத்து இருக்கும். சிலர் தங்களுக்குப் பிடித்த சினிமா நடிகர், நடிகையரை ஒரு முறையாவது சந்தித்து விட வேண்டும் என்று விரும்புவார்கள். சிலர் விளையாட்டு வீரர்களை சந்திக்க ஆசைப்படுவார்கள். சிலர் மகான்களையும், சிலர் பிரபலங்களையும் சந்திப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டுவார்கள்.

ஆனால் சந்தித்தே ஆக வேண்டிய ஒரு நபரை மட்டும் சந்திக்க யாரிடமும் பெரிய ஆர்வம் இருப்பதில்லை. இன்னும் சொல்லப் போனால் அவர் எல்லோராலும் எப்போதும் தவிர்க்கவே படுகிறார். ஒரு வேளை அவரை நேருக்கு நேர் சந்திக்க வேண்டிய நிர்ப்பந்தங்கள் வருமானால் அச்சமயங்களில் உடனே வேகமாக விலகி ஓடி ஒளிந்து கொள்கிறார்கள். அப்படி ஒரு நபரே இல்லை என்பது போல வேறு யாரையாவது பார்க்க விரைகிறார்கள். அந்த ஒருவரை சந்திப்பதைப் போல மிகக் கசப்பான அனுபவம் இல்லை என்கிற அளவு தப்பியோட பல வழிகளைத் தேடுகிறார்கள். வெகு சொற்பமான விதிவிலக்குகளைத் தவிர இது நம் எல்லோராலும் செய்யப்படுவது தான். அந்த நபரை நாமும் பார்ப்பதில்லை. அவரை மற்றவர்கள் பார்க்க அனுமதிப்பதுமில்லை.

யாரந்த நபர்? நீங்கள் சந்தித்தே ஆக வேண்டியிருந்தாலும் எப்போதும் உங்களால் தவிர்க்கப்படும் அந்த நபர் யார்? அது வேறு யாருமல்ல நீங்கள் தான்! வெளிப்புறத்தில் எல்லோருக்கும் தெரியும் நீங்கள் அல்ல அது. யாராலும் முழுவதுமாகக் காண முடியாத உள்ளே இருக்கும் உண்மையான நீங்கள்!. வெளியே இப்படித் தெரிய வேண்டும். அப்படித் தெரிந்தால் தான் அழகு, மதிப்பு எல்லாம் என்று ஒரு தோற்றத்தை உருவாக்க ஆரம்பிக்கும் மனிதன் தன் சுயரூபத்தை கூடுமான அளவு அடுத்தவரிடமிருந்து மறைத்துக் கொள்ளப் பார்க்கிறான். நாளடைவில் அந்தத் தோற்றமே அவனுக்கு மிக முக்கியமானதாக மாறி விடுகிறது. உலகமும் அந்தத் தோற்றத்தையே பார்க்கிறது, விமர்சிக்கிறது, மதிப்பிடுகிறது. உள்ளே உள்ள நிஜம் கற்பனையால் கூட ஊகிக்க முடியாத அளவு ஆழமாக அமுக்கப்படுகிறது.

காலப்போக்கில் மனிதன் அந்தத் தோற்றத்தையே பிரதானப்படுத்துகிறான். அதையே வளர்த்துகிறான். அதையே மெருகூட்டுகிறான். அடுத்தவர்களை அதையே நிஜம் என்று நம்ப வைக்க முயற்சித்து வெற்றியும் பெறுகிறான். கடைசியில் தானும் அதையே நிஜம் என்று நம்ப முயற்சிக்கிறான். ஓரளவு வெற்றியும் பெறுகிறான். ஆனால் உள்ளே உள்ள நிஜத்திற்கும் வெளியே உள்ள தோற்றத்திற்கும் இடையே உள்ள தூரம் நீண்டு கொண்டே போகின்றது.

வெளியே புனித நூல்களை உதாரணம் காட்டி ஆன்மீகக் கடலில் ஆழ்த்தும் சில நபர்கள் உள்ளே சாரக்கடையில் ஊறிக் கிடக்கிறார்கள். வெளியே அன்பையும், கருணையையும் போதிக்கும் சிலர் உள்ளே கொடூரமாக இருக்கிறார்கள். நாகரிகத்தின் அடையாளமாக காணப்படும் எத்தனையோ பேர் உள்ளே அநாகரிகத்தின் உச்சமாக இருக்கிறார்கள். இந்த அளவுக்கு இல்லா விட்டாலும் ஒரு சில அபூர்வ விதிவிலக்குகள் தவிர எல்லாருமே ஓரளவாவது வெளித்தோற்றத்திற்கு எதிர்மறையான சிலவற்றையாவது உள்ளே மறைத்து வாழ்கிறார்கள்.

மற்றவரை பாதிக்காத தனது அந்தரங்கங்களைப் பிறரிடமிருந்து மறைப்பது அவரவர் உரிமை என்றே சொல்லலாம். ஆனால் உள்ளே உள்ள நிஜமான உங்களை நீங்களே அறியாமல் இருப்பது வடிகட்டிய முட்டாள்தனம்.

வெளித் தோற்றங்களால் இல்லாத ஒன்றை இருப்பதாகவும், இருக்கும் ஒன்றை இல்லாததாகவும் பிறரை நம்ப வைப்பது மிக சுலபம். ஆரம்பத்தில் பிறரை நம்ப வைக்க முயற்சிக்கும் ஒரு மனிதன் பின் தானே அதை நம்ப ஆரம்பிக்கும் போது உண்மையான மகிழ்ச்சியையும், மன நிறைவையும் இழக்க ஆரம்பிக்கிறான். ஏனென்றால் உண்மையான மகிழ்ச்சியும், மனநிறைவும் தன்னைத் தானே காண மறுக்கும் ஒரு மனிதனுக்கு, தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ளும் ஒரு மனிதனுக்கு ஒரு போதும் கிடைப்பதில்லை. ஏதோ ஒரு வெற்றிடத்தை அவனுக்குள் அவன் உணர ஆரம்பிப்பது அப்போது தான்.

பலர் அந்த வெற்றிடத்தைப் பணத்தால் நிரப்பப் பார்க்கிறார்கள், புகழால் நிரப்பப் பார்க்கிறார்கள், போதையால் நிரப்பப் பார்க்கிறார்கள், அடுத்தவர்களை முந்துவதால் நிரப்பப்பார்க்கிறார்கள். ஆனால் அவ்வப்போது நிரம்புவது போல் தோன்றும் அந்த வெற்றிடம் மிகக் குறுகிய காலத்தில் மீண்டும் வெற்றிடமாகவே மாறி நிற்கும்.

எனவே உங்களுக்குள் இருக்கும் அந்த நிஜமான 'உங்களை' அடிக்கடி சந்திக்க மறுக்காதீர்கள். அந்த சந்திப்பு எவ்வளவு கசப்பான அனுபவமாக இருந்தாலும் அதைக் கண்டிப்பாகச் செய்யுங்கள். உள்ளதை உள்ளபடி காண்பதில் உறுதியாய் இருங்கள். அங்கே ஏராளமான பலவீனங்கள் இருக்கலாம். பெருமைப்பட முடியாத பல விஷயங்கள் இருக்கலாம். ஆனால் அவற்றை எல்லாம் தயங்காமல் கவனியுங்கள். இருப்பதை இருக்கிறது என்று ஏற்றுக் கொள்ளுங்கள். ஏனிருக்கிறது, எப்படி உருவாயிற்று, அதை எப்படி வளர்த்தோம் என்றெல்லாம் ஆழமாகச் சிந்தியுங்கள். உள்ளதென்று உணர்வதை நம்மால் எப்போதுமே மாற்றிக் கொள்ள முடியும். ஆழமான, நேர்மையான சுய பரிசோதனையால் எதையும் அறியவும் முடியும். அறிய முடியுமானால் அந்த அறிவு மாறுவது எப்படி என்ற வழியும் தெரியும். ஆனால் இல்லை என்று நினைத்து விட்டால் மாறுதல் என்றுமே சாத்தியமில்லை.

வெளியே காட்டிக்கொள்ளும் தோற்றத்திற்கும், உள்ளே இருக்கும் நிஜத்திற்கும் இடையே உள்ள தூரம் குறையக் குறைய தான் மனிதன் உயர ஆரம்பிக்கிறான். உண்மையான மன நிறைவை உணர ஆரம்பிக்கின்றான். நடிக்க வேண்டிய அவசியமே இல்லாமல் போகும் போது அவன் உணரும் அமைதியே அலாதியானது. ஆனால் இதற்கெல்லாம் உள்ளே உள்ள நிஜம் அடிக்கடி சந்திக்கப்பட வேண்டும், சிந்திக்கப்பட வேண்டும். அதை மறுப்பதும், தவிர்ப்பதும், மறப்பதும் வாழ்க்கையை என்றும் அதிருப்தியாகவும், துக்ககரமாகவுமே வைத்திருக்கும்.

*- என். கணேசன்*

# தாயக, புலம்பெயர் தமிழ் மக்களை குறி வைக்கும் சூழ்நிலைக் கைதிகள்



போராளிகளின் விடுதலைக்காகப் போராடுவதாகக் கூறிக் கொள்ளும் அபிவிருத்திச் சங்கங்களுக்கு, புதிய தலைவிதி ஒன்று புகுந்துள்ளது.

புனர்வாழ்வு பெற்று விடுவிக்கப்பட்ட விடுதலைப்புலி உறுப்பினர்களும், அதன் ஆதரவாளர்களும் நெடுந்தீவு, பருத்தித்துறை, கிளிநொச்சி, மன்னார், மற்றும் யாழ்நகரப் பகுதிகளில் மீண்டும் அரசபடைகளால் கைது செய்யப்பட்ட விவகாரமே அது.

சரணடைந்தவர்களைக் கொன்ற சிங்கள ஆட்சியாளர்கள், இதைவிட புதிதாக எதனையும் செய்முற்பட மாட்டார்களென்பது வெளிப்படையானது.

சாந்தபுரத்திலிருந்து துரத்தியடிக்கப்பட்ட மக்கள், பெரும் போராட்டத்தின் பின்னரே அங்கு மீள் குடியேற்ற அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

ஆனாலும் சூழ்நிலைக் கைதிகள், அபிவிருத்தியில் ஈடுபடும் விந்தை, இலங்கையில் மட்டும் நடைபெறுகிறது.

அதைவிட சின்னத்திரை தொடர் போன்று, நேர்காணல்களை வழங்கும் விசித்திரமும், பேரினவாத ஜனநாயகத்தில் மட்டுமே காணக்கூடியதாகவிருக்கிறது. இதற்கெல்லாம் தீவிர விசாரணைகள் தேவையில்லை. இத்தகைய வெள்ளிடைமலை விவகாரங்கள், சிங்களத்தின் அரசியல் இராஜதந்திர சூட்சுமத்தை தெளிவாகக் காட்டுகிறது.

இந்த சுத்திரக் கைதிகளின் அரசியல் அறிவுரைகள், சிங்களத்தின் சிறைக்குள் இருந்து வருவதால் மக்கள் இது குறித்து பெரிதாக அலட்டிக் கொள்ளத் தெவையில்லை.

23 வருட காலமாக, இயன் பொத்தாவின் நிறவெறிச் சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த, தென்னாபிரிக்க விடுதலைப் போராட்ட தலைவன், தோழர் நெல்சன் மண்டேலா அவர்கள், ஒடுக்குமுறையாளனுடன் கருத்துச் சமரசம் செய்து, அடிபணிவு அரசியலிற்குள் வீழ்ந்து விடவில்லை.

ஒடுக்குமுறை திணிக்கும் அவல வாழ்வுச்சூழலுக்குள் சிக்கித் தவிக்கும் தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் உரிமை குறித்து இந்த சமரசக் கைதிகள் பேசமாட்டார்கள் என்று தெரிந்திருந்தும், அவர்களை நியாயப்படுத்துவது போல் பேசுவது ஆச்சரியமாக இருக்கிறது.

குடும்ப ஆட்சியை வலுப்படுத்தும், சர்வாதிகார சட்டங்கள், தமிழ் மக்கள் மீது செலுத்தவிருக்கும் ஒடுக்குமுறை குறித்து பேசுவோம், விசாரணை செய்வோம். மகிந்த பலதடவை ஆட்சி செய்வாரா அல்லது மூன்று மாதத்திற்கொருமுறை நாடாளுமன்றில் பிரசன்னமாவாரா என்பதல்ல தமிழ் மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினை?

கோத்தபாயவுடன் கைகுலுக்கிக் கொண்டால், போராளிகள் விடுதலையடைந்து விடுவார்கள் என்கிற நம்பிக்கைதான் வாழ்வு என்பதல்ல தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு?

சாத்தியப்படாத விடயங்களுக்கு, மனிதாபிமான நியாயங்களைக் கற்பிக்கும், பிற்போக்குத் தனமான பார்வைக் கோளாறு குறித்து தமிழ் மக்கள் தெளிவாக உள்ளார்கள்.

வரலாற்றுப் பட்டறிவிலிருந்து கற்றுக் கொண்ட பாடங்கள் இவை.

அற்புத விளக்கை வைத்திருக்கும் அலாவுதீன் என்கிற மகிந்த சகோதரர்கள் மூடியைத் திறந்தால், பேரினவாதப் பூதமே வெளிக் கிளம்பும்.

சிவப்புச் சீனர்கள், வன்னியில் என்ன செய்கிறார்கள் என்பது இந்த சூழ்நிலைக் கைதிகளுக்குத் தெரியாது. வடகிழக்கு கரையோரங்களில், பல கடற்படை முகாம்களை அமைக்கும் அண்ணன் கோத்தபாயவின் இராணுவச் சூத்திரங்களான, கைகுலுக்கும் தம்பிமாரும் புரிந்து கொள்ள மாட்டார்கள்.

கடந்த ஓராண்டில், 20 இலட்சம் உல்லாசப் பயணிகள் யாழ்குடாவிற்குச் சென்று, அங்குள்ள மக்களின் பொருளாதார வாழ்வில் விளக்கேற்றியதாக, இலங்கை அமைச்சர் கூறும் நச்சுக் கருத்துக்கள், குடாநாடு, சிங்கள மயமாகிய பிறகுதான் இவர்களுக்கு புரியப் போகிறது.

யாழ்குடாவில், அபிவிருத்திக் கூட்டங்களை நிருபமாராவ் நடாத்தும்போது, பங்களாதேஷ் விஜயத்தை முடித்துக்கொண்டு இலங்கைவந்த யூனான் மாநிலத்து 200 செஞ்சீனர்கள், கொழும்புத் துறைமுக அபிவிருத்தி ஒப்பந்தம் போட்டதை சூழ்நிலைக் கைதிக்கு அரசியல் அந்தஸ்து வாங்க முற்படுவோர் மறந்து விட்டார்கள்.

## அரசியல் அலசல்

**இதயச்சந்திரன்**

தற்போது போராளிகளைப் பார்வையிட அனுமதி மறுக்கப்பட்ட அனைத்துலக மன்னிப்புச்சபை, மனித உரிமைக் கண்காணிப்பகம் போன்ற உலக அமைப்புக்களை, நல்லிணக்க ஆணைக்குழு முன்பாக சாட்சியமளிக்க சிங்களம் அழைப்பு விடுத்துள்ளது.

அனைத்துலக அரச சார்பற்ற தொண்டர் அமைப்புக்களும், இடம்பெயர்ந்த மக்கள் மற்றும் சிறையிலிருக்கும் போராளிகளுக்கான புனர்வாழ்வுப் பணியை மேற்கொள்ள முனைகின்றன.

ஆனாலும் போர்க் குற்றச்சாட்டிற்கு உள்ளான சிங்கள தேசம், இதனை மறுப்பதன் சூத்திரம் என்னவென்பதை புரிந்து கொள்வது கடினமாவதல்ல.

தனது கட்டுப்பாட்டிலுள்ள சூழ்நிலைக் கைதிகளை முன்னிலைப்படுத்தி, இத்தகைய இக்கட்டான சூழலை தவிர்த்துக் கொள்ள சிங்களம் விரும்புகிறது. அதேவேளை தருஸ்மான் தலைமையில் அமைக்கப்பட்ட ஐநா சபையின் போர்க்குற்ற விசாரணைக்கான ஆணைக்குழு, தனக்குத்தானே விதித்த நான்கு மாதகால அவகாசத்தை மறந்து, தூங்கிக் கொண்டிருப்பதை நினைவு படுத்த வேண்டியுள்ளது.

இலங்கை சூடான், கொங்கோ போன்ற போர்க் குற்றம் நிகழ்ந்தேறிய நாடுகள் குறித்து, பொதுச் செயலாளர் பான் கீ மூன் அக்கறையற்று இருப்பதாக இன்னர் சிற்றி பிரஸ் கூறுவதையும் நோக்க வேண்டும்.

பிரித்தானிய நாடாளுமன்றில், போராளிகளின் விடுதலை பற்றிப் பேசப்பட்டவுடன், மனநிறைவு கொண்டு அவர்கள் எல்லாவற்றையும் செய்வார்களென்று புலம்பெயர் மக்கள் மௌனம் காக்க முடியாது. முள்ளிவாய்க்காலில் ஆயுதப் போராட்டந்தான் மௌனிக்கப்பட்டது. புலம்பெயர் நாடுகளில் முன்னெடுக்கப்பட வேண்டிய போராட்டங்கள் மௌனிக்கப்படக் கூடாது என்பதை நினைவூட்ட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

பான் கீ மூனின் மௌனம், இரண்டாவது தடவையாகவும், பொதுச் செயலாளர் பதவியை நோக்கியதாக அமைவது போல் உள்ளது.

18வது திருத்தச் சட்டம் குறித்து, விசனமடைந்துள்ள அமெரிக்க தேசம், பான் கீ மூனின் மௌனத்தை ஏன் கலைக்க முற்படவில்லையென்கிற கேள்வி எழுகிறது.

ஆனாலும் அமெரிக்க மௌனத்தை குலைக்கும் ஆயுதம் இந்தியாவிடம் இருப்பது போல் தெரிகிறது.

இலங்கை நிலவரம் குறித்து, அறிக்கை ஒன்றினை வழங்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம், ஆசிய அரசியலில் சீனாவின் காலூன்றலால் அதிர்ச்சியுற்று, புதிய பாதையொன்றை தேர்ந்தெடுக்கிறது என்று நம்பலாம்.

சமாதான காலத்தில், எரிக் சொல்ஹெய்ம் ஊடாக இந்திய உறவை வளர்த்த அமெரிக்கா, இன்று நோர்வேயின் பங்களிப்பு விலக்கப்பட்ட நிலையில் நேரடியாகவே களத்தில் குதித்துள்ளது.

ஆனாலும் மகிந்தரின் தூதுவர்கள் எரிக் சொல்ஹெய்மை சந்திப்பதாக வரும் செய்திகள், அமெரிக்காவின் நிலைப்பாட்டில் மாற்றங்களைக் கொண்டுவரப்போவதில்லை.

தற்போதைய புவிசார் அரசியல் சூழலில், இச்சந்திப்புக்கள் முக்கியத்துவம் வாய்ந்தவையல்ல என்பதை இவர்கள் புரிந்து கொள்ளாமல், தமது சுய அரசியல் ஆளுமையை விருத்தி செய்வதற்கு மட்டுமே, இதனைப் பயன்படுத்துவதாக எண்ண இடமுண்டு.

குடும்ப ஆட்சியை உறுதிப் படுத்துவதற்கு, மகிந்த சகோதரர்கள் முன்னெடுக்கும் அரசியல் உத்திகளைப் போன்று தமிழ்த் தேசிய அரசியல் தளத்திலும் சில காய் நகர்த்தல்களை மேற்கொள்ள சிலர் எத்தனிக்கின்றார்கள்.

அதே வேளை இன்னமும் எத்தனை பியசேனாக்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினுள் பதுக்கி இருக்கின்றார்களென்பது தெரியவில்லை.

பத்து, பன்னிரண்டு வருடங்களுக்கு இனி மகிந்தரை அசைக்க முடியாதென முடிவெடுத்துள்ள சிலர், எதிர்க் கட்சிகளிலிருந்து கட்சி தாவுவது தவிர்க்க முடியாததொரு நிகழ்வாக இருக்கப் போகிறது.

விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்று தவறென்று கூறுவதை திரைமறைவில் அரங்கேற்றாதவாறு, அதே வேளை மகிந்த சகோதரர்களுடன் சுமுகமான உறவையும் பேணியபடி, தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்ட அரசியல் தளத்தினைக் கைப்பற்ற சில அடிபணிவு சக்திகள் முயற்சிக்கின்றன.

குறுக்கு வழிகள் மிக நீளமானவை என்கிற அறிவியல் உண்மையை இவர்கள் விளங்கிக் கொள்ளவில்லை.

சிங்களத்தின் நீண்டகால ஒடுக்கு முறையில், அவலங்களை உள்வாங்கியிருக்கும் தமிழ் மக்கள், விடுதலை உணர்வை இழக்கவில்லை என்பதனைப் புரியாமல், வெட்டி ஓடும் அரசியல் ஊடாக, மக்களைத் தவறான திசையில் வழிநடாத்திச் செல்லலாமென கற்பிதம் கொள்கிறார்கள்.

விடுதலை உணர்வைச் சுமந்து நிற்கும் மக்கள், எதிர்ப்பரசியலையே முன்னெடுப்பார்கள் என்பதை இந்த ஏணிப்படி தேடியலைவோர் உணரவில்லை.

அரசியல் கைதிகள் மீது மக்கள் இரக்கம் கொள்வது இயல்பானது தான். கடந்த 17வருட காலமாக, விடுதலைப் புலிகள் என்கிற சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பல இளைஞர்கள், விசாரணையின்றி வாழுகிறார்கள்.

தம்மை விடுதலை செய்யக்கோரி, பல தடவைகள் சாகும் வரை உண்ணாவிரதமிருந்தார்கள். ஜனநாயக ஜாம்பவான்கள், பொய்வாக்குறுதிகளை அளித்து அதை தடுத்தார்கள்.

இவர்கள் அரசியல் கைதிகள். ஆனால் சூழ்நிலைக் கைதியென்றால் அது என்ன? எந்த விதமான வரையறைக்குள் அதை உள்ளடக்கலாமென்று தெரியவில்லை.

ஓரளவு சுதந்திரமான நடமாட்டத்திற்கு அனுமதிக்கப்பட்டவர்களை சூழ்நிலைக் கைதி என்று அழைப்பார்களோ !

சிறையில் இருக்கிறார் என்ற 'கழிவிரக்கம்' அவரின் அரசியல் பின்னணியை மறைத்து விடுமென சிங்களம் எண்ணுகிறதோ! ஆனால் நேர்காணல் வழங்கும், சங்கங்களை இயக்கும், நடமாடும், ஒரு மனிதரை 'கைதி' என்று கூட அடையாளப்படுத்த முடியாது.

மாற்றம் ஒன்று
வரும்
மானிடர் நாம்
வெல்வோம்
ஏற்ற காரியம்
ஒன்று செய்தால்
ஏலும்
அம் மாற்றம்

ஒரு பேப்பர்
ORU PAPER



www.gold-factory.co.uk.
GOLD FACTORY
Importers & Manufatures of 22ct Gold jewellery
Visit us for the latest designs and best prices in 22ct gold and Diamond Jewellery
22ct gold jewellery sold at the best prices WE BUY GOLD for CASH
We LOAN cash against GOLD for small interest rates
All types of jewellery made and repairing.
Importers and exporters of gold and diamond jewellery.
No VAT for overseas visitors
பழைய தங்கம் நியாயமான விலைக்கு வாங்கப்படும் பழைய தங்கத்திற்க்கு புதிய தங்கம் கொடுக்கப்படும்
உடனடியாகப் பணம் தேவையா? சிறிது வட்டியுடன் உங்கள் நகைக்கு ஈடாகப் பணம் கொடுக்கப்படும்.
நகைகள் யாவும் திருத்தி அமைத்துக் கொடுக்கப்படும். அதிஷ்டக் கற்களை நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
Please come to us for all your jewellery requirement
Gold Factory Limited
149, The Broadway, SOUTHHALL, UB1 LP
Also at 294 Farnham Road, SLOUGH, SL1 4XL
Tel : 01753 536 800
மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:
TEL: 020 8813 8979

# மீண்டும் கடை விரிக்கும் சமாதான நிறுவனங்கள்

கோபி
ஒரு பேப்பர்

'போருக்கு பின்னரான காலத்தில், புனர் வாழ்வுப் பணிகளும் அபிவிருத்தியும், எதிர் நோக்கப்படும் சவால்களும் சந்தரப்பங்களும், அவற்றில் புலம் பெயர்ந்த சமூகங்களின் வகிபாகமும்' இது அண்மையில் லண்டனில் நடைபெற இருக்கும் கருத்தரங்கின் தலைப்பு. இக்கருத்தரங்கை ஜேர்மனியை தலைமை யகமாகக் கொண்ட Berghof Peace Support என்ற நிறுவனமும், நோர்வேயை தலைமையக மாகக் கொண்ட International Alert என்ற நிறுவ னமும் இணைந்து நடாத்துகின்றன. இது போன்ற இன்னொரு கருத்தரங்கை International Alert நிறுவனம் தனித்து பிறிதொரு தினத்தில் நடாத்துகின்றது.

மேற்படி இரண்டு நிறுவனங்களும் இன முரண்பாடுககளைக் களைவது தொடர்பில், சர்வதேச அளவில் செயற்படும் சமாதான நிறுவனங்கள். இவைபோன்ற இன்னொரு நிறுவனான International Working Group on Sri Lanka, கடந்த வருட இறுதியில் சூரிச் இல் தமிழ், முஸ்லீம் அரசியல் கட்சிகளின் பிரதிநிதி கள் கலந்து கொண்ட ஒரு மாநாட்டை நடாத்தி யிருந்தது.

சமாதான நிறுவனங்கள் (Peace Organisa tions) எனப்படுபவை, அடித்தள மக்கள் மத்தியில் இயங்குவையாகவும் (grassroot organisations) சிந்தனை மையங்களாகவும் (think tanks) இயங்குகின்றன. முரண்படும் தரப்புகளிடையே அனுசரணையாளர்களாக இவை செயற்படுகின்றன. இவற்றின் இயங் குகை சுயதீனமானதாக தெரிவிக்கப்பட்ட போதும், இவற்றிற்கான நிதி பெரும்பாலும் மேற்கத்தைய அரசுகளின் வெளியுறவுத் துறை யிலிருந்தே கிடைக்கிறது. தனியார் நிறுவன ங்களைப்போன்று வருமானம் ஈட்டக் கூடிய வேறு வழி வகைகள் இல்லாத நிலையில் இந் நிறுவனங்களின் செயற் திடடங்கள் அரச நிதியுதவியிலேயே தங்கியிருக்கின்றன. இன் னொரு புறத்தில் இவர்களது செயற்திட்டங்கள், நிதி வழங்கும் அரசுகளுக்கு ஏற்புடையதாக இருக்கும் பட்சத்தில் மாத்திரமே அவற்றிற் கான நிதியினை இவர்கள் பெற்றுக் கொள்ள முடியும். ஆகவே இந்நிறுவனங்களின் சுயா தீனத்தன்மை கேள்விக் குறியாகவே உள்ளது.

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங் கள் பிரித்தானியா, ஜேர்மனி, சுவிற்சலாந்து, ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே, சுவீடன் ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சகங் களிலிருந்து நிதியைப் பெற்றுக் கொள்கின் றன. ஆகையால் இந்நிறுவனங்களின் செயற் பாடுகளில் மேற்படி நாடுகளின் கொள்கை வகுப்பாளர்களின் கருத்து பிரதிபலிப்பதை அவதானிக்க முடியும். மறுபுறத்தில், கொள்கை வகுப்பாளர்கள் இவர்களது குறிப்புகளை பகிர்ந்து கொள்வார்கள் என எதிர்பார்க்க முடியும்.

இலங்கைத் தீவை மட்டும் கவனத்தில் எடுத்தால், சமாதான காலம் எனக் கருதப் பட்ட 2002-2007 காலப் பகுதியில், அங்கு ஒரு டசினுக்கு மேற்பட்ட வெளிநாட்டு சமாதான நிறுவனங்கள் செயற்பட்டு வந்தன. ஆய்வுகள், அறிக்கைகள், மாநாடுகள், வட்டமேசை, பட்டறைகள், வெளிநாட்டுப் பயணங்கள் என இவர்களது செயற்பாடுகள் நீண்டிருந்தன. இருப்பினும் ஒரு கொடூரமான யுத்தத்தையோ அழிவுகளையோ இவர்களால் தடுத்து நிறுத்த ஆவன செய்ய முடியாமல் போய்விட்டது என்ப தனை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**அதிகாரப்பகிர்வு பற்றியோ, சமஸ்டி பற்றியோ, ஏன் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் பற்றியோ இந்த சமாதான நிறுவனங்கள் பேசுவதனை நிறுத்திக் கொண்டன.**

இவர்களது செயற்பாடுகளையிட்டு இந் நிறுவனங்களுக்கு நிதியுதவிவழங்கியநாடுகள் திருப்தியடைந்தனவா அல்லது மேற்கொண்ட செயற் திட்டங்கள் மூலம் திரட்டப்பட்ட தகவல்கள் மேற்படி நாடுகளின் கொள்கை வகுப்பாளர்களுக்கு உதவியதா என்பது பற்றி அறிவது சுலபமானதல்ல.

மே பதினெட்டுக்கு முன்னர், இச்சமாதான நிறுவனங்களின் செயற்பாடுகள் இனங்களுக் கிடையிலான உறவை மேம்படுத்துவதனை குறிக்கோளாகக் கொண்டிருந்தன. இருப் பினும் அரசியல் உரிமைகள் விடயத்தில், அதிகாரப் பரவலாக்கம், சமஸ்டி முறையை ஏற்படுத்துதல், சுயாட்சி ஒழுங்குகள் பற்றிய விவாதங்களில் அவை ஈடுபட்டன. சில பரிந் துரைகளும் மேற்கொள்ளப்பட்டன. மேற்கு நாடுகளின் அரசாங்கங்கள் விடுதலைப் புலிகளை பயங்கரவாதப் பட்டியலில் இட்டு, அவர்களுடன் நேரடித் தொடர்பாடல்களை துண்டித்திருந்த போதிலும், அவர்களது நிதியில் இயங்கிய இச்சமாதான நிறுவனங்கள் விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளைப் பேணியதுடன், விடுதலைப் புலிகளின் முன் னணி அமைப்புகளுடன் வெளிப்படையாகவே இணைந்து செயற்பட்டன.

மறுபுறத்தில் சிறிலங்கா அரசாங்கத்துடனும் இந்நிறுவனங்கள் இறுக்கமான தொடர்பு களைப் பேணிவந்தன. இந்நிறுவனங்களால் வெளியிடப்படும் அறிக்கைகள் இரண்டு தரப் பினையும் சாடுவதாக அமைந்திருந்ததனால், நடுநிலைத்தன்மையைபேணுவதானதோற்றப் பாட்டை ஏற்படுத்தியிருந்தன. இவை தவிர, கொழும்பில் வசிக்கும் ஆங்கில அறிவுடைய மேட்டுக் குடியினர் இந்நிறுவனங்களில் பெருந்தொகை சம்பளத்தில் பணிபுரிந்தனர்.

போர் தீவிரமடைந்துவந்தகாலத்தில், இந்நிறு வனங்களின் பணி முடக்கப்பட்டு விட, அவை இலங்கைத் தீவிலிருந்து வெளியேறின அல்லது சிறிலங்கா அரசால் வெளியேற்றப்பட்டன. இவற்றுள் சில போருக்கு பின்னரான கால கட்டத்திலான செயற்பாடுகள் பற்றி அப்போதே சிந்திக்கத் தொடங்கிவிட்டன. இவற்றுள் முக்கிய மானது புலம் பெயர் மக்கள் பற்றியது, இலங்கைத் தீவிலிருந்து புலம் பெயர்ந்தவர் களை தமிழர்கள், சிங்களவர்கள் எனப் பிரித்துப் பார்க்காது, பொதுவான சிறிலங்கா அடை யாளத்துடன் இணைப்பது பற்றியது. 2008ம் ஆண்டு மலேசியாவில் பெரும் செலவில் நடாத்தப்பட்ட ஒரு மாநாடு, சிறிலங்கா அடை யாளத்தை பேணுவது தொடர்பானதாக அமைந்திருந்தது.

போர் முடிவுற்ற பின்னர் சமாதான நிறுவனங் களின் நடவடிக்கைகளிலும் மாற்றம் ஏற்பட ஆரம்பித்தன, முன்னரைப்போல், அதிகாரப் பகிர்வு பற்றியோ, சமஸ்டி பற்றியோ, ஏன் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் பற்றியோ இந்த சமாதான நிறுவனங்கள் பேசுவதனை நிறுத்திக் கொண்டன. தமிழ் மக்களால் வலி யுறுத்தப்படும் போர்க்குற்ற விசாரணைகளின் அவசியம் பற்றியும் இவர்கள் கவனத்தில் எடுப்பதில்லை. அங்கு இனப் படுகொலை நடைபெறுவதனையும் மறுதலித்து வரும் இந்நிறுவனங்கள் சிறிலங்கா அரசாங்கததை ஆத்திரப்படுத்த கூடாது என்பதில் கவனமாகச் செயற்படுகின்றன.

போருக்கு பின்னரான புனர்வாழ்வு, அபிவிருத்தி, ஒருமித்த இலங்கைக்குள் பொது இனத்துவ அடையாளத்தை ஏற்படுத்துதல், 'சிறுபான்மை' இனங்களுக்கிடையில் ஒரு பொது இணக்கப்பாட்டை ஏற்படுத்துதல் போன்ற விடயங்களில் மட்டும் இவை கவன த்தை செலுத்துகின்றன. இன்று இதனடிப் படையில் மட்டுமே இலங்கைத்தீவில் கால் பதிக்க முடியும் என்பதும் இத்தகைய அணுகு முறைக்கு காரணமாக அமையலாம்.

இனங்களுக்கிடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துதல் என்பது ஒன்றும் வெறுக்கத்தக்க விடயமில்லை. ஆனால் அவற்றிற்கு சம உரிமை வழங்கப்படாது, ஒன்று மற்றயதன் மீது தனது மேலாதிக்கத்தை நிறுவ முற்படும்போது இணக்கப்பாடு எந்த வகையிலும் சாத்தியப் படாது என்ற கற்றறிந்த பாடத்தை அலடசியம் செய்து விட்டு, நடவடிக்கைகளை மேற் கொள் வது இவர்களது நடவடிக்கையில் ஐயப்பாட்டை ஏற்படுத்துகின்றது.

சிறுபான்மை இனங்கள் என எண்ணிக்கை யின் அடிப்படையில் குறிப்பிடும் தமிழ் தேசிய இனத்தையும், இஸ்லாமிய சமூகங்களையும் 'தமிழ் பேசும் மக்கள்' என்ற அடிப்படையில் இணைப்பதும் சாத்தியமற்ற ஒரு நடவடிக்கை யாகவே அமையும். இது பிரித்தானியாவில் எண்ணிக்கையில் குறைந்தளவில் இருக்கும் வேல்ஸ் இன மக்களையும், ஸ்கொட்ஸ் இன மக்களையும், (இவர்கள் வெல்ஸ், கேலிக் ஆகிய மொழிகளை பூர்வீகமாகக் கொண்டவர் கள்) ஆங்கிலம் பேசும் மக்கள் என்ற வரை யறைக்குள் கொண்டு வருவதற்கு சமன னானது.

**சிறுபான்மை இனங்கள் என எண்ணிக்கையின் அடிப்படையில் குறிப்பிடும் தமிழ் தேசிய இனத்தையும், இஸ்லாமிய சமூகங்களையும் ?தமிழ் பேசும் மக்கள்? என்ற அடிப்படையில் இணைப்பதும் சாத்தியமற்ற ஒரு நடவடிக்கையாகவே அமையும்.**

பிரித்தானியாவில் இயங்கும் Minority Rights Group என்ற நிறுவனம் மத ரீதியான சிறுபான்மை இனங்கள் பற்றி அண்மையில் வெளியிட்ட அறிக்கையில், இலங்கை முஸ்லீம் கள் தாம் முன்பு வரித்துக் கொண்ட இந்திய உபகண்டத்திற்குரிய அடையாளங்களைத் துறந்து நாடு கடந்த பாரிய முஸ்லீம் சமூகத்தின் அங்கமாக தங்களை அடையாளப்படுத்தி வருகிறார்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் தமிழ் மக்களையும், முஸலீம் மக்களையும் தமிழ் பேசும் இனங்கள் என்ற தொகுதிக்குள் அடக்குவது சாத்தியமானதாக அமையாது.

இவற்றிற்கு அப்பால், கடந்த வாரம் சிறிலங் காப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 18வது திருத்தச் சட்டமூலம், சிறிலங்காவின் அரசியல் நிலையை இனங்களுக்கிடையிலான வேறுபாடுகளை வெளிக் காட்டுவதாகவே அமைந்துள்ளது.

அதிகாரப் பரவலாக்கம் இறங்கு நிலைக்கு சென்று, மத்தியில் அதிகாரத்தை குவிப்பதாக இத்திருத்தம் அமைந்துள்ளது. ஒரு சர்வாதி கார முறைமைக்கு இட்டுச் செல்லும் திருத்தங்களுக்கு குறிப்பிடத்தக்க எதிர்ப் பெதுவும் எழவில்லை. கல்விச் சமூகம், புத்தி சீவிகள், பல்வேறுபட்ட அரசியற் கட்சிகள் என்பனவற்றின் மௌனமான சம்மதத்துடனே யே இச்சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது.

மாகாண சபைகளிடமிருந்து காணி, காவற் துறை அதிகாரத்தைப் பறிக்கும் நடவடிக்கை க்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தவிர்ந்த சிறுபான்மையினரை பிரதிநிதித்துவப் படுத் தும் கட்சிகளும் ஆதரவளித்துள்ளன.

இந்நிலையில், தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள், அதிகாரப் பரவலாக்கம் பற்றிப் பேசாது, வெறுமனே புனர்வாழ்வு, அபிவிருத்தி ஆகியவற்றைப் பற்றி மட்டும் பேசுவது சிறிலங்கா அரசை திருப்திப்படுத்தும் முயற்சி யாகவே தெரிகிறது.. இம்முயற்சிகளுக்கு புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் ஆதரவளிக்க வேண்டும் என எதிர்பார்ப்பது அறத்திற்கு புறம்பான நடவடிக்கையாகவே அமையும்.





# என்ன சொல்ல வருகிறார் இந்த சேயோன்?

சகல குழப்பங்களாலும் தான் குழப்பியதையும், தெளிந்ததையும், குழம்புவதையும் ஏன் எங்களோடு பகிர்ந்து கொள்கிறார். நேரமும் இருந்து ஒரு ஊடகத்தில் தொடர்ந்து எழுதுவதால் மட்டும் ஒருவர் ஊடகவிலளாளராகி விட முடியாது.

ஊடகவியலாளருக்கென ஒரு நிதானம்.. பாலிலிருந்து தண்ணீரை பிரித்தெடுக்கும் தன்மை, எழுத்தாற்றல், விடயதானம், சிந்தனை திறன், புரிந்த மொழியில் பேசுதல் எனப்பல.. சேயோனுக்கு புரிந்த மொழியில் கேட்கிறேன்.

'கேட்கப்படாத கேள்விகள் மட்டுமே முட்டாள்தனமானவை, பதில் வருகிறதோ இல்லையோ கேட்க வேண்டும்' என்று கடந்த இதழில் எழுதியிருந்தீர்கள்' இப்போது கேட்கிறேன்..

கே.பி யையும், நெடியவனையும் ஒப்பீடு செய்ய வேண்டிய அவசியம் உங்களுக்கு இப்போது ஏன் ஏற்பட்டது? ஈழத்தமிழரின் அரசியல் அழிவுற்ற பின்னர்.. ஊடங்கங்கள் மாத்திரமே அனைத்து கருத்துக்களையும் பரிமாற்றம் செய்கின்றன என எழுதியிருந்தீர்கள்.. அரசியல் அழிந்துவிட்டது என்றால் இப்போ நடந்து கொண்டிருப்பது என்ன?...' இதுதான் வழி என்று கைகாட்ட ஒருவர் இருந்தார்.. கேள்விகள் கேட்காமல் பயணித்தது தவறு என்றாலும் ....' என எழுதியிருந்தீர்கள்..

கேள்வி கேட்காமல் நீங்கள் பயணித்திருக்கலாம்...அது தவறு என்று உங்களுக்கு இப்போது படலாம்..' ஆனால் மற்றவர்களும் அப்படித்தான் பயணித்தார்கள் என்று கூற முடியாது. கேட்டு, தெளிந்து இதுதான் ஒருவழி என்றுதான் பயணித்தோம்.. அது தவறு என்று நாம் இப்போதும் நினைக்கவில்லை. குழம்புபவர்கள் இருந்தால் குழப்புவர்களும் இருப்பார்கள்.

'நண்பர்கள் சிலர் பணியிடத்தலோ அல்லது (BAR) இலோ சந்திக்கின்றபோது இக்குழப்பங்கள் பற்றி தீவிரமாக விவாதிப்பார்கள், எனக்கும் இதற்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது என்று இவர்கள் கதையை காதில் எடுக்க மாட்டேன்.. ஒரு கருத்தும் கூறமாட்டேன் ' என்று எழுதிருயிருந்தீர்கள்..

இதில் எமக்கு என்ன சொல்ல வருகிறீர்கள்... உங்கள் நண்பர்கள் குழப்பியிருக்கிறார்கள் என்றா?.. அல்லது அவர்களின் குழப்பத்தை தெளிவிக்கும் பக்குவமும், ஆற்றலும் உங்களுக்கு இல்லை என்றா?.. அக்குழப்பங்களுக்கும் உங்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்றால்.. அதை உலகுக்கு (ஒரு பேப்பர் வாசகர்களுக்கு) ஏன் தெரிவிக்க வேண்டும்..

**உங்கள் அரசியல் ஆலோசனைகளையும், அப்பிராயங்களையும் எங்கள் முன் வைக்காதீர்கள்.... ஈழத் தமிழரின் அரசியல் அழிவுற்று விட்டது என நினைக்கும் உங்களைப் போன்றவர்களுக்கு.. அது விளங்காது**

உங்கள் நண்பர்களுக்கு பத்திரிகையினூடாக பதில் அளிக்கிறீகளா?.. எல்லாக் கேள்விகளையும் கேட்ட வேண்டும் பதில் வருகிறதோ, இல்லையோ கேட்க வேண்டும்.. என்று எழுதி விட்டு கருத்து கூறமாட்டேன்.. என்றும் சொல்கிறீகள்.. நாம்... மக்கள்... குழம்பவில்லை.. நீங்கள்தான் குழம்பியிருக்கிறீர்கள்.. உங்கள் எழுத்திலும் அது தெரிகின்றது .. முன்னுக்கு பின் முரணாக..

'மந்தை கூட்டங்களாக.. தலையை குனிந்தபடி.. புல்லை மேய்ந்தபடி.. முணுமுணுப்புக் காட்டாது.. நகர்கிறோம்... இவ்வளவு காலமும் அவ்வாறு இருந்தோம்.. சரி அதற்கு ஓர் அர்த்தம் இருந்தது.. இனியும் அப்படி இருக்கப் போகிறோமா?' என்று கேட்டிருந்தீகள்..

என்ன சொல்ல வருகிறீர்கள்.. தலையை குனிந்தபடி.. முணுமுணுப்புக் காட்டாது.. உங்கள் உதாரணங்கள் எங்கள் போராட்ட வரலாற்றில் சேறு பூசுவது போல் உள்ளது.

நாம் தலை நிமிர்ந்துதான் நின்றோம் நிற்போம்.. உங்களுக்கு வந்தது போல முணுமுணுப்பு வந்து அதைக் காட்டாது மறைத்து வைக்கவில்லை.. ஒவ்வொரு செயலையும் விரும்பி மனவிருப்போடுதான் செய்தோம்.

GTV நேயர்களை சாடியிருந்தீர்கள்.. தாம் நம்புவதை மட்டும் கொட்டுவதற்கான குப்பைக் கிடங்காக அதைப் பயன்படுத்துவதாகவும்.... தேடலையும் ஆராய்வையும் முன்னெடுப்பவர்கள் கதைக்காமல் தமக்குள் தாமே புளுங்கிக் கிடக்கின்றார்கள் என்று.. நீங்கள்? நம்புவதாகவும் எழுதியிருந்தீகள்....

யார் அவர்கள்? நீங்களும் அவர்களில் ஒருவரா? ஏன் GTV வில் புளுங்கிக் கிடப்பவர்கள் பேசினால் மாட்டேன் என்றா சொல்லப் போகிறார்கள்? அல்லது புளுங்கிக் கிடப்பவர்களுக்கு ஒரு பேப்பர் மூலம் உற்சாகம் கொடுக்க நினைக்கிறீர்களா?.. என்னதான் சொல்ல வருகிறீர்கள்?...

'நாம் இன்னென்றையும் செய்கிறோம்.. ஒற்றைத் தராசில் யாவற்றையும் நிறுத்து விட்டுப் போகிறோம்.. ஒற்றைச் சொல்லில் அனைத்தையும் நிராகரித்து விட்டு போகிறோம்.. நானும் அவ்வாறு இருந்தவன் என்ற ஆதங்கத்தில் இதனை எழுதுகிறேன். ஒற்றை தராசு ஒருபோதும் உண்மையை உரைக்காது' என்று எழுதியிருக்கிறீர்கள்..

எப்போது அப்படி இருந்தீர்கள்.. மே 18க்கு முன்பா? நான் ஒரு சமூகத்தின் குரல்.. நீதியின் குரல்.. உண்மையின் குரல்.. மனச்சாட்சியின் குரல்.. ஒரு உண்மையாக ஊடகவியலாளன் என்று தற்பெருமை பேசும் நீங்கள் ஏன் ஒற்றைத் தராசில் நிறுத்துக் கொண்டிருந்தீர்கள்?

அப்போது உங்களை யார் ஒற்றை தராசில் நிறுக்க சொன்னார்கள்? அப்போதும் பத்திரிகையில் சேயோன் என்ற பெயரில் எழுதிக் கொண்டு தானே இருந்தீர்கள்? இப்போது வாசகர்களான எமக்கு குழப்பமாக உள்ளது. இதில் எந்த சேயோன் உண்மையான ஊடகவியலாளர் என்று...

ஐயா.. சேயோன்.. அவர்களே.. நீங்கள் உங்களை எப்படியாவது அழைத்துக் கொள்ளுங்கள்.. ஆனால் தயது செய்து.. உங்கள் அரசியல் ஆலோசனைகளையும், அப்பிராயங்களையும் எங்கள் முன் வைக்காதீர்கள்.... ஈழத் தமிழரின் அரசியல் அழிவுற்று விட்டது என நினைக்கும் உங்களைப் போன்றவர்களுக்கு.. அது விளங்காது.... தயவு செய்து விட்டு விடுங்கள்.

உங்கள் காத்திரமில்லாத, தனியே உணர்ச்சியை மட்டும் கொட்டும் எழுத்திற்கு வேணுமென்றால் ஓர் உதாரணம் சொல்வேன்.

இந்த வருட மேமாத இதழில் அறியப்பட்ட மருத்துவர் ஒருவர் தான் இலங்கை அரசாங்கத்துடன் சேர்ந்துதான் எமது மக்களுக்கு பணி புரியப் போகிறேன் என்று சொன்னதற்கு 'அவர் உண்மையில் எமது மக்களுக்கு பணி புரியப் போகிறாரோ? அல்லது தனக்குத்தானே பணி புரியப் போகிறாரோ? டக்ளஸ், கருணா பணி புரிந்தால் போல' எனக் கேட்டிருந்தீர்கள்..

நெஞ்சில் வலிப்பதாகச் சொன்னீர்கள். இப்போ சிங்களத்தின் கைதியாக இருக்கும் கே.பி யின் பேட்டிகளை நிதானமாக வாசிக்க போவதாகவும், பகுத்தறிவின் துணையுடன் அவதானிக்கப் போவதாகவும், அவரை புரிந்து கொள்ள முயலுவதாகவும் எழுதியிருக்கிறீகள்.

இப்போ உங்களுக்கு நெஞ்சில் வலி ஏற்படவில்லையா? அல்லது ஏதும் செஞ்சோற்றுகடன் அந்த வலியைப் போக்கிவிட்டதா? உங்களுக்கு விரும்பியவர்ளை சாடுவதற்கும்.. மற்றவர்களுக்கு சாமரம் வீசுவதற்கும் ஒரு பேப்பர் ரை உங்கள் வீட்டுக் குப்பைத் தொட்டி போல் பாவிக்காதீர்கள். அதுவொரு ஊடகம்.

- சுந்தரி


Ariana Travel ® ARIANATRAVEL LTD

Book with us and travel with confidence!!!



- Flight Bookings
- Hotels Bookings
- Car Hirings
- Trains Bookings
- Ferry Booking
- Private Jet Charter
- Business Travel Insurance
- Travel Consultancy
- Passport & Visa Service
- Foreign Currency
- Flying Messenger
- Flight Status
- VIP Lounges
- Western Union

- Qatar Airways
- Emirates Aiways
- Virgin Atlantic
- Sri Lankan Airlines
- Air france
- Ariana Afghana Airlines
- Pamir Airways
- Safi Airways
- Kam Air many other Airlines

அழையுங்கள்..

IATA தரமான சேவையைப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்...!! ATOL PROTECTED

THORNTON HEATH BRANCH
No. 904, London Road,
Thornton Heath, CR7 7PE
Tel : 0208 683 6960
மேலதிக விபரங்களுக்கு ஷங்கரைத் தொடர்பு கொள்ளவும்.
Shankar@arianatravel.uk.com
book.cr@arianatravel.co.uk

Please call us for special fares to colombo

- FLY TO BANGKOK or SINGAPORE or KUALA LUMPUR with SRI LANKAN AIR LINES from GBP 320.00 PLUS TAXES
- FLY TO CHENNAI or MUMBAI or DELHI or THIRUVANANTHAPURAM or TIRUCHIRAPALLY with SRI LANKAN AIR LINES from GBP 320.00 PLUS TAXES

Branches in Southall, Hounslow & Birmingham

Valid for travel 15TH SEP 2010 TO 30TH NOV 2010, 30TH DEC 2010 TO 06TH APR 2011 & 24TH APR 2011 TO 30TH JUN 2011

FLY TO....

- COLOMBO with GULF AIR
GBP 418.00 All inclusive of taxes
TRAVEL BETWEEN 06TH OCT 2010 TILL 09TH DEC 2010

- BANGALORE with QATAR AIRWAYS
GBP 430.00 Inclusive of taxes
from MANCHESTER AIRPORT
16TH AUG - 09TH DEC 2010

- BANGKOK or HONGKONG with KINGFISHER AIRLINES
GBP 485.00 inclusive of all taxes
(Valid for travel 01ST OCT 2010 to 09TH DEC 2010 has to be ticketed by 30th SEP 2010)

PLEASE CALL US FOR THE LATEST SPECIAL DEALS TO COLOMBO & FAREAST DESTINATIONS

# யாழ்ப்பாணத்துப் புதினங்கள் - கோள் மூட்டல் 3

**கானா பிரபா**

*(மடத்துவாசல் பிள்ளையாரடியில்)*

## மதில் மேல் பூனை(க்காதல்)

ஆரம்ப வகுப்பில் எனக்கு ABCD யில் இருந்து Role play வரைக்கும் ஆங்கிலத்தைப் புகட்டிய ஆசிரியை உடுவிலில் இருக்கிறா. அதுவும் எங்களுக்கெல்லாம் இங்கிலீஷ் படிப்பிக்க எவ்வளவு கெட்டித்தனம் வேணும். அவவை இந்த முறையாவது சந்திச்சுக் கதைக்க வேணும் எண்டு கங்கணங் கட்டிக் கொண்டு உடுவில் மகளிர் பாடசாலைக்குப் பக்கத்து ஒழுங்கை என்று என் அம்மா சொன்ன ஒரே ஒரு குறிப்பு மட்டும் இருக்க லுமாலா லேடீஸ் பைக்கை வலித்தேன். எல்லாப் பக்கத்தாலும் விசாரிச்சால் அவரைத் தெரியவில்லை. ஜி.எஸ் (கிராம சேவகர்) வீட்டை கேட்டுப் பாருங்கோ என்று ஒருவர் வழிகாட்டினார். ஆனால் ஜி.எஸ் வீட்டில் நின்ற நாய் 'மவனே, கால் வச்சே எலும்பிருக்கும் தசை இருக்காது' என்று பல்லை இளித்துக் கொண்டு உறுமிக் கொண்டே துரத்த ஆயத்தமானது. ரீச்சரை இந்த முறையும் பார்க்க முடியாத துர்பாக்கியத்தை நினைத்து வெதும்பிக் கொண்டே உடுவில் மகளிர் பாடசாலைச் சுவரைப் பார்க்கிறேன்.

'உன் பெயர் என்ன ?

இன்னும் ஒருமணி அகவில்லையா ?

ஒரு மணிக்கு வரச்சொன்னி

ங்க

என்னைக் காக்க வைத்து விட்டு

வரவில்லை'

இப்படி ஒரு பெடிப்பிள்ளை சோக்கட்டியால் சுவரில் எழுதியிருக்கிறார். இவன் பாவி எழுதின குறிப்பிலேயே இரண்டு எழுத்துப் பிழை இருக்கு. எதுவாக இருந்தாலும் மொபைல் போன் யுகத்திலும் பழமையைப் பேணும் இந்தத் தம்பியின் கனவு கைகூட வேணும் பாருங்கோ.

## தரேலாது செய்யிறதைச் செய் பாப்பம்

சண்டை ஒருவழியா ஓய்ஞ்சாலும் ஓய்ஞ்சுது இப்பவெல்லாம் புதுப்புது நாட்டாமையள் கிளம்பி யிருக்கினம் என்று அன்னம்மாக்கா புலம்பும் அளவுக்கு நிலமை மோசம். அப்படி ஒரு நாட்டாமையின் கதை தான் இது.

ஆமிக்காறருக்கு வேலை இல்லை சந்திக்குச் சந்தி 'டெங்குவை ஒழிக்க நாம் கை கோர்ப்போம்' என்று இராணுவ அறிவித்தல் பலகையில் எழுதுவது மாத்திரமன்றி மதகுப் பக்கம் இருக்கும் நெருஞ்சி முள் பத்தைகளை வெட்டிக் களையெடுப்பதும் மருந்தடிப்பதுமாக 'ஒப்பரேஷன் டெங்கு' நடவடிக்கை என்று சொல்லுமளவுக்கு அவை ஒரு பக்கத்தால் இயங்க, இன்னொரு பக்கத்தால் நான் சொன்ன நாட்டாமைக்காரரும் வெளிக்கிட்டினம்.

அவை தான் சின்னக்குஞ்சி ஐயா சொல்லுமாற் போல 'ஊத்தை இஞ்சுப்பெற்றர்'. யாரடா அவையள் என்று மலைக்காதேங்கோ, ஊரில் சுகாதார அதிகாரிகளை 'ஊத்தை இஞ்சுப்பெற்றர்' என்று அழைப்பதே ஒரு தனி சுகம்.

'வீடுகளில் இருக்கும் பற்றைகளை ஒழித்துக் கட்டவும், தண்ணீர் தேங்கியிருக்கும் பாத்திரங்களை அப்புறப்படுத்திச் சுத்தம் செய்யவும் இதன் மூலம் டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகளை ஒழிப்போம், மீறினால் 50,000 ரூபா அபராதம்' என்று சுகாதார அதிகாரிகள் யாழ்ப்பாணத்தின் ஊர் நெடுகச் சொல்லி அலுத்துப் போய் அடுத்த கட்டமாக ஒவ்வொரு வீடு வீடாகப் போய்ப் பார்த்து வந்தவை. அப்படித்தான் எங்கட வீட்டுக்குப் பக்கமா இருக்கும் என் நண்பன் ஒருத்தனின் வீட்டுக்குப் போனவை. மண் குடிசை, நாலஞ்சு கோழிகள். சுத்தும் முத்தும் பார்த்தவைக்கு ஆப்பு வைக்க ஏதுவாக ஒரு சமாச்சாரம் கிட்டியது. சருவச்சட்டிக்குள் தண்ணீர், தண்ணீருக்குள் புழுக்கள்.

'இதென்ன காணும் புழுவெல்லாம் நெளியிது' - சுகாதார அதிகாரி

'அது பாருங்கோ கோழிக்கு வச்ச தண்ணி, எப்பிடியோ புழுக்கள் வந்துட்டுது' - இது என் நண்பனின் மனைவி

'இப்பவே எழுதுறன் அபராதம்' - இது கூடப்போன இன்னொரு சுகாதார அதிகாரி

'என்னட்டைக் காசு வாங்கிப் போடுவியோ நீ. எழுது பார்ப்பம் ஆனா ஒரு சல்லிக் காசு தரேலாது செய்யிறதைச் செய்' மண் வாரித் தூற்ற ஏதுவாக நின்று கொண்டு நண்பனின் மனைவி

'ஐயா உவள் விசரியின்ர கதையை விடுங்கோ, மன்னிச்சுக் கொள்ளுங்கோ ஐயா, தயவு செய்து எழுதிப் போடாதேங்கோ' நண்பன் ஏறக்குறைய காலில் விழாத குறையாக.

சுகாதார அதிகாரிகள் தண்டப்பண ரசீதை எழுதிக் கொடுத்து விட்டு நகர்கிறார்கள். இதற்குப் பிறகு விதானையாரின் கடிதம், ஜே.பி (சமாதான நீதவான்) கடிதம் எல்லாம் எழுதி அனுப்பித் தான் தண்டம் தணிந்தது?)




*1820 ஆம் ஆண்டு எழுப்பப்பட்ட உடுவில் தென்னிந்தியத் திருச்சபை தேவாலயம்*




*மணியம் காரம் சுண்டல் பாருங்க*

எல்லாப் பக்கத்தாலும் கொடியேறினாலும் ஏறிச்சு கடலுணவுகளுக்குக்கான கிராக்கி யாழ்ப்பாணத்தில் வெகுவாகக் குறைந்து விட்டது. சின்னக்கடைப்பக்கம் போனால் நண்டு, மீன் எல்லாம் விசிலடிச்சுக் கொண்டு ஹாயாக இருக்கினமாம், வாங்க ஆளில்லை. மேலே படத்தில் இருப்பது மீன் வண்டிக்காரர் உடுவில் பக்கமாக வந்த போது.



எங்களுக்கு க.பொ.த சாதாரண வகுப்பு வரை தமிழும், பின்னர் பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பில் இந்து நாகரீகமும் படிப்பித்த பாலா சேர் பாடம் நடத்த வரவும் நான் போகவும் கணக்காய் இருக்கு .

'எட பிரபு! அப்பிடியே இருக்கிறான்ரா இவன்' மகிழ்ச்சி பொங்க என் கைகளை வாங்கி வைத்துக் கொள்கிறார்.

நான் எழுதிய 'கம்போடியா - இந்தியத் தொன்மங் களைத் தேடி' நூலைக் கொடுத்து விட்டு

'சேர், நீங்கள் அப்ப எங்களுக்குப் படிப்பிச்ச அறிவை வச்சுக் கொண்டு நான் கம்போடியா போய் எழுதின நூல் இது'.

ஆச்சரியமும் பெருமிதமும் கலக்க என்னைக் கட்டியணைக்கிறார்.

'என்னட்டைப் படிச்ச பிள்ளை இப்படி புத்தகம் எழுதுவ தெல்லாம் எனக்கு எவ்வளவு பெருமையா இருக்கு' என்னைக் கட்டியணைத்தார் அப்போது. எனக்கு லேசாகக் கண்களில் துளிர்க்க

'எனக்கும் இப்ப சந்தோஷமா இருக்கு சேர்'

Perma Shipping
பிரேமா விமான, கப்பல் பொதி சேவை
Air Freight World Wide
Collection, Packing & Crating
Urgent, Documents, Parcels Door Delivery
Customs Clearance By Sea/Air
Delivery to anywhere in Srilankaó
யாழ், வன்னி, வவுனியா, மன்னார், மட்டகளப்பு, திருமலை, அம்பாறைக்கு விரைவான மலிவானசேவை!
தொடர்புகளுக்கு சிவம் (Sivam)
G14, Big Yellow,
1-3 Wyvern Industriial Estates,
Beverely Way, New Malden, Surrey KT3 4PH
Tel: 02086465222 Mob: 07939550397
Email: info@permainternational.co.uk
Web: www.permainternational.co.uk


Vacancy!.. Vacancy!
An Immigration Law Firm in South west London specialising in Sri Lankan Tamil asylum cases is looking for full time Administrator preferable female, who is bilingual(Tamil & English). A Degree level qualification and additional foreign language is advantageous.
We are also looking for an Immigration Caseworkers/Trainee Lawyer. UK Law Degree essential, LPC/BVC is desirable and would be an advantage
Contact : 020 8544 9285

பெண் உதவியாளர் தேவை!
Harrow வில் வயோதிபப் பெண்மணியை வீட்டில் இருந்து பராமரிக்க பெண் உதவியாளர் தேவை!
*தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.
National Insurance Number is Necessary
தொடர்புகளுக்கு: 020 8423 1397

வீடு,காணி விற்பனைக்கு!
வல்வெட்டித்துறையில் வீடு, காணி விற்பனைக்கு உள்ளது.(பழைய வல்வை கல்வி மன்றம்)
தொடர்புகளுக்கு: Dr. T.K Shakespeare
0019 054 693 582
* மாலை 2.00மணிக்குப் பின்(ஐ.இராச்சிய நேரம்) தொடர்பு கொள்ளவும்.

Meera Arnold & Co
for all your accounting needs...
pay roll
Accountancy
Auditing
book keeping
company formation
45 Chandos Ave, N14 7ES, Tel: 020 8882 2333

# தியாக தீபம் திலீபனின் நினைவலைகள்




லெப்டினன் கேணல் திலீபன்
(பார்த்திபன் இராசையா)
ஊரெழு, யாழ்ப்பாணம்

அன்னை மடியில் – 27.11.1963
மண்ணின் மடியில் – 26.9.1987

*தான் நேசித்த மக்களுக்காக தான் நேசித்த மண்ணுக்காக ஒருவன் எத்தகைய உயர்ந்த உன்னதமான தியாகத்தைச் செய்ய முடியுமே? அந்த அற்புதமான அர்ப்பணிப்பைத் தான் திலீபன் செய்திருக்கிறான்*

*- தமிழீழ தேசியத் தலைவர்*

தியாகி லெப்டினன் கேணல் திலீபன் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒரு முக்கிய உறுப்பினராக இருந்தவர். இவர் பாரதப் படைகளுக்கெதிராக நீராகாரம் கூட அருந்தாது பன்னிரண்டு நாட்கள் உண்ணா நோன்பிருந்து வீரச் சாவடைந்தவர்.

1987 செப்டெம்பர் 15ஆம் திகதி இந்திய அமைதிப் படையினரிடம் ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து உண்ணா விரதத்தை ஆரம்பித்தார். 1987ஆம் ஆண்டு செப்டெம்பர் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.48 மணிக்கு லெப்டினன் கேணலாக, யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப் பாளராக இருந்த திலீபன் தியாக மரணம் எய்தினார்.

## ஐந்து அம்சக் கோரிக்கை

1. மீளக் குடியமர்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாக திட்டமிடும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும்.
2. சிறைக் கூடங்களிலும் இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப் பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்பட வேண்டும்.
3. அவசர காலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்.
4. ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும்.
5. தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற் கொள்ளப் படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

### 'தமிழர்களின் போராட்டத்தின் ஒரு குறியீடு - திலீபன்!'

தியாகி தீலீபனின் தியாக வரலாறு, தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் ஒரு குறியீடாக விளங்குவதோடு மட்டுமல்லாது, தமிழீழத் தேசியத் தலைவரின் இயல்பிற்கும் ஒரு குறியீடாக விளங்கி வருகின்றது. இந்த முக்கிய விடயங்களைச் சற்று ஆழமாக அணுகித் தர்க்கிப்பதானது, தியாகி திலீபனின் இருபதாவது ஆண்டு நினைவு தினத்திற்குப் பொருத்தமானதாக அமையும் என்று நாம் நம்புகின்றோம்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் மிகப் பெரிய எழுச்சி கொண்டதும், வளர்ச்சி கண்டதும், தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களால் தான்! இங்கே தமிழீழத் தேசியத் தலைவருக்கு இருக்கிற இயல்பு என்னவென்றால், அடக்கு முறைகளுக்கு - அவை எவ்வளவுதான் பெரிதாக, பிரமாண்டமாக இருந்தாலும் - விட்டுக் கொடுப்பதில்லை. எவ்வளவுதான் பாரிய இழப்புக்களைச் சந்தித்தாலும், தன்னுடைய உயிரே போனாலும் அடக்கு முறைகளுக்கு அடிபணிவதில்லை என்பது தேசியத் தலைவரின் அடிப்படை இயல்பாகும்!.

இந்த இயல்புத் தன்மைதான் தமிழீழத் தேசியத் தலைவரையும் சாகும்வரை உண்ணா விரதமிருக்க, முன்னர் தூண்டியது. 1986 ஆம் ஆண்டு, நவம்பர் மாதத்தின் போது, இந்தியாவில் தமிழ்நாட்டிலிருந்த தலைவர் பிரபாகரன் அவர்களின் தொலைத் தொடர்புச் சாதனங்கள் முதலானவற்றை இந்திய அரசு பறிமுதல் செய்தது. இந்த அடக்கு முறைக்கு எதிராகத் தலைவர் கடும் சினம் கொண்டார். இந்தியாவில் இருக்கக் கூடிய ஒரு போராட்ட வடிவமாக, சாகும் வரையிலான உண்ணா நோன்பைத் தேசியத் தலைவர் பிரபாகரன் உடனே ஆரம்பித்தார். இந்தச் சாகும் வரையிலான உண்ணா நோன்பு ஒரு போராட்ட வடிவமாகத் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் எமது தேசியத் தலைவரால்தான் முதன் முதலில் செய்யப்பட்டது.

அப்போது நடைபெற்ற சில விடயங்களை, எமது வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள விழைகின்றேன்.

தண்ணீர் கூட அருந்தாத, சாகும் வரையிலான உண்ணா நோன்புப் போராட்டத்தைத் தலைவர் பிரபாகரன் அவர்கள், எந்த விதமான முன்னறிவித்தலும் இல்லாமல், உடனேயே ஆரம்பித்து விட்டார். இந்த உண்ணா நோன்புப் போராட்டத்தை ஒருநாள் கழித்த பின்னர் ஆரம்பிக்கும்படி இயக்கப் போராளிகளும், பிரமுகர்களும் தலைவர் பிரபாகரனை மிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்கள். 'அந்த ஒருநாள் அவகாசத்தில் தமிழக அரசிற்கும், தமிழக அரசியல்வாதிகளுக்கும், வெகுசன ஊடகங்களுக்கும், தமிழக மக்களுக்கும் உங்களது சாகும் வரையிலான உண்ணா நோன்பை அறிவித்து விடலாம். அதன் பின்னர் நீங்கள் உங்களுடைய உண்ணா நோன்பை ஆரம்பிக்கலாமே' - என்று கூட அவர்கள் தலைவரிடம் வாதிட்டார்கள். அந்த ஆலோசனையைத் திட்ட வட்டமாக மறுத்து விட்ட தமிழீழத் தேசியத் தலைவர் கூறிய பதில் இதுதான்:

'இல்லை! நீங்கள் சொல்வது ஓர் அரசியல் நாடகம்! எனக்கு அது தேவையில்லை. நான் இந்த நிமிடம், இந்த வினாடியிலிருந்து ஒரு சொட்டுத் தண்ணீர் கூட அருந்தாமல், சாகும் வரையிலான என்னுடைய உண்ணா விரதத்தை ஆரம்பித்துவிட்டேன். இந்திய அரசு தான் பறித்தெடுத்த தொலைத் தொடர்புச் சாதனங்கள் முதலானவற்றை மீண்டும் திருப் பித் தரும் வரைக்கும் அல்லது என்னுடைய உயிர் போகும் வரைக்கும் எனது போராட்டம் தொடர்ந்து நடைபெறும்!'.

ஆனால் 48 மணித்தியாலங்களுக்குள் இந்திய அரசு பணிந்தது. தான் பறித்தெடுத்த தொலைத் தொடர்புச் சாதனங்கள் முதலான வற்றைத் தலைவர் தங்கியிருந்த வீட்டிலேயே அரசு கொண்டு வந்து தந்தது. தலைவர் தன்னுடைய உண்ணா நோன்பை முடித்தார்.

தன்னுடைய உயிரே போனாலும் அடக்கு முறைக்குப் பணிவதில்லை என்கின்ற தேசியத் தலைவரின் இயல்பின் வெளிப்பாடு தான் திலீபனிடமும் உள்ளூர படிந்திருந்தது. தேசியத் தலைவர் தானே முன்னின்று வழி காட்டிய பாதையில், திலீபன் பின் தொடர்ந்து போராடினான். திலீபனின் இந்த உண்ணா நோன்புப் போராட்டம், தமிழீழத் தேசியத் தலைவரின்? இயல்பையும் குறியிட்டுத்தான் நிற்கின்றது!

இந்த இலட்சிய உறுதிதான், தியாகி திலீபனிடமும் படிந்திருந்தது. தனது தலைவன் முன்னோடியாக நின்று வழிகாட்டிப் போராடியதை, அவன் அடுத்த ஆண்டில் - 1987ல் - நடாத்தினான். 'ஒரு சொட்டுத் தண்ணீர் அருந்தாமல், நான் எனது உண்ணா நோன்பை ஆரம்பிக்கப் போகின்றேன்' - என்று திலீபன் அறிவித்தபோது தலைவர் பிரபாகரன் திலீபனிடம் ஒரு வேண்டுகோளை விடுத்தார். 'தண்ணீரையாவது குடித்து உண்ணாவிரதத்தைத் தொடரலாம்'- என்று தலைவர் பிரபாகரன் திலீபனைக் கேட்டுக் கொண்டார்.

ஆனால் திலீபனோ, தலைவரிடமே பதில் கேள்வி ஒன்றைக் கேட்டான். 'அண்ணா, ஆனால் நீங்கள் அப்படிச் செய்யவில்லையே? நீங்களும் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட அருந்தாமல்தானே சாகும்வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருந்தீர்கள். என்னை மட்டும் ஏன் தண்ணீர் அருந்தச் சொல்கின்றீர்கள்?'

அத்தகைய ஒரு தலைமை! இத்தகைய ஒரு தியாகி!.

உயர்ந்தவர்களிடம் மட்டுமே காணக் கூடிய இலட்சிய உறுதி அது!

இவ்வாறு, தமிழீழத் தேசியத் தலைவரின் இயல்பிற்கும் ஒரு குறியீடாகத்தான் தியாகி திலீபன் விளங்கினான்.

*- மு.வே.யோ. வாஞ்சிநாதன்*

## திலீபன்



### திலீபன் பாடல்

ஈழம் எம் நாடெனும் போதினிலே
ஒரு ஈகம் பிறக்குது வாழ்வினிலே
திலீபன் தந்த இவ் உணர்வினிலே
தாகம் வளருது நாட்டினிலே

வேகம் கொண்டதோர் பிள்ளையவன்
வேதனை வேள்வியில் உயிர் எறிந்தான்
தாகம் தமிழீழம் ஒன்றே என்று
மோகம் கொண்டு தன் உடல் தகித்தான்

அந்நியர் காலடி எம் மண்ணில்
ஆக்கமாய் என்றுமே ஆகாது–எனப்
புண்ணியவான் இவன் கூறிவட்டு
புதுமைப் புரட்சியில் விழி சாய்த்தான்.

தொட்டு நாம் மேடையில் ஏற்றி விட்டோம்
உடல் கெட்டவன் பாடையில் இறங்கிவந்தான்
பட்டறிவு இதுவும் போதாதா
நம் மக்களும் முழுதாய் இணைவதற்கு

கட்டையிலே அவன் போனாலும்
வெட்டையிலே உண்மை எடுத்துரைத்தான்
பட்டை யடித்த பாரதப் படையினரின்
கொட்டமடக்கிட வழி சமைத்தான்.

நெட்ட நெடுந்தூரம் இல்லை ஐயா– வெகு
கிட்டடியில் எம் வெற்றி வரும்.
கொட்டமடித்தவர் எல்லோரும்–எம்
காலடி தொட்டிடும் வேளை வரும்

*- தீட்சண்யன்* (15.09.1994)



✓ Accountancy & Auditing
✓ Business Start up Advice
✓ Business Plans & Cash Flow Forecasts
✓ Personal tax Affairs & Self Assesment
✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
✓ Company Formation
✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
✓ Attending VAT & PAYE visits
✓ Tax Investigations
✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS
Accounting & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

# Why the world must stop Sri Lanka's decline?



By: Sonali Samarasinghe
The Global Post

NEW YORK, NY. — On Wednesday, Sri Lanka's Parliament overwhelmingly passed an urgent bill removing term limits for the president. The constitutional amendment also gave the president unlimited power over judicial, police and other public service appointments and removed constitutional safeguards over the electoral process.

The amendments abolished the Constitutional Council established to ensure the independence of appointments, transfers and removal of persons to the Judiciary and to the police, bribery, finance, elections and human rights commissions. The independent oversight body has been replaced by a toothless Parliamentary Council whose observations the President must seek but need not act upon in making these key appointments.

Sri Lanka is a country rapidly in decline. After the conclusion of its 27-year-long civil war in May last year, President Mahinda Rajapakse was handed a second term in office by a grateful and war-weary electorate. It might have been the turning of a new page. It wasn't. Instead the country has hurtled towards a dictatorship that has now been constitutionalised, and it seems that the incumbent president has missed the message.

Riding on a wave of popularity and a rare two-thirds majority in parliament - which he obtained with the help of a weak opposition and wily political manoeuvring — Rajapakse has now acted swiftly to constitutionalize and consolidate his power. Hence, this week's urgent bill.

Indeed Rajapakse, who as president enjoys immunity from prosecution, has been nothing if not timely and opportune in his politics. In 2005, he came in on a platform of war promising to eradicate Tamil Tiger terrorism. By May 2009 he had done that. Despite clamping down on human rights and achieving only modest economic growth, Rajapakse's re-election victory in January 2010 — an election held almost two years ahead of schedule and just eight months after his military victory — was not surprising.

Thousands of civilians died in the military offensive. Video evidence emerged of soldiers summarily executing detainees, amid strenuous denials of such action by the government. Sri Lanka's former army commander, Gen. Sarath Fonseka — the man who led Sri Lanka's army to victory — went on record saying orders were given to shoot Tiger leaders attempting to surrender, a statement he later retracted.

Fonseka challenged Rajapakse in the January election, alleging blatant nepotism in Rajapakse's first term and citing the fact that after assuming office in 2005 the president appointed three of his brothers to high office. Sri Lanka is now governed by the Rajapakse brothers and their offspring who hold powerful cabinet positions. Other Rajapakse relatives also control large numbers of important offices, including diplomatic missions and state owned businesses.

Just six days after Rajapakse's re-election, Fonseka was arrested and court martialled, presumably for fear he would turn whistle-blower.

The government's justification of the indiscriminate aerial bombardment of the north and east during the last stages of the military offensive and the resulting civilian death toll was that it was necessary to end the war. However, this May the International Crisis Group called for a U.N. investigation into the final bloody months of the war, stating in a report it had "reasonable grounds to believe that the Sri Lankan Security Forces committed war crimes."

> Just six days after Rajapakse's re-election, Fonseka was arrested and court martialled, presumably for fear he would turn whistle-blower.

Sri Lanka has fiercely resisted any inquiry led by foreign authorities, stating that it would conduct its own investigations under a "Reconciliation and Lessons Learned" commission. Many have no faith in such home grown inquiries that have been more about the reinforcement of the government viewpoint, denial, botching evidence and creating confusion rather than genuine investigation. Sri Lanka has yet to seriously investigate the murder of 15 journalists since Rajapakse's government took office.

Meanwhile, Rajapakse's supporters maintain that the removal of the two-term limit this week will shore up a number of choices as candidates in a presidential poll. Yet the repeal of provisions ensuring an independent elections commission will only serve to undermine free and fair elections and make the incumbent president more powerful. With the elections commission no longer having power to issue directions preventing political parties from exploiting state resources to run their campaigns, the incumbent president will have unfettered access to public property to the exclusion of all other candidates. The new amendments also place a duty on both the public and private media to comply with directions issued by the elections commission — a commission over which the incumbent president has absolute control.

Under the new amendments, Rajapakse must attend parliament every three months, a provision his supporters argue will increase accountability. In fact, such a move will only serve to increase presidential power, manipulation and interference in the parliamentary process and remove any semblance of the independence of parliament and the separation of powers.

Certainly for a country that has seen some of the bloodiest years of its 27-year civil war under the present regime, the culture of impunity, the fear propaganda, the persecution intimidation, murder and muzzling of the press is nothing new.

### Why must the world take action now?

Because the subversion of democratic mechanisms and violence against democratic institutions continues unabated in a time of peace. Inventive in its attacks it has employed blogs, websites and mass emails to personally vilify any journalist, political opponent or human rights activist it sees as a threat to its rule. This government promised change once the war ended. Instead, nothing has changed.

Rajapakse has now aligned his formerly westward-looking country with China, Iran, Pakistan and Libya, and repeatedly lashed out at the West for criticizing his shameful human-rights record. And, despite the successful end of the civil war, the Rajapakse regime has offered nothing to the Tamil minority. Their aspirations and grievances have once more been swept under the carpet.

His government has demonstrated that it has neither the vision nor the empathy to bring about a just and lasting solution to the Tamil question. Instead, Sri Lankans have become inured to the pervasive Sinhala Buddhist supremacist racism the Rajapakse government brought to the country in order to win over the majority.

If Sri Lanka does not reach out to that section of the population that has been deeply wounded — if there is no accountability — it will only serve to breed a new generation of sullen youths with sympathetic and considerably more active operatives amongst the Tamil Diaspora. A future war may not be confined by Sri Lanka's borders.

Rajapakse's priorities are now to attract foreign investment and increase trade while defending his army and his political family against allegations of war crimes. He is using his large majority and the enormous powers vested in his administration for just that — to perpetuate authoritarianism and the culture of impunity while obliterating any remnants of a free media. He has relegated civil and political rights to the realm of irrelevant at best or subversive at worst.

Apart from losing European Union trade concessions this August until the country makes progress on human rights, Sri Lanka has been able to avoid U.N. scrutiny and cleverly stave off any international pressure, using its diplomatic influence with countries like China.


Sri Lanka's government recently announced that it would invite outside investors to its Chinese assisted multi-billion-dollar post-war infrastructure program. China is Sri Lanka's largest infrastructure lender.

Geopolitics is playing its part. With its many trade and military interests now concentrated in the Indian Ocean, the U.S. too is keen to see strategically placed Sri Lanka not slip entirely into China's arms.

Here's the caveat. Sri Lanka's handling of its civil war must not be seen as a model of success for combating terrorism or a perfect model of counter insurgency but rather a harsh lesson like Hiroshima or Agent Orange. If the ruling regime is allowed to go on unabated, it will soon have a far more deadly, more organized and inevitably more global terrorist movement on its hands.

For this alone the world must act now.

LACE TUITION CENTER



✓ 11+ பரீட்சை எழுதவிருக்கும் மாணவர்களுக்கு தனிப்பட்ட முறையில் பரீட்சை வினாத்தாள் பயிற்சிகள்.
✓ SATS3, GCSE & A/S, A/L, Maths, Science and English பாடங்கள் திறமையான ஆசிரியர்களால் பயிற்றுவிக்கப்படும்.
✓ கடந்த 20 வருடங்களாக 11+ புலமைப் பரிசில்கள் மற்றும் சிறந்த பல்கலைக் கழகங்களுக்கான (UCL, Imperial, University of Queen Marry etc...) அனுமதி களைப் பெற்ற நிறுவனம்.

பாடங்கள் தொடர்பான இலவச ஆலோசனைகளுக்கும்
அறிவுரைகளுக்கும் உடன் தொடர்பு கொள்ளுங்கள்

Mr. Mahalingam.
LACE Tuition Center (Tooting)
3, Beechcroft Road, Tooting, SW17 7BU.
020 8767 4698
07956 309 426

# Sri Lanka heading towards 'a totalitarian state'

Charu Latta Hogg
RADIO NETHERLANDS

**Leading Sri Lanka expert has warned that with last week's parliamentary victory on constitutional reforms, Sri Lanka's President Mahinda Rajapakse has dealt a final blow to the country's human rights, civil liberties and true democracy. Charu Latta Hogg, an associate fellow at London-based think tank Chatham House, says that Sri Lanka is heading 'towards a totalitarian state'.**

The constitutional reforms, backed by a large majority of Sri Lanka's parliament, enable the president to seek a third term, which could keep Mr Rajapakse in office until at least 2022. Other changes include a reform of various councils and commissions, such as Sri Lanka's national police commission, an anti-briberies council and the national human rights commission.

## Independent

This is what Ms Charu Lata Hogg, who works for Chatham House's Asia Programme, is most worried about. "These commissions used to be independently appointed by Members of Parliament, including opposition members," Ms Hogg told RNW. "But now it will be the president who will solely appoint its members and its chairmen. Essentially, these institutions of democracy will now come under the control of just one man".

## Human rights

She is especially worried about Sri Lanka's national commission for human rights violations. "It is supposed to document and investigate human rights violations against the people of Sri Lanka. But how effective will it be when the council will be appointed by the president himself? What happens if it is asked to investigate violations by the government or the president?".

Mr Rajapakse is currently riding on a wave of popularity after he declared victory last year over the Tamil Tiger rebels in the northeast, ending a 25-year civil war in May 2009. Regarded as the main force behind the government army's victory, Mr Rajapakse clinched an ouright victory in last year's presidential elections - but not before he'd taken out his main rival, military chief Sarath Fonseka, by placing him under arrest and declaring his bid to run in the elections as invalid.

## Totalitarian streaks

"The end of that war was a blessing for Sri Lanka in many ways," says Ms Hogg, "but it has lead to totalitarian streaks creeping into Mr Rajapakse's regime, as the government is simply not challenged anymore. Opposition comprises of many different factions and the government puts them under great pressure. Some opposition members even find it strategically wiser to side with the president rather than carry on protesting his policies".

This was proven in last week's vote, when many opposition MPs decided to vote in favour of Mr Rajapakse's reform plans.

## International community

The international community seems to be reluctant in breaking ties with Sri Lanka, says Ms Hogg. "The EU is quite firm in its criticism, but the US is not very clear. They've shown support in the war on the Tamil Tigers, but they have also criticised Sri Lanka's poor human rights record". Not that it will matter to the people of Sri Lanka – the government seems to be more interested in consolidating ties with countries like India or China, which have been wooing Sri Lanka for a long time.

## Patriotism

"The government is stirring up patriotism, saying the West is against the people of Sri Lanka," says Ms Hogg. One example is the heavy protest after the UN announced an independent investigation earlier this year into possible war crimes during the final stages of the Tamil Tigers war. "With Mr Rajapakse's current popularity, it's not that difficult at all to mobilise the people".

# Tamils never expect justice from this government?

Many bureaucrats and decision-makers working for world bodies and important institutions may find it easy and comfortable to talk casually about the human rights and humanitarian situation in Sri Lanka. But when its come to the question of the islands history and to conflict resolution, many of them have very limited knowledge.

Both cases, the de-merger of the North Eastern province and the blocking of the PTOMS denied justice to the Tamils. This was witnessed by the international community. The judiciary in Sri Lanka is used by the Sinhala rulers, as a political tool, to support their discrimination against the Tamils.

When Tamil civilians are killed or massacred by the Sri Lanka security forces, either the international community remains silent or even if they issue a mild statement, they accuse both parties to the conflict. When there is any accusation against the LTTE, the reaction of the international community is always very strong and the opportunity is taken to praise the government for its feeble efforts. This itself is an unbalanced approach by the international community to the ethnic conflict in Sri Lanka.

But day by day, generation by generation, the Tamils have been oppressed and ignored by the Sinhala rulers. Tamils hear only justifications of the atrocities and negative responses to their genuine grievances.

A well known **Sinhalese historian, late Mr. Adrian Wijemanne** once told, "why negotiate over what is yours? I am a Sinhalese Nationalist as much as you are a Tami Nationalist. I must have my Sri Lanka and you, your Eelam. The two countries should sign a friendship pact, and I should be able to visit you in Jaffna and you should be able to visit me in Colombo." (Excerpt from an article written by by Nadodi in Sangam December 4, 2007)

During recent years, many new states have eventually been born in the world because of obdurate and persistent denial of justice and equality. From Bangladesh to Kosovo, it has been proved that continuous rejection of a just redress for horrendous human rights violations and failure to accept the history and realities, makes a path for international intervention. The Tamil Eelam conflict is no different to Kosovo or any other newly born state. Those who support, advocate and go hand in hand with Kosovo, cannot ignore the Tamil Eelam crisis.

**It is the right time for the International Community to give a fair judgement concerning the Tamils in the island of Sri Lanka.**



# KIDS பேப்பர்

## THE STORY OF RAVANAN AND RAMAN



**Part 5**

***Finding Seethai***

During their long walk towards the south, Raman and Lakshmanan were advised to seek the help of Sukreevan in their search for Seethai. On seeing Raman and Lakshmanan from a distance, Sukreevan sent his close friend Hanuman to find out their indentity. Hanuman came to Raman and Lakshmanan. The brothers told Hanuman their story and their intention to meet Sukreevan because they wanted his help to find Seethai. Hanuman was impressed by their courteous behavior. He took them to meet Sukreevan and told him their story. He then told Sukreevan of their intention to come to him for help.

In return, Sukreevan told his story. Sukreevan had a brother called Vali, who has usurped Sukreevan and taken over the kingdom of Kishkindha which was rightfully his and sought help from Raman to kill Vali, otherwise, he could not help Raman.

In due course, Vali was killed and Sukreevan became the king of Kishkindha. Soon after he became the king, he ordered his army to help Raman and Laxmanan in every way possible in the pursuit of searching for and rescueing Seethai.

Raman called Hanuman and gave his ring, saying, "If any one finds Seethai, it will be you Hanuman. Keep this ring to prove your identity as my messenger. Give it to Seethai when you meet her." Hanuman respectfully accepted it and joined the search party.

When Sukreevan's army reached the south shore of India, they met Sampati, the brother of Jatayu. Sampati confirmed that Ravanan took Seethai to Lanka. The army was perplexed to see the huge sea that stretched in front of them.

Angathan, the son of Sukreevan, asked, "Who can cross the ocean?" silence prevailed, until Hanuman came up to give a try.

Hanuman was the son of Vayu, the wind god. He had a secret gift from his father. He could fly. Hanuman enlarged himself to a huge size and took a jump to cross the ocean. After overcoming many obstacles, Hanuman reached the city of Lanka. He soon contracted his body and alighted as a tiny insignificant creature. He soon passed through the city unnoticed and managed to enter the palace quietly. He went through every chamber but could not see Seethai.

Finally, Hanuman located Seethai in one of the gardens of Ravanan, called Ashoka Vanam. She was surrounded by Ravana's women who were guarding her. Hanuman hid on a tree and watched Seethai from a distance. She was in deep distress, crying and praying to God for her relief. Hanuman's heart melted in pity. Just then Ravanan entered the garden and approached Seethai. "I have waited enough. Be sensible and become my queen. Raman can not cross the ocean and come through this impregnable city. You better forget about him." he said.

Seethai sternly replied, "I have repeatedly told you to return me to my husband Raman before his wrath falls upon you."

Ravanan got furious, "You have gone beyond the limits of my patience. You give me no choice than to kill you unless you change your mind. Within a few days I shall be back."

As soon as Ravanan left, other women, who were attending Seethai, came back and suggested her to marry Ravanan and enjoy the enviable wealth of Lanka." Seethai kept quiet.

Slowly the women wandered away. Finally Hanuman came down from his hiding place and gave Raman's ring to Seethai. Seethai was thrilled. After conversing for a while Hanuman said that he would take Seethai back to Raman if she agreed. Seethai did not agree.

"I do not want to return home secretly" said Seethai, "I want Raman to defeat Ravanan and take me back with honor."

Hanuman agreed. Then Seethai gave her necklace to Hanuman as an evidence of their meeting.

Before departing from the Ashoka Vanam, Hanuman wanted Ravanan to have a lesson for his misconduct. So he began to destroy the grove by uprooting the trees. Soon Ravanan's warriors came running to catch the Hanuman but were beaten up. The message reached Ravanan. He was enraged. He asked Indrajeet, his able son, to capture Hanuman. A fierce battle ensued and Hanuman was finally captured when Indrajeet used the most powerful weapon, the Brahmastram. Hanuman was taken to Ravanan's court and the captive stood in front of the king.

Hanuman introduced himself as the messenger of Raman. "You have abducted the wife of my all powerful master, Raman. If you want peace, return her with honor to my master or else, you and your kingdom will be destroyed."

*(Will be continued in next issue)*

## Jokes

1.Something is changing, still you always watch it. What is that?

2.Why does a giraffe have a long neck?

3.What has eye but cannot see?

4.Why do bees hum?

5.What did the dentist say when his wife backed a cake?

6.What do you get if you cross a centipede and a parrot?

7.What did the wall say to the other?

8.Where do baby gorillas sleep?

9. Where do wasps go when they are sick?

1. A traffic light.
2. Because his feet smell!
3. Potato
4. Because they don't know words!
5. Can I do filling?
6. A walkie – talkie.
7. Meet me at the corner!
8. In an APE-RI-COT
9. The was..pital!

## Riddles

11. What kind of room has no windows or doors?

12. I have holes on the top and bottom. I have holes on my left and on my right. And I have holes in the middle, yet I still hold water. What am I?

13. I look at you, you look at me, I raise my right, you raise your left. What is this object?

14. It has no top or bottom but it can hold flesh, bones, and blood all at the same time. What is this object?

15. The more you take the more you leave behind.

16. Light as a feather, there is nothing in it; the strongest man can't hold it for much more than a minute.


17. As I walked along the path I saw something with four fingers and one thumb, but it was not flesh, fish, bone, or fowl.

18. What can run but never walks, has a mouth but never talks, has a head but never weeps, has a bed but never sleeps?

Answers


11. A mushroom 12. A sponge 13. A mirror 14. A ring 15. Footsteps 16. Breath 17. Glove 18. River

## Colouring



Why not enter our colouring competition? Simply colour me in and send it to *ORU PAPER* and you could be the lucky winner of a water colouring kit.

The winner will be published in the next issue.



HELP FROG FIND THE FLOWERS

## Word Search

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | R | S | K | U | M | B | A | M | M |
| S | R | D | V | I | L | A | K | U | V |
| U | F | T | P | O | N | G | A | L | N |
| N | G | E | Q | Y | Z | A | I | U | W |
| D | S | O | M | H | I | B | N | J | E |
| A | U | O | A | K | P | C | X | T | U |
| L | K | A | A | U | R | S | O | P | C |
| X | T | U | L | D | K | L | M | R | D |
| V | F | T | A | A | N | G | U | F | U |
| N | B | R | I | M | A | I | N | W | S |

**Hidden Words:**

**Subject: Tamil Festival Items**

SUNDAL, PONGAL, MAALAI, KUDAM, VILAKU, KUMBAM

Submitted by:

***By: Kaarthikayini Sivanesan (Age 6) (Lewisham)***



**2000 FREE**** minutes & texts Lycamobile PLUS to Lycamobile PLUS with £30 top-up

# The UK's favourite SIM for low cost international & national calls



| | |
|---|---|
| **Sri Lanka** | **9p**/min |
| **India** | **5p**/min |
| **Malaysia** | **5p**/min |

**All rates are for mobile & landline calls**

## FREE £10 CREDIT#
**with £30 top-up**

Call any Lycamobile 0p/min Lycamobile World in any Lycamobile country

**You can now call all your Lycamobile friends & family in any Lycamobile country for 0p*/min**

The Netherlands · Belgium · Switzerland · Italy · Sweden · Denmark · Norway

**For your FREE Lycamobile PLUS SIM visit www.lycamobile.co.uk or call 020 7132 0322**

Buy and top up online or in over 115,000 stores

Customers may not be able to use Electronic Top-Up at all locations where the top-up logo appears

Lyca mobile

Call the world for less

நீங்கள் இரத்தம் சிந்தி உழைக்கிறீர்கள் என்பது எமக்குத் தெரியும்

உழைத்தவற்றை ஊருக்கும் உறவுக்கும் கொடுத்து களைத்தீர்கள் என்பதும் எமக்குத் தெரியும்

ஒரு நாளில் உங்களுக்கு ஓய்வாகக் கிடைப்பது ஒண்டு ரெண்டு மணித்தியாலங்களே!

இதற்கு அதிகம் செலவழித்து தமிழ்த் தொலைக்காட்சிகளை பார்க்க முடியாது என்பதும் தெரியும்.

ஒரே ஒரு வழிதான் உங்களுக்கு உண்டு

சீவியம் முழுக்க உங்களால் பார்க்க முடிந்த தொலைக்காட்சிகளை பார்த்து மகிழ்ந்திட

அழையுங்கள்

# 020 7183 0367








**புதிய சட்டிலைட்**

**இணைப்புகளுக்கும் அழையுங்கள்**

இந்தப் பொட்டியின் தார்ப்பரியத்தை ஐரோப்பிய நாடுகளில் இருக்கும் உங்கள் உறவினர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளுங்கள்.

http://www.nallatv.com

இது ஒரு தமிழ் பெடியங்களின் தயாரிப்பு

# பாட்டி சுட்ட வடை - முப்பரிமாண பார்வை

*பொறுப்பு அறிவித்தல்:*

நீங்கள் யாரவது உங்களை எலக்கியவாதி என்றோ, புரட்சியாளர் என்றோ நினைத்தால், இந்த பதிவை தவிர்ப்பது நலம்,

*- இப்படிக்கு கடையிலே சரக்கு இல்லைன் னாலும், பொறுப்பா பொழைப்பை ஓட்டுவோர் சங்கம்*

முப்பரிமாணம், முக்கோணம் எல்லாம் கணக்கிலே படித்து இருப்போம், நான் ஒரு கணக்கு சீத்தலை சாத்தனார் என்பதாலே, எதை படிச்சாலும் வாழ்கையிலே நடைமுறை படுத்த முடியுமான்னு யோசிப்பேன், அதனாலே தான் மின்னணு பொறியியல் படிச்சிட்டு, கணிப் பொறியிலே எலிப் பொறியை வச்சி வேலை பார்க்கிறேன். இந்த முப்பரிமாணத்தை ஆராய்ச்சி செய்து முத்தாய் கடையிலே ஏத்தனுமுனு ரெம்பநாளா ஆசை, அவா, கொலைவெறி. இதுக்காக முப்பரிமாணம் கண்ட முதறிஞர் பட்டம் எல்லாம் வேண்டாம் என தாழ்மை யோட(நான் ரெம்ப அடக்க ஒடுக்கமானவன்) கேட்டுக்கொள்கிறேன்.

சின்ன வயசிலே எல்லோரும் பாட்டி வடை சுட்ட கதையை கேள்விப்பட்டு இருப்போம், வடை, காக்கா, நரின்னு பெருசுகள் சொல்லிக் கொடுத்ததை கேட்டுக் கொண்டே வீட்டிலே வடை சாப்பிட்டு இருந்திருப்போம், கதையின் கரு ஆப்பாயில் போடும் போது உடையாம இருக்கிற நான் பரிச்சையிலே வாங்கின முட்டை மாதிரி மனசிலே பதிந்து இருக்கும், இந்த கதையை புரட்சியாளர், இலக்கியவாதி, யதார்த்தவாதி மூவரும் கொலைவெறியோட சிந்திக்கும் போது நடப்பதுவே இந்த ஆராய்ச்சி மணி. உங்க அனுமதியோட இங்கிட்டு ஒரு குத்து வசனம் சொல்லிகிறேன்.

மணி அடிச்சா சோறு வீட்டிலே

மணி அடிச்சா ஆராய்ச்சி, கடையிலே

பாட்டி வடை நிறைய சுட்டு விற்பாள், அதிலே ஒரு வடையை ஆட்டையப் போட்டாலும், பாட்டியின் தொழிலைப் பாதிக்காது, ஆனா பாவம் பசியோட இருந்த காக்கா ஒண்ணை கொத்திகிட்டு போக, அதை ஒரு கடி கூட கடிக்க விடாம, நரி உசார் பண்ணிட்டு போய்டுச்சி, நல்லா கவனிங்க காக்கா உருவத் திலே சின்னது, நரி பெருசு, சிருசுகிட்ட இருந்து பெருசு பிடிங்கி தின்னால், புரட்சியாளன் சும்மா இருப்பானா, சும்மா மெல்லுகிற வாய்க்கு அவல் கிடைத்த கதைதான், ஒலிபெருக்கியே இல்லாம நாலு ஊருக்கு கேட்கிற மாதிரி நரிக்கு நாப்பது திட்டு, இல்லாதவன்கிட்ட பிடிங்கி தின்கிற நரியே, உனக்கு பேரு ஒரு கேடா, இனிமேல சேட்டை பண்ணின உன் வாலை வெட்டி காக்கைக்கு போட்டுடுவேன். நீ நேரப் போனா, உன்னைய குறுக்கால மறிப்பேன், நீ குறுக்கால போனா உன்னை நேரிலே மறிப்பேன். ஊசிப் போன வடையை தின்ன உனக்கு பேதி வந்து பாதியிலே போவாய் அப்படின்னு வசவு கிடைக்கும்.

வடை தின்ன நரிக்கு மட்டுமல்ல, வலியது வாழும் என்ற டார்வின் கொள்கைக்கும் நாலு வசவு வைத்து அவருக்கும் எதிர் சொம்பு அடிப் பாங்க.

இவங்க பேசுறதை கேட்ட நரி ஒரு வடைக்கே ஒன்பதாயிரம் திட்டு விழுதே, கூட ரெண்டு வடைய ஆட்டையப் போட்டு இருந்தால், என க்கு கூடு கட்டி இருப்பாங்களோன்னு யோசித் திகிட்டு இருக்கும், பறிகொடுத்த காக்காவோ, நல்ல வேளை அது ஊசிப் போன வடை, போன வாரம் சாப்பிட்ட வடைக்கு ரெண்டு நாள் பேதி போச்சி. இவ்வளவு கலவரத்திலும் கிழவி வடை போச்சேன்னு வருத்தப் பட்டுக் கொண்டு இருக்கும். இங்கிட்டு புரட்சியை விட்டுட்டு இலக்கியத்துக்கு போவோமா?

இலக்கியவாதின்னு சொல்லும் போதே எல்லோ ரும் தெரிச்சி ஓடிப் போவாங்க, அம்புட்டு பயம் அவங்க மேல, என்னத்த சொல்ல அப்படி கெடுத்து வச்சி இருக்காங்க, நான் அந்த காலத்திலேயே யார் இலக்கியவாதின்னு ஆராய்ச்சி மணி அடிச்சி வச்சி இருக்கேன், அதகாப்பட்டதாவது இலக்கியவாதி வரும் போதே காக்கை பாடினியார் காகத்தை பத்தி என்ன பாடி இருக்கிறார் தெரியுமா என்று ஆரம்பிப்பார், இலக்கியம் பேசும் போது சும்மா சொம்பு அடிச்சிகிட்டே இருக்கக் கூடாது, அதா வது சங்ககாலம், சங்குகாலம், முதல் சங்கம், கடைசி சங்கம், பதிவர் சங்கம் போன்ற சங்க கால பாடல்களிலே இருந்து குறிப்பு எடுத்து சொம்பு அடிக்கணும், காக்கா ஏன் கருப்பா இருக்கு, நரி ஏன் சிகப்பா இருக்கு என்ற கதைகளை அள்ளிப்போட வேண்டும், இப்படி அள்ளிபோடும்போது உள்ளூர் கதையை எல்லாம் விட வெளிநாட்டு இலக்கியங்களிலே குறிப்பு எடுத்துச் சொல்ல வேண்டும்.

**‘ஏ....கிழவி வடை தானே போச்சி, கடையா போச்சி, காக்கா தூக்கிட்டு போன வடையிலே உன் உசுரையா வச்சி இருந்த, பசி உசுரு போகுது ரெண்டு வடை கொடு’**

உதாரணம் சொல்லும் போது அமெரிக்க துரை மாரையோ, பிரித்தானிய துரைமாரையோ பத்திப் பேசினா, இவரும் வெள்ளைக்கார துரை மாருக்குத்தான் சொம்பு அடிக்கிறாரு, ஒண் ணும் புதுசா தெரியலைன்னு வாசகர் வட்டம் எல்லாம் வளைச்சி வளைச்சி கட்டம் கட்டு வாங்க, இதுவரைக்கும் யாருமே சொல்லாத நாட்டின் இலக்கியத்தைப் பேசினா, எல்லோ ரும் மூக்கு மேல வச்ச விரலை நாக்கு மேல வச்சி விசில் அடிப்பாங்க, அதாவது உகண்டா இலக்கிய வாதி சிகாண்டா காகத்தைப் பத்தி ஒரு பாட்டு படித்து இருக்கிறார்

காகத்தைப் பார்த்து
கா. . கா என்றேன்
அது என்னைப் பார்த்து
க்கா. . க்கா என்று
கக்கா போய் விட்டது

என்று சொல்ல வேண்டும், இந்த பாட்டுக்கு உங்களை நோக்கி காகிதம் வரலாம், இல்ல கல்லு வரலாம், ஆனா கிடைச்ச ஒலிபெருக் கியை மட்டும் விடக்கூடாது.

ஏன்னா இலக்கியவாதிகள் இழவு வீட்டு விழாவா இருந்தாலும், கல்யாண வீட்டு விழாவா இருந்தாலும் ஒரே மாதிரி தான் இருப்பாங்க.

இலக்கியவாதி பேசி முடிக்கும் முன்னே பாட்டி குறட்டை விட்டு தூங்கிடும், நரி இவங்க பேசுறதை கேட்கிறதுக்கு பதிலா, நான் அந்த காக்காவை அடிச்சி சாப்பிட்டு இருக்கலாமுன்னு யோசித்துகிட்டு இருக்கும்,

காக்கா கடல் கடந்து ஓடியே போய்டும். இலக்கயவாதிக்கு போதுமான அளவுக்கு சொம்பு அடிச்சாச்சி, அடுத்து யதார்த்த வாதியைப் பார்ப்போம்.

யதார்த்தவாதி வந்த உடனே ‘ஏ....கிழவி வடை தானே போச்சி, கடையா போச்சி, காக்கா தூக்கிட்டு போன வடையிலே உன் உசுரையா வச்சி இருந்த, பசி உசுரு போகுது ரெண்டு வடை கொடுன்னு சொல்லிட்டு ஒரு வடையை ஆட்டையப் போட்டுட்டுட்டு, தின்ன வடையிலே பாதிக்கு காசை கொடுத்திட்டு, மீதியை கணக் கிலே ஏத்த சொல்லிட்டு போய்டுவாங்க.

இவருக்கு எலக்கியமும் தெரியாது, வரலாறும் தெரியாது, அந்த அந்த சமயத்திலே என்ன தோணுதோ அதைப் பேசிட்டு போய்டுவாங்க. ஆள் கருப்பா இருந்தாலும், சிகப்பா இருந் தாலும் மனசு வெள்ளையாத்தான் இருக்கும்.

இன்றைய ஆராய்ச்சியோட முடிவுக்கு வந்திட் டோம், இன்னைக்கு நாட்டாமை சொம்பை வீட்டில் வச்சிட்டு வந்ததாலே ரெண்டு மொடக்கு தண்ணியை குடிச்சிட்டு தீர்ப்பு சொல்ல முடி யலை, புரட்சி, இலக்கியம், எதார்த்தம் இதிலே எது சிறந்ததுன்னு படிக்கிற ஒண்ணு ரெண்டு பேரோட முடிவுக்கு விட்டுட்டுறேன், வாய்ப் பளித்த அனைவருக்கும் நன்றி சொல்லி விடை பெறுகிறேன் வடையுடன் நன்றி வணக்கம்.

*- நசரேயன்*


உங்கள் உடனடித் தேவைக்கு கையில் பணம் இல்லை என்ற கவலையா?



நாங்கள் இருக்கும் போது நீங்கள் இப்படி தலையைப் பிய்க்க வேண்டிய அவசியமில்லை.

உங்களுக்கு கிடைக்கும்

- Benefit Cheques
- Inland Revenue
- Insurance Refund
- Wages
- Commissions
- Lottery Winning Cheques
- A/C payee

இவற்றை 4% - 6% வரையான கட்டணத்துடன் உடனே பணமாக்கிக் கொள்ள அழையுங்கள்.

020 7243 1417

முகவர்கள் தேவை

பிரித்தானியாவின் எந்த மூலையில் நீங்கள் வர்த்தக நிறுவனம் வைத்திருந்தாலும் நீங்களும் முகவர் ஆகலாம்.

உடன் தொடர்பு கொள்ளவும்

020 7243 1417



Cheque Line

31, Queens Way, London, W2 4QJ.

# சங்கமம் - கோடை விழா

























தென் லண்டன் தமிழர் நலன் நிறை அமைப்பு நடாத்திய சங்கமம் நிகழ்வுகள் கடந்த 5ம் திகதி இடம்பெற்றன. நிகழ்வில் தமிழர் பாரம்பரிய விளையாட்டுக்கள், திறந்தவெளி அரங்க நடன, நாட்டியப் போட்டிகள் மற்றும் பல்வேறு பல் சமூக விளையாட்டுப் போட்டிகளும் இடம்பெற்றன. இதில் பல்வேறு சமூகத்தவர்களும் கலந்து கொண்டனர். இறுதியில் இன்னிசை நிகழ்வும் இடம்பெற்றது நிகழ்வுகளின் போது எடுக்கப்பட்ட படங்களையே காண்கிறீர்கள்.

# கேபியின்ட ஆக்கள் காசு கேக்கினம்

*தலைவனின் சொல்லுக்காக தங்கள் வாழ்வை முழுமையாக அர்ப்பணித்த மாவீரர்களின் வழித் தோன்றல்களான போராளிகள் இன்று திக்குச் திசை தெரியாமல் சிறைகளில் வாடிக் கொண்டிருக்கிறார்கள். அதே போல இந்தப் போராட்டத்தைத் தாங்கிப் பிடித்த மக்கள் வாழ்வதற்கு வழி தெரியாமல் அல்லற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்களின் அடிப்படை வாழ்விற்கான தேவைகளை நிறைவேற்றுவதே எமது தற்போதைய தலையாய கடமை என்றும், இவர்கள் புலம் பெயர்ந்த உறவுகளை தங்கள் வாழ்வின் விடிவெள்ளிகளாக நினைத்துக் காத்திருக்கும் இவ்வேளையில், நாம் இவர்களது அன்றாட வாழ்விற்குத் திரும்ப உதவி செய்யாவிட்டால் நாம் தமிழராய் பிறந்ததில் பலனேயில்லையென கேபியின் கனடாக் கிளை பொறுப்பாளர் திரு. இன்பம் பேரின்பநாயகம் குறிப்பிட்டார்.*

## மக்கள் கருத்து

இந்த முதல் வரியிலயே திருகுதாளம் விளங்குது. இந்தப் போராளிகள் சிறையில வாடுறதுக்கு எந்த அரசாங்கம் காரணமோ அந்த அரசாங்கத்தோடு வேலை செய்யிறவை வேறை இடத்தில நிண்டு கொண்டு புலம்புகினம். இது இந்தியாவில் ஆளுங்கட்சி உறுப்பினர்களே சில முக்கிய பிரச்சினைகளில் உண்ணாவிரதம் என்று சொல்லி பிரச்சினையைத் திசை திருப்ப முனைவதற்கு ஒப்பானது. அதிகாரம் உள்ள நீங்கள் போராளிகளை வெளியே எடுக்கலாமே.. எதற்கு வெளிநாட்டில் நின்று புலம்புகிறீர்கள்?

*- இசைக் கலைஞன்*

இந்த இளைஞர் யுவதிகளின் எதிர்காலம் அரசின் கையிலேயே தங்கியுள்ளது. ஆனால் அரசு தனது சொந்த நிதியில் இவர்களை முற்று முழுதாக புதிய வாழ்விற்கு தயார் படுத்த தயாரில்லை. போரின் பங்காளிகளாக புலம் பெயர்ந்தவர்களும் இருந்ததால் அவர்களை பங்களிக்குமாறு அரசு கூறுகிறது.

*- பொண்ட் 007*

ஒட்டுக் குழுக்கள் மற்றும் சிறீலங்கா அரசாங்கத்தின் கடந்த கால அறிக்கைகளின்படி புலிகள் தமிழ் மக்களைப் பணயக் கைதிகளாக வைத்திருந்தார்கள். வன்னியில் நேரடியானதாகவும், தாயகத்தின் பிற பகுதிகளில் மறைமுகமானதாகவும் இந்த அச்சுறுத்தல் இருந்ததாகக் கூறினார்கள். வெளிநாடுகளிலும் புலிகளின் முகவர்களின் தொல்லை என்று கூறப்பட்டது. அதாவது புலிகளுக்கு தமிழர்களின் ஆதரவு இருந்திருக்கவில்லை என்றும் அது ஒரு பயங்கரவாதப் பிரச்சினை என்றும் கூறப்பட்டது.

இப்போது திடீரென்று போரின் பங்காளிகள் புலம்பெயர் தமிழர் என்று சொன்னால் அதை ஏற்றுக் கொள்ள முடியாது. எம்மைப் பொறுத்த வரையில், புலிப் பயங்கரவாதத்திலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறோம். சரணடைந்த போராளிகளுக்குப் புனர்வாழ்வு அளிக்க வேண்டியது சிங்கள அரசின் பொறுப்பாகும். அதே சமயத்தில் புலம்பெயர் தமிழராகிய நாம் புலிப் பயங்கரவாதத்திலிருந்து எம்மை விடுவித்த அரசுக்கு நன்றி கூறுகிறோம்.

அதே சமயத்தில் புலிப் பயங்கரவாதத்திலிருந்து முன்னரே எம்மைக் காக்கத் தவறிய சிங்கள அரசின் மீது சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குப் போட புலம் பெயர் தமிழர்கள் தயாராக இருக்கிறார்கள். எமது புலம் பெயர்வுக்கு காரணம் சிங்கள அரசின் கையாலாகாத்தனம். இதற்கு வழக்குப் போடுவதுதான் சரியான வழி..!

*- இசைக் கலைஞன்*

அண்ணை தயவு செய்து எனக்கு தெரிந்த ஏராளமான போராளிகள் உள்ளை இருக்கினம் அவையை வெளியிலை எடுத்து விட்டியள் எண்டால் நான் அவர்களுக்கான உதவியை எனக்கு தெரிஞ்சவையோடை சேர்ந்து செய்து நல்ல வாழ்வை அமைச்சு குடுப்பன்...! இப்படி பொறுப்பு எடுக்க எனக்கு தெரிஞ்ச நிறையப் பேர்களும் அவர்களின் சொந்தங்களும் இருக்கினம்... நீங்கள் செய்ய வேண்டியது ஒண்டுதான் அவர்களை வெளியிலை விடுவியுங்கோ...!

குறைஞ்சது வெளியிலை இருக்கும் ஆக்கள் பொறுப்பெடுக்க தயாராக இருக்கும் போராளிகளையாவது உடனடியாக வெளியிலை விடுவியுங்கோ....! தலைக்கு என்ன விலை எண்டு சொன்னியள் எண்டாலும் பறவாய் இல்லை...!

காசை கொண்டு வந்து உங்களிட்டை தந்தால் தான் காப்பாத்துவியள் எண்டால் அதுக்கு பெயர் உதவி இல்லையண்ணோய்...

*- தயா*

பிரித்தானியா
TEL: 020 7043 4315 FAX : 020 7043 4312
உங்கள் வாழ்க்கைத் துணையை
தேர்ந்தெடுக்க வேண்டுமா?
TEL: 647 724 4188 FAX : 416 438 7855
கனடா
www.orumanam.com


## ஸ்ரீ கற்பக விநாயகர்ஆலய தேர்த் திருவிழா நிகழ்வுகள்











வோல்தம்ரோ அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய ஒன்பதாவது வருட தேர்த்திருவிழா நிகழ்வுகள் கடந்த 12ம் திகதி இடம்பெற்றது. நிகழ்வுகளின் படங்களையே நீங்கள் காண்கிறீர்கள்

## நடக்க இருக்கும் நிகழ்வுகள்

**Sept 18 SATURDAY @ 10.30**

Education Exhibition 2010

Indian Schools Education Exhibition and Spot admission for school education.

நேரம்: காலை10.30 - மாலை 7.00

இடம்: Sheraton Skyline hotel, London Heathrow, Bath Road (A4), Hayes, UB3 5BP

**Sept 19 SUNDAY @ 09:00**

திருமஞ்சன தீர்த்தத் திருவிழா

ஆவணி சதுர்த்தியை முன்னிட்டு வோல்தம்ரோ அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சதுர்த்தி கலாரூப விநாயகர் நிமஜ்ஜன தீர்த்தத் திருவிழா.

இடம்: Claction On Sea

(வாகன ஒழுங்குகள் செய்யப்படும்)

Contact: 020 8527 3819

**Sept 25 SATURDAY @ 16:00**

S.P.B Live Concert

பத்மஸ்ரீ S.P.பாலசுப்ரமணியம், பத்மஸ்ரீ சித்திரா மற்றும் பாடகர் கார்த்திக் ஆகியோர் கலந்து கொள்ளும் இன்னிசை நிகழ்ச்சி.

நேரம்: மாலை 4:00 மணி

இடம்: Symphony Hall, Birmingh

தொடர்புகளுக்கு: 07886 293433

**Oct 03 SUNDAY @ 17:30**

எழுச்சி வணக்க மாலை

தியாக தீபம் திலீபன், குமரப்பா, புலேந்திரன் உட்பட மண்ணுக்காய் தம்முயிர் நீத்த அனைவரினதும் நினைவாக இடம்பெறும் வணக்க நிகழ்வு.

இடம்: Merton Hall, 78, Kingston Road, London, SW19 1LA

Contact: 078 783 889 49


RAM

SALES LETTINGS MANAGEMENT MORTGAGES



"We are looking for all sorts of properties for our awaiting professional tenants"

LANDLORDS

"Are you looking for a professional agent who would be able to assist you with selling or renting your property?"



"We are currently looking for a properties in East London"

Call Us On: 020 8550 8788

E-Mail: contact@ramestateagent.com
Log on: www.ramestateagent.com

713 Cranbrook Road, Gants Hill, Ilford, Essex, IG2 6RJ



AA ACCOUNTANCY SERVICES
Accountants & Business Consultants
Providing Professional Services Since 1996

மிகக்குறைந்த கட்டணம் - மனம் நிறைந்த சேவை
உங்கள் சேவையில் 14 வருட காலத்துக்கு மேலாக.

Free Business Start Up Package

- Free company formation • Free initial start up advice
- Free same say bank account * ( * subject to status & conditions. Call us for details )

சேவைகள் எம்முடன் இணையும் நாளிலிருந்து 3 மாத காலத்துக்கு இலவசமாக வழங்கப்படும்.

புதிதாக வியாபாரம் ஆரம்பிக்க எண்ணுகிறீர்களா? அல்லது ஏற்கனவே உங்களுக்கு இருக்கும் கணக்காளரை மாற்ற ஆலோசிக்கிறீர்களா? கவலை வேண்டாம். நீங்கள் தற்போது செலுத்தும் மொத்த கட்டணத்தில் கழிவுடன் நாம் சேவைகளை வழங்குவோம். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இதற்கான அனுமதியை எமக்கு தருவதுதான், எந்த தடங்கலும் இன்றி மாற்றும் பொறுப்பை நாமே ஏற்போம். சட்டரீதியான வரிக்குறைப்பு மூலம் உங்கள் பணத்தை மீதப்படுத்துவோம். முன்னரே நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் (Fixed Fees) என்பதால் மேலதீக கட்டணச்செலவு உங்களுக்கு ஏதுமில்லை.

☐ VAT ☐ Book-keeping ☐ Payroll ☐ Company Tax Returns ☐ Business Plans
☐ Business Start Up Advice ☐ Personal Tax Returns ☐ CIS Vouchers & Refunds
☐ Offshore Companies ☐ Bank Accounts ☐ Year End Accounts ☐ Company Formation

மற்றும் உங்கள் மோட்கேஜ் ஒழுங்குகள் (Mortgages), மற்றும் காப்புறுதி (Insurance), கடன் ஒழுங்குகள் (Personal/Secured Loans/Business Loans), போன்ற சேவைகளையும் ஒழுங்கமைத்து தர காத்திருக்கிறோம்.

Whether you are sole trader or running a limited company or in a partnership, let us take the workload off you so that you can concentrate on your business.

We will save you money not only by charging you low fees and but also by advising you on legitimate tax cuts.

இலவசமாக உடன் அழையுங்கள்:

FREE PHONE: 0800 085 2908 (OR 020 8422 3700)

MOBILE: 07916 177 513 (Any time)

Mr P E Anantharaj

E: adorafinancial@aol.com W: www.adorafs.co.uk/aaaccountancy
ADORAH HOUSE, 4 SCARSDALE ROAD, HARROW, MIDDLESEX, HA2 8LW

# நான் ஒரு சுழியன்



*83ம் ஆண்டு அகதி தஞ்சம் நிராகரிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்படும் நிலையில் கீத்றோ விமான நிலையத்தில் அவுத்துப் போட்டு ஆடிய நம் உறவுகள்.*

'அடோ என்ன ரோட்டில நிக்குது ஒடு ஒடு வீட்டுக்கு'என்று பொலிஸ்க்காரன் அரை குறை தமிழில் திட்டி பொல்லால் அடிப்பது போல கிட்ட வர எடுத்தோம் ஒட்டம்.அவன் போனபிறகு மீண்டும் ஒன்று கூடினோம். இவன் சிங்களவன் எங்கன்ட இடத்தில வந்து சண்டித்தனம் காட்டுறான் ,உவங்களுக்கு வெடி வச்சாத்தான் சரி என்று வீரவசனம் பேச கூட நின்ற எனையவர்களும் சேர்ந்து சம்மதிப்பது போல உசார் ஏத்தினார்கள்.

நாங்கள் ஒன்று கூடுவதும் பொலிஸ் ஜீப்பை கண்டால் ஒடி ஒழிப்பதுமாக காலங்கள் சென்றன. சிவாவை சில நாட்களாக காண வில்லை, என்ன நடந்தது என்று புரியாமல் இருந்தோம், அவன் இயக்கத்தில சேர்திட்டா னாம் என்று குமார் சொன்னான், ஆனால் நணபர்களால் நம்பமுடியவில்லை.

ஒருநாள் இரவு 9 மணியளவில் வீட்டை வந்தான், உந்த சிங்களவனுக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேணும், அதற்கு நாங்கள் ஒரு இயக்கமாக இயங்க வேண்டும் முதலில் ஆட்கள் ஒன்று சேரவேணும் பின்பு ஆயுதம் வாங்கி எம்மை பலப்படுத்த வேணும் என்ற வன்,என்னை வந்து இயக்கத்தில் இணையும் படி கேட்டான்.

போராட வந்திடுவேன் ஆனால் பல்கலை கழகத்திற்கு அனுமதி கிடைச்சிருக்கு மச்சான் போய் படிப்பை முடித்துவிட்டு கட்டாயம் இயக்கத்தில் வந்து இணைந்து கொள்வேன் எனசொல்லி அவனை சுழிச்சு விட்டேன். பிறகு அவனை சந்திப்பதை கூடியளவு தவிர்த்தேன். நான் அவனை புறக்கணிப்பது அவனுக்கு புரிந்தபடியால என்னை சந்திக்க வாராதை தவிர்த்திக் கொண்டான்.

யாழ் பல்கலைகழகத்தில் படித்துக் கொண்டி ருக்கும் பொழுது எதிர்பாரத விதமாக சிவாவை சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. மச்சான் நீ நேற்று விடுதலை, சமதர்மம் போன்ற விடயங்களை பற்றி மேடையில் பேசினாய் நானும் கேட்டுக் கொண்டிருந்தேன் மிகவும் நல்லாய்யிருந்தது. அவற்றை நடைமுறை படுத்துவதற்கு செயல் வடிவம் கொடுக்க வேணும், மேடை பேச்சுகளால் ஒன்றும் செய்ய முடியாது என விளக்கம் கொடுக்க தொடங்க, மச்சான் எனக்கு விரிவுரைக்கு நேரமாகுது என்று பொய் சொல்லி அவனை மீண்டும் சுழிச்சுப் போட்டேன்.

இவனுடன் தொடர்புகளை வைத்திருக்கக் கூடாது என்று கொழும்பு பல்கலைகழகத்திற்கு அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி மாற்ற லாகி செல்வதற்கான ஏற்பாடுகளை செய்து கொண்டிருக்கும் பொழுது, மச்சான் நீ சுழியண்டா என்ற குரல் கேட்டு திரும்பினே ன், சிவா நின்றான். ஏன்டாப்பா அப்படி சொல்லுகிறாய், கொழும்புக்கு போகிராயாம், ஒம்டாப்பா இங்கு இருந்தா படிச்சு முடிக்க ஏலாது, ஒரே பகிஷ்கரிப்பும் ஒரே பிரச்சனை யாக இருக்குது அதுதான் கொழும்புக்கு போய் படிப்பை முடித்து விட்டு இங்கு திரும்பி வந்து எங்கன்ட சனத்திற்கு உதவலாம் என்று நினைக்கிறேன். சிவா தான் அடுத்த கிழமை இந்தியாவுக்கு போவதாக சொல்லி விடை பெற்றான்.

'படிப்பு முடிந்தவுடன், ஏன் யாழ்ப்பாணத் திற்கு இந்த பிரச்சனகளுக்கு மத்தியில் போவான் கொழும்பில் ஒரு வேலையை பார்ப்போம் என்ற முடிவுடன், வேலை தேடும் படலம் ஆரம்பமானது. வேலையும் கிடைத்தது. கொழும்பு பல்கலைக் கழகத்தில் பழகிய சிங்கள பெண்னின் நட்பு காதலாக மாற இரு வரும் நெருங்கி பழகும் வாய்ப்புக்கள் அதிக மாகின. பஸ்கள், ரயில்கள், பீச், சினிமா என ஒன்றாக திரிந்தோம். இதை கண்ட ஊர்க்காரன் ஒருவன் எனது பெற்றொருக்கு சொல்ல, அப்பா ரயில் பிடித்து கொழும்பு வந்து சேர்ந்தார்.

## 23 வருடங்களின் பின்பு குடும்பம் சகிதமாக யாழ் மண்னை தரிசிக்க சென்றேன். ஊர் கோவிலுக்கு முதலில் சென்றேன்.

அண்ணை உன்னை நோர்வேக்கு கூப்பிடு கிறானாம் நீ பாஸ்போர்ட் எடுத்து ரெடியாக இரு, அடுத்த கிழமை நோர்வே எம்பசிக்கு இன்டர்வியுக்கு போகவேணும் உனது போஸ்ட் கிரயுவேட்டை அங்க போய் செய் என்றார். இப்ப என்ன அவசரம் இங்க வேலை செய்யிறன் இங்கயே செய்து முடிக்கலாம் என்றேன். என க்கு தெரியும் நீ ஏன் இங்க இருக்க விரும்பு கிறாய்யென, இங்கு இருக்கிற கதையை விட்டுப்போட்டு வெளிநாடு போய் உருப்படுகிற அலுவலை பார் என்றார்.

அப்பா வந்த நாளில் இருந்து மாலினியை சந்திப்பதை தவிர்த்தேன்.அப்பாவும் ஒரே பிடியாக இருந்து என்னை நோர்வேக்கு அனுப்பி விட்டார். போகும் பொழுது கூட மாலினியை சந்திக்காமல் சுழிச்சுப் போட்டேன்.

புதிய இடம் மொழி வேறு படிக்க வேண்டும் ஒரு மாதிரியாக மொழியை நன்றாக கற்றுக் கொண்டேன். நான் சுழியன் எங்க போனாலும் சுழிச்சுப் போடுவேன். என்னுடைய மண் வாசனை அப்படியுங்கோ. வெள்ளைத் தோல் பெண்களை கண்டவுடன் ஒரு சபலம் ஏற்பட அதற்கு உடந்தையாக ஒருத்தியை நண்பியாக் கிக் கொண்டேன். காதல் பண்ணி கல்யாணம் செய்யலாம் என நினைத்தேன், காமம் பின்பு ஒன்றாக வாழ்ந்து பார்ப்போம் அதன் பின்பு ஒத்து வந்தால் கல்யாணம் என்றாள். நானும் மனதில் இவளை சுழிச்சிப் போடலாம் என்ற எண்ணத்துடன் சம்மதித்தேன். அவள் கல் யாணத்திற்கு சம்மதித்தாள் நான் நாட்டை விட்டு வெளியேறினேன்.

புது நாடு, ஐயா புது மாப்பிள்ளை. உறவுக் காரருக்கு எதுவும் தெரியாது. தமிழ் கலாச் சாரத்துடன் பெண் வேணும் என்று சொல்ல பெற்றோர் தேடிப் பிடித்து பிளேன் ஏத்திவிட்டார் கள். கல்யாயாணமும் நடந்து முடிந்தது

கதை, கட்டுரை என்று எழுத தொடங்கி னேன் முதலில் புலி எதிர்ப்பாக எழுதினேன் வாசகர்கள் படிப்பதாக தெரியவில்லை, உடனே புலி ஆதரவாகவும் தேசியம் சார்பாக இரண்டு கட்டுரை எழுதினேன் பாராட்டுக்கள் குவிந்தன மேடையில் ஏறும் வாய்ப்புக்களும் தானாக தேடிவந்தன. தொடர்ந்து புலி ஆதரவு முகமுடியுடன் எழுதினேன். பயம் காரணமாக புலிகளை சுழிக்க முடியாமல் போய்விட்டது.

முள்ளிவாய்க்காலில் முற்றுப்புள்ளி வைத்து விட்டார்கள் புலிகளுக்கு என்றவுடன், புலிகளை இனி சுழிச்சு போடலாம் என்ற துணிவு ஏற் பட்டது. அப்பே லங்கா என்ற கோசத்துடன் எழுத தொடங்கினேன். பெரும்பான்மையினரின் ஆதரவும் கிடைக்க தொடங்கியது.

23 வருடங்களின் பின்புகுடும்பம் சகிதமாக யாழ் மண்னை தரிசிக்க சென்றேன். ஊர் கோவிலுக்கு முதலில் சென்றேன்.

ஆண்டவா நீ என்னை விட சுழியன், இவ்வளவு பிரச்சனைளுக்கும் தாக்குப் பிடித்து இப்ப வெளிநாட்டுக்காரன் அந்த மாதிரி ஒரு கட்டிடம் கட்டிதந்திருக்கிறான் அனுபவி ராசா அனுபவி என கும்பிட்டு போட்டு திரும்பும் பொழுது,ஒருவர் என்னை விட 10 வயது கூடிய தோற்றத்துடன் காலை நொண்டியபடி சென்ற வர் என்னை 2,3, தடவை பார்த்து போட்டு என்ன ருகே வந்து உங்களுடைய பெயர் கண்ணன் தானே, ஒம் என தலையாட்டினேன்.

உள்ளே ஒரு பயம், வெளிநாட்டில் இருந்து வந்திருக்கிறேன் கடத்தப் போறாங்களோ தெரியவில்லை என முழித்தேன். என்னை தெரியவில்லையடாப்பா வடிவாக பார் என்ற வன், கோவிலை சுற்றி கும்பிட்டு போட்டு வாரன் யோசிச்சு பாருடாப்பா என்று சொல்லி சுற்ற சென்று விட்டான்.

சுற்றி முடிந்து அருகே வந்தவன் மச்சான் நீ சுழியண்டாப்பா என்னை தெரியாத மாதிரி நல்லாய் நடிக்கிறாய், பயப்பிடாதே போராட உன்னை கூப்பிட மாட்டேன் நான் சிவா என்றான். கட்டி அணைத்து நட்பு கொண்டாடினோம். காலுக்கு என்ன நடந்தது டாப்பா என்றேன். 10 வருடங்களுக்கு முதல் தாக்குதல் ஒன்றில் பொழுது காலை இழக்க நேரிட்டத்தா சொன்னான். நல்ல வேளை இவனை சுழிச்சுப் போட்டு வெளிநாடு போனது என்று மனதில் நினைத்து கொண்டு அவனிடமிருந்து விடை பெறும் பொழுது, கோயில் தர்மகர்த்தா ஓடி வந்து புனர் நிர்மாண பணிகளுக்கு இயன்றளவு உதவி செய்யும்படி கேட்டார். உடனே 20 ஆயிரம் என்று சொல்ல பக்கத்தில் நின்ற மனைவி கோயிலுக்கு தானே கேட்கினம் கொஞ்சம் கூடவா கொடுங்கோவன் என்றாள். 50 ஆயிரம் கொடுங்கோ உங்களுடைய 2 மணித்தியால சம்பளம்தானே என பில்டப் கொடுக்க நானும் சம்மதம் என தலையை ஆட்டினேன்.

ஆண்டவனுக்கு ஒரு அஸ்டாங்க நமஸ்காரம் செய்து போட்டு எழுந்தேன் சிவா நொண்டிய படியே நடந்து சென்றான்.

*- புத்தன் (நன்றி யாழ்)*

## புத்தனின் மனைவி சிரிக்கிறாள்...

புத்தனின் மனைவி
பேசுகிறாள்...
புறமுதுகு காட்டி
பேதையாகிறாள்...
புத்தியும் சித்தமும் கலங்கிப் போக
போதையேற்றும் தாசியாய் !

மதி மறைந்த வானில்
மதி மங்கிய நாங்கள்...
மதியாமல் உடைத்தெறிந்த
சமுதாய சடங்குகள் !

அடங்கிக் கிடந்த ஊர் – ஆங்கே
முடங்கிப்போன மனிதர்கள்...
இவர்களுக்கிடையில்
ஊண் தின்னும் காமப் பிடியில்
புத்தனின் மனைவியோடு நான் !

அவிழ்ந்துபோன மார்புக் கச்சை
கலைந்துபோன துகில்
கரைந்துபோன வெட்கம்
காணமல் போன வெண்மதி

புத்தனின் மனைவி
புணர்ந்திருந்தாள்...
சாட்சி சொல்ல சிதறிக் கிடந்தன –
வியர்வைத் துளிகள்;
வெண்முத்து மணிகள்;
அரைஞான் கயிறு;

காந்தர்வ விவாகம்
வேள்வித்தீயாய்
தொடர்ந்து எரிந்துகொண்டிருக்க...

புத்தனின் மனைவி
உணர்ந்திருப்பாள்...
அழிக்கப்பட்ட எம் இனம்
புணரப்பட்ட எம் இனப் பெண்டிர்
கருவறுக்கப்பட்ட எம் குல தாய்மை
வதைக்கப்பட்ட எம் குழந்தைகள்
ஒடுக்கப்பட்ட சமுதாயம்
புதைக்கப்பட்ட உண்மைகள்
எல்லாம்... எல்லாம்...!

ஆணியடித்திருந்த சுவர்ப்படத்தில்
இன்னமும்
சிரித்துக்கொண்டுதான் இருந்தான்
புத்தன் !

நானும் சராசரி மனிதன்தான்
முழுவதுமாக கழுவப்பட்டிருந்தன
என் (ம்) பாவங்கள் !

புத்தனின் மனைவி
சிரிக்கிறாள்...
அடிக்கடி கதறித் துடிக்கிறது
கனவில் –
என் மனம் !

**- விமலன் சிறி**

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

**seven** | zero
graphic designers
020 7043 4319
45B Crusoe Road | Mitcham | Surrey CR4 3LJ



creative artwork from concept to design

## எறும்புகளை வெறுக்கும் யானைகள்



எந்தப் பெரிய கொம்பன் யானையாக இருந்தாலும் இந்தச் சின்னஞ் சிறிய எறும்புக்கு பயமா? இல்லாவிட்டால் தனக்குப் பிடித்தமான அக்காசியா மரங்களையே தட்டிக் கழிப்பதற்கு எப்படி மனம் வரும். அக்காசயா மரங்களில் கூடு கட்டி வாழும் எறும்புக் கூட்டங்கள். யானைப் பசிக்குத் தீனியாகும் மரரங்களை அழியவிடாமல் காப்பதனால் சவானா சமதரைக் காடுகள் பசுமையாக இருப்பதாக, சூழ்நிலை சுற்றுப்புறத்துக்கு ஏற்றவாறு உயிரினங்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். காடுகளை அழிக்கும் காட்டுத்தீ ஒருபுறம் கடும் வெப்பத்தால் தாக்குப்பிடிக்காமல் தள்ளாடும் மரங்கள் மறுபுறம். இதனுடன் சேர்ந்து மரங்களை அழிக்கும் யானைக் கூட்டம். எப்படித் தான் அக்காசியா மரங்கள் மட்டும் தப்பிப் பிழைக்கின்றன என்ற ஆராய்ச்சியில் Gainsville, புளோரிடா பல்கலைக் கழககத்தைச் சேர்ந்த Todd Palmber (ecologist) ஆராய்ச்சியாளர் ஈடுபட்டார்

அனாதரவாக விடப்பட்ட யானைகளுக்கு மறுவாழ்வழிக்கும் கெண்டான் புகலிடத்தில் Wydming பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த Jacob goheen(ecologist) என்பவருடன் கூடி Palmer தனது ஆராய்ச்சிகளை மேற்கொண்டார். அது யானைகளைத் தெரிவுசெய்து, எறும்புகள் கூடு கட்டி வாழ்ந்த் மரக்கிளைகளை, எறும்புகளை நீக்கிவிட்டு, அவைகளுக்குத் தீனியாகப்போட்ட போது எதுவித வெறுப்புமின்றி, அதைச் சந்தோஷமாக பகிர்ந்து கொண்டன. அதே சமயம், எறும்புகளுடன் கூடிய மரக் கிளைகளை அந்த யானைகள் தொட்டுப் பார்க்கவும் மறுத்துவிட்டன. இந்த ஆராய்ச்சியை அடிப்படையாக வைத்து காட்டு மரங்கள் யானைகளால் அழிந்துவிடாமல் காப்பதற்கு எறும்புக் கூட்டங்கள் வீடு கட்டி வாழ்வதற்கு வழி சமைக்கப்பட்டன. ஒரு வருட பரீட்சார்த்த அனுபவத்தில் குறைந்த எறும்புகள் கூடு கட்டியிருந்த மரங்களின் கிளைகள் அதிகளவில் யானைகளால் முறிக்கப்பட்டு சேதம் விளைவிக்கப்பட்டிருந்தன. அதே நேரம், கூடிய எறும்புகள் கூடு கட்டி வாழ்ந்த மரங்கள் எதுவித பாதிப்புமின்றி அழியாமல் இருப்பதை அவதானிக்க முடிந்ததாக ஆராய்சிகள் நிருபிக்கின்றன.

ஆக, இயற்கையின் இயல்பான சுழற்சிக்கு எறும்புகளின் பங்கு எவ்வளவு தூரம் உதவுவதை சூழ்நிலை சுற்றுப்புற ஆர்வலர்கள் வரவேற்பதில் ஆச்சரியம் இல்லை.

## நெரிசலைத் தவிர்க்க முன் எச்சரிக்கை

போக்குவரத்து சாதனங்கள் எத்தனை வந்தாலும் வீதியில் ஏற்படும் நெரிசலில் மாட்டிக் கொண்டால், அதைப்போன்றதோர் மன இறுக்கம் அனுபவப்பட்டவர்களுக்குத் தான் புரியும் இதை எப்படிச் சமாளிக்கலாமென்ற ஒரு எண்ணக்கருவில் உதித்தது தான் IBM வெளியிடவிருக்கும் ஒரு புதிய கண்டுபிடிப்பு.

வீதிப் போக்குவரத்தில் எதிர்பார்க்கும் நெரிசல்களை 1மணி நேரத்துக்கு முன்பாகவே மதிப்பிட்டு அந்த நெரிசல்களில் சிக்கிக்கொள்ளாமல் மாற்று வழிகளைத் தேடிச் செல்ல IBMன் புதிய தொழில்நுட்பம் முன்கூட்டியே தெரிவிக்கும் வாய்ப்புக் கிட்டியுள்ளது.

வீதிகளில் பொருத்தப்பட்டிருக்கும் கமராக்கள், ராக்சிகளில் செயல்படும் GPS வழிகாட்டிகள், சாரதிகளின் தொடர்பாடல் போன்ற பின்புறத் தகவல்களை ஒழுங்குபடுத்தி வீதிகளில் உருவாகப் போகும் நெரிசல்களை 1 மணித்தியாலத்துக்கு முன்பே தீர்மானித்து அவ்வழியே செல்லவிருக்கும் வாகனங்களை உசார்ப் படுத்தி வேறு பாதைகளில் திசை திருப்பிவிட, இப்புதிய தொழில்நுட்பம் உதவப் போகிறது.

இப் புதிய தொழில்நுட்பத்தை சிங்கப்பூர், பின்லாந்து, புதிய கேர்சி ரென்பைக் போன்ற இடங்களில், கூடுதலான போக்குவரத்து நெரிசல்கள் ஏற்படுத்தும் பகுதிகளில் பரீட்சிக்கப்பட்டு வெற்றி அளித்துள்ளதாக IBM நிறுவனத்தினர் தெரிவிக்கின்றனர்

## தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

கணணித் துறையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள தொழில் நுட்பங்களில் அடுத்த ஒருபடியாக அமையப்போகும் இப் புதிய சாதனையை போக்குவரத்து நெரிசல்களில் அவதிப்படும் அன்றாட வீதிப் பாவனையாளர்கள் மனதார வரவேற்பர்.

## நடன நிகழ்வுகள்



மானாட மயிலாட நிகழ்ச்சி, நடனப் பிரியர்களைக் கவர்ந்த சிறந்த ஒளிபரப்பாக பிரபல்யமடைந்து வருவதை தெலைக்காட்சி பார்வையாளர்கள் ஒப்புக் கொள்வர் மயில் ஆடுவதைக் கண்டிருப்பீர்கள். மான் ஆடுவதை யாராவது கண்டிருந்தால் தயவு செய்து சொல்லுங்கப்பா. ஒருவேளை MAN ஆடுவதை மானாட என்று அடுக்கு மொழியில் கூறியிருக்கலாம். அந்தப் பிரச்சினையைப் பெரிது படுத்தாமல் இங்கே MAN ஆடுவதில் கண்டுகொண்ட சில உண்மைகளைப் புட்டு புட்டு வைக்கிறார், நோதம்றியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த Nick Neave என்ற மனோதத்துவ நிபுணர். அரங்கில் ஆண்கள் ஆடும் போது தலையை அக்கம் பக்கம் அசைத்து, உடலை நெளித்து நகர்த்தும் நடனக் காரர்களை பெண்கள் மிகவும் இரசிப்பதாக இவரது ஆய்வுகள் தெளிவூட்டுகின்றன

பெண்களைக் கவர, மனித வர்க்கத்தைச் சேர்ந்த விலங்கினம் மட்டும் இந்தச் சேட்டைகளைச் செய்வதாக நினைக்க வேண்டாம், கடற்கரைகளில் காணும் நண்டுகள், ரீங்காரம் செய்யும் (Humming bird) அழகிய பறவைகள் கூட பெண் இனத்தைக் கவர பல உத்திகளைக் கையாள்வதாகக் கூறுகிறார். பென்னம் பெரிய கண்களை உயர்த்தி ஆண் இன நண்டுகள் பெண் இனத்தைக் கவர படாத பாடு படுவதாக இவருக்கு மட்டும் தெரிந்திருக்கிறது. அது தான் போகட்டும், ரீங்காரம் செய்யும் பறவைகள் கூட பெண் இனத்தைக் கவர பெரியதொரு வட்டமிட்டு, தாளப் பறந்து மூழ்குவதையும் யார்தான் கவனித்தார்கள்.

இரகசியமாக அவதானித்தபோது, கணினிகளில் காட்சிகளாக வரும் அவதார உருவங்களின் நடன நிகழ்வுகளை பெண்கள் கூடுதலாக விரும்புவதாகவும் Nick Neave கூறுகிறார். அதே போன்று அரங்கில் ஆடும் தலை அசைவுகள், கழுத்தின் நெளிவுகள், உடலின் ஒய்யார நடைகள் இவைதான் பெண்களைக் கூடுதலாகக்கவர்ந்ததாக ஆராய்சிகள் கூறுகின்றன. நடனத்தில் வெளிக்காட்டும் நளினங்கள் தான். ஒரு ஆடவனின் உண்மையான பலத்தையும், ஆரோக்கியத்தையும் பறைசாற்றி நிற்பதாக இவ் ஆராய்சியாளர்கள் ஆதாரத்துடன் முன் வைக்கும் போது எவரால் மறுதலிக்க முடியும்.

அது சரி நடனம் தெரியாதவர்கள் ஆரோக்கியமாக இருக்கவில்லையா, பலசாலிகளாக பவனி வரவில்லையா என்று முணுமுணுப்பது கேட்கிறது. நடனத்தின் நகர்வுகள் காலத்திற்கு காலம் மாறி மாறி எந்த ஒளிபரப்பைத் திறந்தாலும் நடன நிகழ்சிகளே பார்வையாளர்களைக் கட்டிப்போட்டு, தொலைக்காட்சி பெட்டிகளுக்கு முன்னால் உட்காரவைப்பது உண்மைதானே?

16 வருட கால அனுபவம்

**L J Legal Advisors**

Legal Advisors & Commissioners for Oaths

**We Specialise in:**



- Asylum and Immigration Matters
- Human rights Applications
- Appeals
- Detention and Bail
- Entry Clearance Application and Appeal
- Injunctions & Judicial Reviews through associate solicitors
- Judicial Reviews
- Work Permits
- EEA Application(Sponsor)
- Student Visa, Visitor's Visa
- Highly Skilled migration Programme
- Naturalisation Applications

V.P. Lingajothy
LLB (Hons), M.Sc., Dip Fms, A.PLL
Principal
Immigration Specialist
E-mail: MRLINGA@AOL.COM

ஐரோப்பிய மனித உரிமைகள் சட்டம் சார்பாக தகுந்த ஆலோசனைகளை இப்போது நாங்கள் வழங்குகிறோம்

முதல் ஆலோசனை இலவசம் (Initial Consultation Free)

நீங்கள் அல்லது உங்கள் உறவினர் இங்கிலாந்திற்கு 2007ம் ஆண்டுக்கு முன்னர் வந்துள்ளார்கள்ளாயின் உடன் தொடர்பு கொள்ளவும்

மிகவும் நம்பிக்கையான வெற்றிகரமான நிறுவனம்.

General Line : 020 8544 9285
Fax : 020 8452 9530

46, High Street
Collierswood
London SW19 2BY
OISC

**Emergency Line : 07771 646 441**

**GYPS Pest Control Services**

லண்டன் மாநகரில் முதல் முதலாக தமிழர்களால் தமிழர்களுக்காக தொடங்கப்பட்ட ஒரே நிறுவனம்







எலி
சுண்டெலி
மூட்டைப்பூச்சி
கரப்பான்
எறும்பு
மற்றும் பல பூச்சிகள்

இவை அனைத்தையும் அழித்து உங்களுக்கு நிரந்தர பாதுகாப்பும் நின்மதியான நித்திரையும் தருவதே எங்கள் சேவை.

உணவகங்கள், கடைகள், மற்றும் தொழிற்சாலைகளுக்கு Monthly or Quarterly Pest control vist மிகவும் மலிவான விலையில் ஆனால் மிகுந்த தரத்துடன் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு

**07983 589 993**
**07723 467 012**

# Training Connect

Tel: 0208 538 0248 WWW.TRAININGCONNECT.CO.UK

Centres across London - Hounslow, Wembley, Kenton, Whitechapel, Hackney, Holloway. Aldershot, Birmingham, Bedford, Leicester, Luton, Newcastle, Slough, Sheffield, Wolverhampton

Head Office: 9th Floor, Vista Centre, 50 Salisbury Road, Hounslow - TW4 6JQ

Our 100% Commitment "You Pay Only Once & We Train You until You Pass – No Retake Fee"
Have successfully trained over 20,000 students | Courses from £200 | Certificates within 20 days

**We are an 'Accredited College' as per UKBA new rule.**

**ESOL with Citizenship**

For All Those Applying for:

- ✓ Extension of Stay Visa
- ✓ Indefinite Leave to Remain (ILR)
- ✓ British Passport / Naturalisation

OR

- ✓ Those failed Life in the UK Test
- ✓ Below Entry Level 3 of English

**International ESOL Diploma**

For All Those Applying for:

- ✓ Tier 1 (Highly Skilled Migrants)
- ✓ Tier 2 (Skilled Migrants)




**Applicants Also Include**
* Religious Ministers *Engineers Chefs *Investors*Sports Persons *Entrepreneurs

Special Offer!!!

Online ESOL Courses Available

Your nearest centre in London:

Hounslow: 9th Floor, Vista Centre, 50 Salisbury Road, Hounslow TW4 6JQ
Kenton: 208 Kenton Road, Harrow HA3 8BX
Wembley: 116 Ealing Road, Wembley HA0 4TH
Holloway Road: 266 – 268 Holloway Rd. N7 6NE
Whitechapel: 4th Floor, 46-92 Whitechapel Rd, London, E1 1JX

Citizenship Courses from only £200



# Mass Global Shipping

MASS GLOBAL SHIPPING

Sea - Air - Road & Ticketing
Serving all the Sri Lankan Communities

Best Rate Guaranteed for Car shipments and 20ft & 40ft Containers



Most professional Sri Lankan Shipping Company in UK

* Packers * Movers * Shippers

WE OFFER THE BEST SERVICES THAN ALL THE OTHER IN THE TRADE!

FREIGHT ONLY £10.00
FREIGHT AND BOX £15.00
(volume 4.5Cu.ft)

4 Collection Points
Harrow,
Watford,
Knightsbridge,
Croydon

Wooden boxes from £9.00

Call 0208 3862314

Local Collection Charge £5.00 up to Hounslow. Within M1 collection charge £15.00 upto Coventry
All other area's we will offer the best rates

*Special rates for Containers and Machinery*

Hot Line 24/7
079 4010 8177

Warehouse address:
1 Bradfield Road (Off Field End Road),
Ruislip HA4 ONU

E-mail: info@massshipping.com
Web: www.massshipping.com



சகல விதமான மோட்டார் வாகன திருத்த வேலைகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய இடம்!

# TR AUTOS

- MOT
- SERVICE
- REPAIRS
- TYRES
- EXHAUSTS
- PRIVATE CARS
- TAXIS
- COMMERCIALS
- ACCIDENT & BODYWORK

**For MOT:**
Please Call **Mr. Tharma**

**020 8540 6537**
**020 7252 4438**

Unit 23, Riverside Business Park
Lyon Road, South Wimbledon, SW19 2RL
Fax: 0207 358 2524
Email: trautos@gmail.com

**£15 Offer**
**MOT Charge**
**Class 4 Car: £54.85**
**Class 7 Car: £58.60**





Elephant & Castle ல்

Complete automotive service and repairs by fully licenced mechanics

111 – 113 Elephant Road
London, SE17 1LB

# இளமை ததும்பும் புலம்பெயர் மூத்தோர்



அண்மையில் இங்கு இடம்பெற்ற மூத்தோர் கலைமாலை நிகழ்வை ரசித்த போது எமது அரிவரி வகுப்புக்கால பாலபாட புத்தகம் நினைவுக்கு வந்தது. உறவு முறை விளக்கப்பாடத்தில் சாய்மனைக் கதிரையில் சாய்ந்தபடி ஒரு பெரியவர் படத்தை பிரசுரித்து தாத்தா என்று எழுதியிருக்கும், ஒரு காலை மடித்த படி பாக்குரலில் பாக்கு இடித்துக் கொண்டிருக்கும் படத்தின் கீழ் பாட்டி எனக் குறிப்பிடப்பட்டிருக்கும். ஊ என்ற எழுத்தை விளக்க உரலின் படத்தை பிரசுரித்து அதன் பயன்பாட்டு விளக்கத்திற்கு அம்மா உரலில் உலக்கையால் மாவிடிக்கும் காட்சி படம் போட்டுக் காட்டப்பட்டிருக்கும்.

தாயகத்தில் நாம் கண்ட அந்த தாத்தா, பாட்டி அப்பம்மா, அம்மம்மா புலம்பெயர் நாட்டின் வசதி வாய்ப்புக்களை பயன்படுத்தி எப்படி தாமும் பயன்பட்டு மற்றவர்களையும் தம் ஆற்றலால் மகிழ்விக்கின்றார்கள் என்பதை இவ்வாறான இந்த மூத்தேர் அமைப்பின் நிகழ்வுகளில் பார்க்கமுடிகிறது. மேற்கு லண்டனில் திறம்பட இயங்கும் மூத்தோர் அமைப்புகளின் கடந்த கால நிகழ்வுகளும் இவற்றை மெய்ப்பித்தன.

காவோலைகள் விழ குருத்தோலை சிரிக்கும் என்பது ஓர் பழமொழி. இங்கு காவோலைகளை முந்த குருத்தோலைகளுக்கு முடியுமா என்ற சவாலைத் தான் இவ்வாறான அமைப்புகள் எழுப்புகின்றன. கிரான்ட் டாட், கிரானி என்கிற ஆங்கில உறவுப் பெயர்களோடு இவர்கள் இங்கு அழைக்கப்படுவதும். அப்பு ஆச்சி என்ற பதங்கள் மறக்கப்பட்டதும் கூட ஒரு கால மாற்றம்.

நாங்கள் எங்கள் அப்பா அம்மாவை ஊரிலிருந்து இங்கு ஸ்பொன்சரில் அழைத்து எங்களோடு வைத்துப் பார்க்கிறோம் என்று நாங்கள் பெருமை பேசுகிறோம்.

ஆனால்கணவன் மனைவி இருவரும் வேலைக்குப் போக வேண்டிய சூழ்நிலைக் கட்டாயத்தில் எங்கள் இருப்புடன் புலம்பெயர் நாடுகள் இருக்கும் நிலையில் எங்கள் பிள்ளைகளைப் பார்க்கவும் அவர்களை பள்ளிக்கு கொண்டு செல்லவும் மீள எடுத்து வரவும் எங்கள் பெற்றோர்களை பயன்படுத்திக் கொள்வதும் எங்கள் உள் நோக்கத்தில் ஒன்று. அன்னையும் பிதாவும் பின்னடிக்கு இடைஞ்சல் என்பது மாதிரி பின்னடிக்கு உதவி என்பதுபுலம்பெயர் நாட்டின் மாற்றமாகக்காணப்படுகிறது.

இவ்வாறாக வந்து எமக்கும் உதவியாக தமக்கும் உல்லாசமாக உயர்வான பயனாக மூத்தோர் அமைப்பு மூலம் தம்மை இனம் காட்டும் புலம்பெயர் நாட்டின் மூத்தோர்களின் மாற்றம் வரவேற்க்கத்தக்கது.

இவ்வாறான மூத்தோர் அமைப்புகளில் பெண்மணிகளே முன்னணி வகிக்கின்றனர். உதாரணமாக கிங்ஸ்ரன் மூத்தோர் அமைப்பில் 89 உறுப்பினர்கள். இவர்களில் ஐவர் மட்டுமே ஆண்கள் என்பது ஏமாற்றம் அளிக்கிறது.

இசை நடன நடிப்புத் திறன்களை வெளிப்படுத்தும் வகையில் இவர்களின் கலைமாலை நிகழ்வுகள் அமைகின்றன. நாட்டிய உடை அலங்காரத்தோடு கூடிய பரதம், குழு நடனம், கும்மி, கோலாட்டம், நாடகம் என ஒவ்வொன்றும் சிறப்பாக அமைவதை டொக்ரர்.நித்தி தலைமையிலான மற்றும் மற்றும் திருமதி.குணா வேலுப்பிள்ளை தலைமையிலான கிழக்கு லண்டனில் இயங்கும் மூத்தோர் அமைப்புகளிலும் பார்க்க முடிந்தது.

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: ப.வை. ஜெயபாலன்

தேக ஆரோக்கியத்தைப் பேணும் யோகா பயிற்ச்சிகளும் சத்துணவு என தாம் தயாரிக்கும் சமபந்தி மதிய போசனமும், பயனான உரையாடல்களும் இவர்களின் வாராந்த அமர்வுகளில் அமைகின்றது.

தமக்குத்தாமே சங்கமமைத்து தம்மை அறக்கட்டளையாக பதிவு செய்து கொண்டு கூட்டாக பயனாக நிதி சேகரிக்கும்முயற்சியிலும் இறங்கி இயங்குவது இந்நாட்டு கவுன்சில்களின் நிதியுதவியைப் பெற்றுக் கொள்வது என இவர்கள் முயற்சிகள் தொடர்கின்றன.

இயலாமையில் கூடிய மூப்பும் நோய் நொடியும் கூடிய மூத்தவர்கள் பராமரிப்பு நிலையங்களில் தங்க வைக்கப்படுவதும் அவர்கள் தனிமையில் வாடுகிறார்களா அல்லது அங்குள்ள சூழ்நிலைகளை அவர்கள் தமக்கு ஏற்றதாக பழக்கப்படுத்திக் கொள்கிறார்களா என்பதும் புலம் பெயர் நாட்டின் மூத்தோர் மேலுள்ள கேள்விக்குறிகளில் ஒன்றுதான்.

பொதுவாக இந்த மகிழ்வான மனநிலையை பெற்றுள்ள புலம்பெயர் நாட்டு மூத்தோர்களோடு எம் தாயக தேசத்து மூத்தோர்கள் நினைவுக்கு வரும்போது கவலை நெஞ்சில் முந்துகிறது. தாயக தேசத்து மூத்தோர் பெறமுடியாத இந்த நிலையில் மகளையோ அல்லது மனைவியோ சார்ந்து வாழ வேண்டிய நிலைப்பாடு ஓய்வூதிய வருமானம் இல்லாத மூத்தோர் நிலை மிகச் சங்கடமாகின்ற பரிதாபம்.

இவை தாயக மூத்தோர் துயரத்தின் முக்கிய தலையினங்கள். சீதனம் என்று தாம் கேட்டதை பிள்ளைகளுக்கு தேசவழமைச்சட்டத்துக்கு அமைய தருவதற்கும் தாயகத்தில் சட்டம் இடமளிக்கின்றது. ஆயினும் தம் இறுதிக் காலம் வரை தாங்கள் தம் வீட்டில் தங்கக் கூடிய சீவிய உரித்து உடையதாக குறிக்கும் அம்சத்தை சேர்த்து சீதனம் வழங்குவதற்கும் அந்த தேச வழமைச் சட்டம் இடமளிக்கிறது.

**அன்னையும் பிதாவும் பின்னடிக்கு இடைஞ்சல் என்பது மாதிரி பின்னடிக்கு உதவி என்பது புலம்பெயர் நாட்டின் மாற்றமாகக் காணப்படுகிறது.**

இந்த நிலைப்பாட்டிலும் விரக்தியோடு அரசாங்கம் அமைக்கும் வயோதிபர் மடங்களில் தம் இறுதிக் காலத்தை கழிக்கும் மூத்தோர் கதைகளும் தயகத்தில் ஏராளம்.

பிள்ளைகள் உதவி தமக்கு இல்லை எனக் கூறி வருவாய்க்காக கிராம சேவகர்உத்தியோக உதவியோடு மாதாந்தம் பிச்சைக் காசு எனக் குறிக்கப்படும் ஒரு சில பத்து ருபாக்களை பெற அலையும் மூத்தோர்களின் நிலையும் தாயகத்தின் பரிதாப நிலைகளில் ஒன்று.

இங்குள்ள இந்த மூத்தோர் அமைப்புகள் தாயகத்தில் துயருருகின்ற மூத்தோர் நிலைப் பாட்டுக்கான மாற்றங்களை ஏற்படுத்த ஏற்றன ஆற்றுமா?

இங்குள்ள அற அமைப்புகளும் இவ்வாறான தாயக மூத்தோர் சேவைக்கு முன்னுரிமை தருமா என்ற கேள்விகள் இந்த வேளையில் நினைவுக்கு வரத்தான் செய்கின்றது.

நீத்தார் நினைவில் ஓர் ஆண்டு

தாயின் மடியில்
05
04
1956



மண்ணில் மடியில்
30
09
2009

அல்போன்ஸ் தம்பிராஜா

ஆண்டு ஒன்று ஆகியது ஆயினும் ஆறவில்லை துக்கம்.
எமக்கு எல்லாமாக இருந்த ஐயா,
உங்களை நினைந்து உருகுகிறோம்.
அமைதியாக உறங்குங்கள்.
ஆழ்ந்த உங்கள் கனவை நிறைவேற்றுவோம்.

துணைவி - சிறிகௌரி
பிள்ளைகள் - நர்மதா, மைக்கேல், சங்கீதா

வீடுகள் வாங்க விற்க வாடகைக்குவிட மற்றும் அனைத்துவித பராமரிப்பு சேவைகளுக்கும் நாடுங்கள்!



WE ARE LOOKING FOR PROPERTIES IN

LANDLORDS
We seek to introduce our property Sales, Lettings and Management to you and we are currently managing properties in your area.

- Brockley
- Catford
- New Cross
- Nunhead
- Peckham
- Penge
- Plumstead
- Croydon
- Sydenham
- Charlton
- Deptford
- Dulwich
- Eltham
- Forest Hill
- Anerley
- Bellingham
- Blackheath
- Camberwell
- Lee
- Ladywell
- Lewisham
- Hither Green
- Downham
- Bromley
- Greenwich

and the surrounding areas

TENANTS
If you are looking for properties within the areas mentioned above, we can help you whether you are Working or receiving Housing Benefit.

FREE MARKET VALUATION

அழையுங்கள்
Sammy, Lee, Kumar or Lux
0208 7788400
(Sydenham)
Web: www.yourperfectmove.co.uk

YOUR PERFECT MOVE

## அடையாளம் காட்டப் போறன்...

ஓல்(O/L) பரீட்சையில்
ஓல் (all) எவ்(F) வந்ததும்
தலை கிறுகிறுக்க அலைந்த போது..
இயக்கத்துக்கு ஓடிடுவானோ..
பயந்தாள் அம்மா.

ஊருக்க வைச்சிருந்தா
உவங்கள் வந்து
இழுத்துக் கொண்டு
போயிடுவாங்கள்
உங்கால உள்ள காணியை
வைச்சிட்டு
அனுப்பிவிடு இவனை
கொழும்புக்கு..
புத்தி சொன்னார் அப்பா.

கொழும்பில
போய் பொடி கெட்டிடும்
உந்த ஊரெல்லாம் போகுது கனடா
அனுப்பிவிடு அங்க..
பத்தாக்குறைக்கு பத்த வைத்தார்
மாமா..!

நானும்
சோதனையில் பெயிலான (fail
ஆன)
சோகம் தீர
புறப்பட்டேன்
தாண்டிக்குளம் தாண்டி
ரொராண்டோ.

வருசம் ஒரு 5 போய் இருக்கும்
நாலு காசு
நாய்படா பாடுபட்டு
வெள்ளைத் தோலிடம்
ஏச்சும் இழிவும் வாங்கி
உழைச்சது தான்..!
அம்மா கேட்டாள்
பொம்பிளை ஒன்று அனுப்பி
வைக்கட்டே..??!

இளமைத் துடிப்பும்
சோடியாய் அலையும்
ரொராண்டோ வீதிகளும்
எனக்குள்ளும் மோகத்தைக் கிளறி
விட
அம்மாவின் கேள்வியில்
நியாயத்தை தேடி..
ஓம் என்றேன்..!

கலியாணம் முடிக்க..
சிறீலங்கா போக ஏலாதாம்
ஏனென்றால் நான் அகதியாம்..
அட கடவுளே
செல் (shell) வந்து அறியா
ஊரை விட்டு ஒரு நாளும்
ஓடினதில்ல..
ஓல் லில பெயிலானதுக்கு
அம்மாக்குப் பயந்து
கோவிலில போய் ஒளிச்சிருந்ததை
தவிர..
எனக்கும் அகதிப் பட்டம்.

பொம்பிளைக்கு ஆசைப்பட்ட மனசு
சிங்கப்பூர் போயாவது
கொண்டு வரத் துடித்தது
அந்த ஊர் மறி ஆட்டை..!
கனடா குளிருக்க
இருந்த பசிக்கு
வேட்டைக்கு அது அவசியம்..
என்று கண்டதால
றிஸ்க்(risk) எடுப்பது
றஸ்கு சாப்பிடுவது போலாச்சு
எனக்கு.

எல்லாம் நல்ல படியா முடிஞ்சு
அவளும் வந்து சேர்ந்தாள்.
மாதம் ஒரு 10 போய் இருக்கும்
யூனியரும் தவழ்ந்தது என் மடியில்.
அதுக்குள்ள
ஊரில பிரச்சனை என்று
அம்மாவும் அப்பாவும் கூட
தங்கையும்
ஓடி வந்துவிட்டனர் கொழும்புக்கு.
ஊரே காலி.

நானும் ஓர் நாள்
தற்செயலாக செய்தி கேட்க..
முள்ளிவாய்க்காலாம்
எண்டாங்கள்..!
என்ர பொடியும்
வெளியுலகம் பார்த்தது இல்ல..
நானும் புலி வால் பிடிச்சு அறிஞ்
சதில்ல..
புறப்பட்டோம்.. போராட என்று
தமிழீழம் கேட்டு..
கட்டினோம் புலிக்கொடி..
காரெல்லாம்.
போதாக்குறைக்கு
பொடிக்கும் மூஞ்சியெல்லாம் புலி
வேசம் வரைஞ்சு..
போட்டோம் கூச்சல்...
விடுப்போடு பொழுது போக்க
புலி ஆதரவும் காட்டி நிற்க..!
நாலு சனம் பார்த்துப் பேச..!

இப்ப எல்லாம் முடிஞ்சு போச்சு
அமைதி வந்திட்டு
அவங்கள் எல்லாம்
செத்துட்டாங்கள்
போற வாற வழியில
வரியும் இல்ல புலியும் இல்ல..
ஆமிக்காரங்கள் இங்கிலீசில
கதைச்சு
எங்கட பிள்ளைகளை கொஞ்சி
மகிழுறாங்கள்
நீயும் கொண்டு போய் காட்டன்....
என்றார்
சுப்பர் மார்க்கட்டில் என்னோட
கூட மாரடிக்கும் மாதகல் மதன்.
போன மாதம் தான்
ஊருக்கு போய் வந்தவராம்.
மதனின் கதை கேட்டதில
எனக்கும் ஊருக்கு போற ஆசை
முளைக்க
சும்மா கிடக்கேலாம
கடைசி நேரத்தில புலிக்கொடி
புடிச்சது
பயமும் வந்து தொலைய..
தயங்கிப் போட்டு

என்ன ஊருக்குப் போவமே
உமக்கும் ஒரு ஆறுதலா இருக்கும்..
மனிசி என்று வந்து
வீட்டுக்கையே இருந்து
எனக்காய் உழைக்கும் அவளையும்
சும்மா கருத்துக் கேட்டன்.

ஓமங்க..
எங்கட பொடிக்கும் ஊர் காட்ட
வேணும்
எனக்கும் அப்பா அம்மாவை
பார்க்க வேணும்..
வாங்கோ போவம்.
ரிக்கட் போடுறதென்றால்
சிறீலங்கன் எயார் லைன்சில
போடுங்கோ..
தமிழ் படம் போடுவாங்களாம்..
எங்கட ஊர் சாப்பாடாம்..
குணம் அன்ரி சொன்னவ..!

அப்ப சரி
நல்லூர் திருவிழாவும்
பார்க்கிற மாதிரி ரிக்கட் போடுறன்..
நீர் இப்பவே ரெடியாகும்
ஊரில உள்ளதுகளுக்கு
சும்மா வெறும் கையோட போக
ஏலுமே
நாலு சாமான் வாங்கிச் சேரும்..
என்ன..!

நாலு சாமான் வாங்கிச் சேர்த்து
நாலு லக்கேஜ் கட்டி ஏத்தி
நானும் கட்டுநாயக்கா தாண்டி
ஊருக்கு போனது தான்..

ஊரெல்லாம் நல்ல கலகலப்பு..
உவங்கள் யாரோ
ஈழம் கேட்டு நாசமாக்கினதை தவிர
சனம் ஸ்கூட்டியில பறக்குதுகள்..
ஆமிகாரன் நின்று விசிலடிச்சு
எங்கட பெட்டையளுக்கு
விளையாட்டு காட்டுறான்
என்ன ஒரு பொழுதுபோக்கு
என்ன ஒரு இன ஐக்கியம்..!

கொழும்பில பார்த்த சிங்களம்
மணிக்கூட்டு கோபுரத்தில ஏறி
நிற்குது..
மருதானையில பார்த்த புத்தர்
சிலை..
மருதனார் மடத்திலும் இப்ப
இருக்குது..
பஸ்ஸில பார்த்த ஆமத்துறு
ஆரிய குளத்தில குளிக்கிறான்..!
என்ர பொடிக்கு
உதுகள் தான் எங்கட
அடையாளங்கள்
காட்டின திருப்தியோட
கல்வியங்காடு தாண்டி வரேக்க
சொன்னன்..
இதுதான்
செங்குந்தா இந்துக் கல்லூரி
இங்க தான் நான் படிச்சது.
பொடியும் கேட்டான்
அதென்ன செங்குந்தா என்றால்
அது அந்த ஊரில இருந்த சாதி
அதென்னப்பா சாதி என்றால்..
காட்டுறன் வா..
அழைச்சுக் கொண்டு
யாழ்ப்பாணச் சாதியெல்லாம்
காட்டிப் போட்டு..
கடைசில..
விடை பெற்றோம்..
கனடாவுக்கு..!

லக்கேச்சுக்கு மேல..
காவுகின்றோம் கனக்க
தலை நிறைய...!
அடுத்த தலைமுறைக்கு
அடையாளமாய் காட்ட..!
அதோட அடுத்த முறைக்கு வரேக்க
கண்டிக்கும் போக வேணும்..
அதுவும் எங்கட நாடு தான்
என்றேன் பெருமையோடு
என்ர பொடிக்கு.

அது சரி
உவங்கள் உந்த சீமேந்து இல்லாத
காலத்திலும்
சக்கரையும் சுண்ணாம்பும் போட்டு
கட்டினது
மாவீரர் இல்லங்கள் எண்டாங்கள்
அதுகளைக் காணவே கிடைக்கல்ல..
ஓடேக்க இடிச்சிருப்பாங்கள் போல..!

இப்ப ஆமிக்காரன்
நல்லாத்தான் வைச்சிருக்கிறான்
ஊரை..
ஓல் லில சமூகக் கல்வியில..
படிச்சதை வைச்சு
எவ் எடுத்ததில..
உதயமான அரசியல்
ஞானம்..
ஆராய்ச்சி செய்து கண்ட
உண்மை இது.

ஊரில அமைதி வந்திட்டு
சுதந்திரம் கிடைச்சிட்டு..
சரி எல்லாரும் வாங்கோ
ஒருக்காலாவது
சிறீலங்கன் எயார் லைன்ஸ் ஏறி
எங்கடையளுக்கு
அடையாளம் காட்ட
ஊருக்குப் போவம்
இதுவே கனடாவில
என்ர அரசியல் பிரச்சாரம் இன்று..!

- நெடுக்காலபோவான் (யாழில்)

## நமோ நமோ மாதா நம்மட மாதா...

களனி கங்கையின் இசை நிலவிலே
பௌத்த நாட்டிளம் பெண்களுடனே
சுந்தர சிங்களத்தில் பாட்டிசைத்து
ரயில், பஸ் ஓட்டி விளையாடிடுவோம்

யாழ்ப்பாணத்து செம்மண் புறத்து
பனம்பண்டம்
புளத்சிங்கள வெத்திலைக்கு மாறு
பண்டம்
முஸ்லிம் மக்களின் கவிதை கொண்டு
அரபிய தொப்பிகளை பரிசளிப்போம்

புலத்து தமிழருக்கோர் பாலம்
அமைப்போம்
இணையத்தை பலப்படுத்தி உறவு
சமைப்போம்
மகாவலியில் ஓடிவரும்
நிரின்மிகையால்
எல்லா மாவட்டங்களிலும் பயிர்
செய்திடுவோம்

மலையகத்தில் தேயிலை பயிரிடுவோம்
வெளிநாட்டுக்கு ஏற்றியிடுவோம்
மட்டுநகரில் கருவாடு காயவைப்போம்
தொப்புள் கொடி உறவுகளுக்கு பார்சல்
பண்ணிடுவோம்

ஆயுதம் செய்வோம் நல்ல குடியேற்றம்
செய்வோம்
விகாரைகள் வைப்போம் அகதி முகாம்
வைப்போம்
சீனாக்காரனுக்கு துறைமுகம்
கொடுப்போம்
இந்தியாக்காரனுக்கு காதில நல்லாய் பூ
வைப்போம்

பொய்கள் சொல்வோம் கொலைகள்
செய்வோம்
சர்வதேசத்திற்கு சவால் விடுவோம்
ஐக்கிய நாடுகள் சபைக்கு வழக்கு
போடுவோம்
நமோ நமோ மாதா நம்மட மாதா...

*சிங்கள பாரதியார் எழுதிய கவிதை*

- புத்தன் (யாழில்)



என்னித் துணிவோம் !
ஒன்றிணைந்து எழுவோம் !
இலக்கை வெல்வோம் !
அனைத்துயை உயிரோடை - தமிழ்
Daily Broadcast on Spectrum Radio
MW558
From 6.02pm until 8.58pm
To listen online: http://www.ilctamil.com
ILC Tamil . INTERNATIONAL LIVE CHANNEL
Contact us on:
0207 019 75 12 / 0796 323 11 95
E-mail: radio@ilctamil.com
iLC Tamil
அனைத்துயை உயிரோடை தமிழ்



# அழுகிறேன் நான்!

எப்பொழுதுமே அவ்வாறு தான் சொல்லி வருகிறோம் 'நாம் ஒரு இக்கட்டான காலகட்டத்தில் இருக்கிறோம்.' இவ்வாறு சொன்னது இன்று நேற்று அல்ல. 1983 யூலை தமிழ் இன அழிப்பிற்கு பிறகு பலராலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் சொல்லப்பட்டு வந்தது. உண்மையில் இந்த வாக்கியம் ஈழத்தமிழரை நிழல் போலத் தொடர்ந்து வருகிறது. இலங்கை சுதந்திரமடைந்த 1948ஆம் ஆண்டிலிருந்து அரசியல் ஈழத்தமிழரை இவ்வாறு தான் அலைக்கழிக்கிறது.

கோபமும் வேதனையும் குமுறிக் கொண்டே என்னுள் கிடக்கின்றன. விருத்தெரிந்த காலம் முதற் கொண்டு சுதந்திரம் மறுக்கப்பட்டவனாகவே வாழ்கிறேன். என் உயிர்பிரிகிற வரைக்கும் எனக்கு இதுதான் விதிக்கப்பட்டிருக்கிறது. நான் என்று அல்ல இலங்கையில் தமிழர்களாகப் பிறந்த அனைவருக்குமே இதுதான் விதிக்கப்பட்டிருக்கிறது. அதை உணர்ந்தோர் பலர் உணராதோர் வெகு சிலர்.

எனக்கு நம்பிக்கை இருந்தது. சுதந்திரமடைந்த ஓர் இனத்தின் ஒரு மகனாகச் சாவேன். உண்மையில் அதனை நம்பினேன். அந்த நம்பிக்கையை காலம் ஈவிரக்கமில்லாமல் அழித்தது. 2009 மே மாதத்தின் பிறகு நம்பிக்கை தரத் தக்க எந்தச் சொல்லும் எம்மிடம் இல்லை. என்னை நான் தேற்றிக் கொண்டிருந்தேன். வெளிச்சப் பொட்டுத் தெரிகிறது, காலம் வரும் என்றெல்லாம் சேரனின் பாடலொன்றை அப்போது முணுமுணுத்தேன்.

'காலம் மாறும்
காற்றில் உதிரும் பூக்களின் மீதோரு பாடல்
காலம் மாறும்
துயரம் படிந்த முகங்களை இனிநாம் வேண்டோம்
காலம் மாறும்'

எனது கேவலையும் விம்மலையம் இந்தப்பாடல் மேலும் அதிகரிக்கச் செய்தது. எனக்கு ஆறுதல் சொன்ன எவையும் என்னை ஆற்றுப்படுத்தவில்லை.

சுதந்திரத் தாகம் கொண்டோர் ஏந்திய ஆயுதங்கள் சீறுகிற ஒவ்வொரு கணமும் விடுதலைக்கான நாளை நம்மினை நோக்கி நகர்த்துகிறார்கள் என நம்பினேன். அது உண்மையும் கூட. வன்ம மனமுடைய சிங்களத்துக்கு முன் மிக எளியோராய்த் தான் நாம் இருந்தோம். ஓநாய்களுக்கு முன் வெறும் சின்ன ஆட்டுக் குட்டிகள் ஆயினும் அடக்குமுறையை ஏற்காத அராஜகத்துக்கு தலைவணங்காத தியாகத்துக்கு தயங்காத மக்களை வெறும் துப்பாக்கிகள் மெளனப்படுத்தி விட முடியாது.

ஆனால் போராளிகளின் கைகள் ஏந்திய கருவிகள் ஆட்டுக் குட்டிகள் சுதந்திரமாகத் துள்ளித்திரிவதற்காக ஓநாய்களின் காதுகளுக்குள் குண்டு வைத்தது. அதுவே பயமில்லாத வாழ்வைத் தந்தது. பயத்துடன் வாழும் வாழ்க்கை மகா கொடிது. எதற்கும் பயம். அடக்கு முறையாளன் அதனைத் தான் முதலில் உண்டாக்குவான் பயத்திலிருந்து விடுபடுதல் தான் மனித வாழ்வின் உன்னதமென்பேன். கணவனிடமிருந்து மனைவியோ பெற்றோரிடமிருந்து பிள்ளைகளோ ஒரு மனிதரிலிருந்து ஏனைய மனிதர்களோ பயமில்லாத வாழ்வு வாழவேண்டும்.

ஆனால் என்ன நடந்தது மேலும் மேலும் பயந்த வாழ்வை காலம் எம்மீது திணித்தது. ஓர் இரவிற்குள்ளாகவே மரத்திலிருந்து அனைத்து இலைகளும் உதிர்ந்து விட்டன.

யாவற்றையும் மீட்டுப் பார்க்கிறேன். என் வெப்பியாரம் தீரவில்லை தீராது எங்கு தவறு விட்டோம்? எப்படி அத்தவறு நேர்ந்தது? நமது தேசியத் தலைவர் ஒரு செவ்வியில் கூறினார். 'ஜே.ஆர் ஜேவர்த்தன உண்மையான பெளத்தனாக இருந்திருந்தால் நான் ஆயுதம் தூக்க வேண்டிய தேவை வந்திருக்காது' மகா உண்மை ஒன்றை தன் எளிய சிறிய சொற்களால் தலைவர் தெரிவித்தார். காரணம் தெரிந்தவர், களத்தில் நின்றவர், ஓர்மமாய் நின்றவர், ஒரு சொட்டும் விட்டுக்கொடாதவர். அவரின் தோளில் ஏன் அத்தனை பாரம் பொறிந்தது. ஈழத்தின் உணர்வையும் உரிமையையும் ஆன்மாவையும் இறைமையையும் தன் தோளில் தூக்கினாரே நெஞ்சினில் சுமந்தாரே? ஏன் காலம் அத்தனையும் கொண்டு வந்து அவரிடம் கொட்டியது?

அவருக்கு முன்வந்த தமிழ் தலைமைகள் யாவும் தீர்க்கமான பார்வை கொண்டவர்களாக இல்லை தொலை நோக்கு என்பதே கிடையாது. தமது வழமையான தொழிலைப்புரிந்து கொண்டு பகுதிநேரமாக அரசியலைப் பார்ப்பவர்கள் தான் அவர்கள் .அந்த அரசியலும் மேட்டுக்குடி அரசியல். தமழ்த் தேசியத்தை தமிழ்த்தேசத்து இறைமையை புரிந்தவர்களாக அவர்கள் இல்லை. இலங்கை என்ற ஒற்றை நாட்டுக்குள் ஒன்றுபட்டு பிரச்சினையைத் தீர்க்கலாம் என்பது தான் அவர்களது அரசியல்.

## இரவி அருணாசலம்

**எழுதுவது என்னவெனில்**

இப்போதுள்ள பாக்கிஸ்தானும் பங்களாதேசும் இந்தியாவும் இணைந்தது தான் அப்போதைய பாரதம். அத்தேசத்தை பிரித்தானியர் அடிமைப்படுத்தி ஆண்டனர். பாரதத்துக்கான சுதந்திரப் போரில் காந்தி, சுபாஸ் சந்திர போஸ், ஜின்னா, நேரு போன்ற தலைவர்கள் ஈடுபட்டனர் 1947ம் ஆண்டு பாரதத்துக்கு சுதந்திரம் கொடுக்க பிரித்தானியா தீர்மானித்தது. ஜின்னா சொல்கிறார் 'இஸ்லாமியருக்கு பாக்கிஸ்தான் என்ற பெயரால் பிரிந்து இரண்டு தேசங்களுக்கும் சுதந்திரம் வேண்டும்.

இதில் காந்திக்கோ நேருவுக்கோ ஒப்புதல் இல்லை காந்தி சொல்கிறார் 'பாரதத்தைத் துண்டாட வேண்டாம். சுதந்திரமடைந்த பாரதத்துக்கு ஜின்னாவே பிரதமராக இருக்கட்டும்' பாரதம் துண்டாடப்படக் கூடாது என்று விரும்பிய நேரு இசுலாமியரான ஜின்னா பிரதமராவதையும் விரும்பவில்லை. ஆனால் ஜின்னா இவையொன்றிற்கும் மசியவில்லை. தன் இனத்தின் மீதான ஆழ்ந்த அக்கறை இருந்தது. மேலும் தீர்க்கமான தொலைநோக்குப் பார்வையும் இருந்தது ஜின்னா சொன்னார் 'காந்தி நல்லவர் தான் ஆனால் காலம் அப்படியல்ல காந்திக்கு பிறகு?' ஜின்னா கேள்வி கேட்டார் பாக்கிஸ்தான் பிரிந்தது.

இதே காட்சி இலங்கையிலும் நிகழ்ந்தது. ஆனால் தமிழர்களின் தலைவர்கள் என்று அப்போது அறியப்பட்ட சேர். பொன் இராமநாதன் ஜி.ஜி.பொன்னம்பலம் ஆகியோர் நாட்டைப் பிரித்துக் கேட்கவில்லை. ஒற்றையாட்சிக்குள் சுமுகமாக வாழலாம் என்று நம்பினார்கள். இராமநாதனின் அண்ணாவான சேர்.பொன்.அருணாசலம் அவர்கள் தமிழீழத்தை பிரிக்க வேண்டும் என்று சொன்னாலும் கூட இது கிணத்துக்குள் இருந்து முணுமுணுத்த குரலாக ஒலித்தது.

பிறகு பிறகு தந்தை செல்வா சமஷ்டி கேட்டார் தான். சிங்கள அரசு எதற்குத்தான் செவிசாய்த்தது. சமஷ்டி கேட்ட தந்தை செல்லாவின் இரத்தத்தை சிங்களம் கெக்கலி கொட்டிச் சிரித்துப் பார்த்தது. கசந்து போய் தந்தை செல்வா பிறகு சொன்னார் 'தமிழ் மக்ளை கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்'.

தந்தை செல்வா சொன்ன 'கடவுள்' யாரதென்றது தமிழ் மக்களுக்குத் தெரியும் ஆனால் காலம் எங்களை கை விட்டு விட்டு அநாதரவாக நிற்க வைத்து விட்டது.

அழுகிறேன் நான்.

# அறிவியல் தகவல்கள்

**சி.மாசிலாமணி**

***(ஒரு பேப்பருக்காக)***

### எழுத்துக்கள்

மொழியியலில் எழுத்துக்கள் முக்கிய பங்கை வகிக்கின்றன. எத்தனையோ துறைகள் வளர்ச்சி அடைந்து, அவை பற்றிய பதிவுகள் பன்மடங்கு பெருகியுள்ள சூழலில் ஒரு மொழியின் இன்றியமையாத அங்கம் எழுத்துக்கள் என்பதில் தவறில்லை. எழுத்துக்கள் இல்லாத ஆதிகாலத்தில் உருவாகிய இந்து வேதங்கள் வாய் முறை வாயிலாகவே பல தலைமுறைகள் காப்பாற்றப்பட்டன. இப்பொழுது எழுத்து வடிவில் உள்ள வேதங்கள் ஒரு காலத்தில் மனத்தால் பாடம் செய்த பலரால் பல தலைமுறைகள் காப்பாற்றப் பட்டதென்றால் அது எப்படிப்பட்ட சிரமமான பணி என்பதை நாம் சற்று மனக் கண்ணில் நிறுத்திப் பார்த்தால் அது வியப்பைத்தான் தரும்.

அர்த்தமுள்ள ஒலிகளின் கூட்டுத்தானே ஒரு மொழி. இசையில் அதன் நாதத்தில் எழும் ரீங்காரத்தை சில எளிய குறியீடுகள் மூலம் மற்றையவர்களுக்கு எவ்வளவு துல்லியமாக இசை வல்லுனர்கள் பதிந்து வழங்கு கிறார்கள். அதே போல் ஒரு மொழியின் ஒலியன்களை பதிவுக்குக் கொண்டு வர ஏற்பட்ட தேவையே எழுத்துக்களின் உருவாக்கம்.

ஒரே ஒலியனுக்கு இரு வடிவங்கள் ஒரு மொழியில் வராது காப்பது முக்கியமே தவிர இந்த ஒலியனுக்கு இந்த வடிவந்தான் நிலைக்க வேண்டும் என்பது ஒரு விவேகமான செயல் அல்ல. தமிழுக்கு அளப்பரிய சேவையை பெரியார் செய்தார் என்றால் அது அவர் கொண்டு வந்த எழுத்து சீர்திருத்தமே. அப்போதே ஒரு கூட்டம் சொல்ல ஆரம்பித்து விட்டது, இந்த எழுத்து சீர் திருத்தம் தமிழ் இலக்கணத்தை பாதிக்கும் நாம் ஒருபோதும் யானையை யானை என்று எழுதமாட்டோம் பழைய முறையில்தான் னையன்னாவை எழுதுவோமென்றார்கள். அன்று அவர்கள் எதிர்த்தது இன்று தமிழ் எழுத்து வழக்கில் இணைந்து விட்டது.

ஒரு மொழியின் இலக்கணம், எழுத்து, சொற்கள் என்பவை ஒன்றுடன் ஒன்று இணைந்தவை அல்ல. இதில் மொழியின் கண் போன்றது இலக்கணம். ஒரு மொழி எந்தக் குடும்பம் என்பதை கண்டறிய உள்ள வழிகாட்டியும் இலக்கணம் தான். இலக்கணத்தின் தரததுடன் சொற்கள் பற்றிக் கூறுவது குழப்பத்தை உண்டாக்கும். எடுத்துக்காட்டிற்கு தமிழும் கன்னடமும் மிக நெருங்கிய மொழிகள். ஆனால் மத்திய திராவிட மொழியான தெலுங்கும் கன்னடமும் பல வட மொழிச் சொற்களை தங்கள் இரு மொழிகளுடனும் இணைத்து விட்டார்கள். அதனால் ஒரு தெலுங்கன் பேசுவதை புரியும் அளவுக்கு தமிழன் பேசுவதை கன்னடக்காரனால் புரிய முடியாது.

எழுத்துக்களைப் பொறுத்தமட்டில் ஒரு ஒலியன் உள்ள ஒரு எழுத்து உயிர் எழுத்துக்கொப்ப மாறும்போது உருவில் பெரிய மாற்றம் அடையக் கூடாது. ட என்னும் எழுத்து உவுடன் இணையும் போது டு ஆகிறதே. இந்த டவுக்கும் டுவுக்கும் என்ன ஒற்றுமை தென்படுகிறது. இப்படியான குறைபாடுகள் தமிழுக்கு இருக்கக் கூடாது. இநதக் கனா கு கூ வாக மாறும்போது ஏன் இந்த அசிங்க மாற்றமடைய வேண்டும்.

மாற்றமடையும் உலகின் கணனித் தேவைக்கு ஒப்ப தமிழ் எழுத்துக்கள் சீர் அடைவது தமிழுக்கு அவசியம். எழுத்து முறையை சீராக்குவது தமிழை இரண்டாம் மொழியாகக் கற்கப் போகும் எம் புலம்பெயர்ந்த பிரிவின் அடுத்த தலைமுறை எளிதில் தமிழை எழுதப் பழக வசதி ஏற்படுத்தும். இன்று தமிழ் பேச்சுப் போட்டிகளுக்கு ரோமன் எழுத்துக்களில் எழுதி வந்து வாசிக்கும் இழி நிலையும் குறையும். ஓட்டு மொத்தமாக தமிழ் கூறும் நல்லுலகின் மொத்த எதிர்காலச் சந்ததிகளுமே பயனுறும்.

அ வுடன் இணையும் 18 மெய் எழுத்துக்களால் உருவாகும் 18 எழுத்துக்களையும் அப்படியே வைத்து உயிரெழுத்துக்கு ஒப்ப பக்கத்தில் குறியீடுகளை இட்டு மாற்றம் செய்தால் நிச்சயம் எழுத்துக்கள் சீராக அமையும்.

பினிஸ் மொழியில் 16 உயிரெழுத்துக்கள் உண்டு. அவர்களைக் கேட்டால் 8 என்பார்கள். அந்த எட்டின் நீள் வடிவம் தானாம் மற்றைய எட்டும். அப்படிப் பார்த்தால் அ இ உ எ ஐ ஒ என்ற 6 எழுத்துக்கள்தானே தமிழின் உயிர். ஔ என்பது தேவையற்ற ஒரு இரட்டை எழுத்துச் சேர்ப்பு. அந்தச் சீர்திருத்தமும் எற்பட்டால், எந்த இந்திய சிங்கள மொழியாலும் செய்ய முடியாததைச் செய்த பெருமை எம் தமிழ் மொழியை சாரும்.


தமிழ் இணையப் பரப்பில் புதிய வரவு

செய்திகள் | அரசியல் | ஆய்வு

விவாதம் | இலக்கியம் | சமூகம் | சினிமா

காலத்தின் பதிவாய்

இனத்தின் குரலாய்...



ponguthamil.com

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

| பிரித்தானியா: | கனடா: |
|---|---|
| Tel: 020 7043 4315 | Tel: 647-724-4188 |
| Fax: 020 7043 4312 | Fax: 416-438-7855 |

email: info@orumanam.com



## மணமகள் தேவை

1. Age 30, height 5.5" in Sri Lanka, a farmer looking for a suitable bride Ref: 1323

2. Age 28, height 6.0" Engineer working in UK in a company with the work permit visa looking for a suitable bride Ref: 1316

3. Age 35, height 5.11" British Citizen, Engineer woking in a company looking for a suitable bride Ref: 1332

4. Age 30, height 5.5" Engineer working in UK with Work permit visa looking for a suitable bride Ref: 1355

5. Age 38, height 6.0" living in Canada, looking for a suitable bride Ref: 1407

6. Age 28, height 5.9" Canadian Citizen, Graduate is looking for a suitable bride Ref: 1339

7. Age 32, height 5.11" Marine Engineer currently studying in Cyprus looking for a matching bride Ref: 1356

8. Age 36 height 5.8" Canadian citizen, graduate, self employed looking for the suitable bride. Ref: 1409

9. 28 வயது, 6'2", Canadian Citizen, well employed, மணமகன் தகுந்த வாழ்க்கைத் துணையைத் தேடுகின்றார். Ref: 1203

10. 24 years, 5'9", working in a CCTV Company in malaysia, is looking for a suitable bride in Europe. Ref: 1202

11. 31 years, 5'9", Indian Nationality, BA Physicology, *seeks a suitable* bride. Ref: 1271

12. 35 years, 6'0", British Citizen, MSC in computers and well employed, seeking a matching bride. Ref: 1191.

13. 37 years, 5'10", British Citizen, Accountant, looking for a matching bride. Ref: 678

14. British citizen 37 years, 5'10", self employed in IT, looking for a suitable partner. Ref: 1199.

15. 40 வயது, 5'9", கனடா பிரஜாவுரிமை பெற்ற, வங்கியில் வேலை செய்யும் மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1231

16. 55 வயது, 5'6", இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற, Heathrow Airport இல் வேலை செய்யும் மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref:1235.

17. 42 வயது, 5'6", British Citizen, இலண்டனில் IT Company ல் வேலை செய்யும் மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1213.

18. 42 வயது, 5'6", Swiss Citizen, Engineer தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 1167.

19. 49 years, 6', living in France, looking for a suitable bride. Ref: 271

20. இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற 27 வயது, 6" உயரம், Financial Sector இல் பணிபுரியும் மணமகன் தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 587.

21. British citizen, age 29, 5' 4" Accountant, looking for a suitable groom. Ref: 1130.

22. NHS இல் வேலை செய்யும் 26 வயது, 5'7" உயரம் மணமகன் தகுந்த மணமகளை இலண்டனில் தேடுகின்றார். Ref: 1096.

23. MSC in Civil Engineer, 29 வயது, 5'6" உயரம் மணமகனுக்கு நன்கு படித்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 1091.

24. Age 30, tall 6", Studied Bio Medicine, seeks a suitable bride. Ref:1106.

25. கனேடிய, இலண்டன் பிரஜாவுரிமைகளைப் பெற்ற வயது 36, உயரம் 5'9" Auto Mobile Engineer ஆக வேலை செய்யும் மணமகனுக்கு நன்கு படித்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 1084.

26. Age 31, tall 5'7", Living in UK, seeks a bride in UK. Ref: 686.

27. ஐரோப்பிய பிரஜாவுரிமை பெற்ற 35 வயது, 5'5" உயரம் உடைய மணமகன் தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 1055.

28. Age 27, tall 5'4", Living in Colombo, speaking disablity, seeks a suitable bride. Ref: 1137.

29. இந்தியாவில் வசிக்கும் 26 வயது, 6'5" உயரம் உடைய மணமகன் இலண்டனில் தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 1090.

30. Self-Employed, 41 age, 5'7" tall, seeks a suitable bride. Ref: 1092.

31. இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற 43 வயது, 5'6" உயரம், Financial sector இல் பணிபுரியும் மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1135.

32. Age 33, tall 5'9", seeks a suitable bride with Europe citizenship. Ref: 1148.

33. Swiss Citizen, Engineer, 42 age, 5'6" tall, looking for a suitable bride. Ref:1167

34. இலண்டனில் பிறந்து வளர்ந்த வயது 33, உயரம் 5.11" Doctor மணமகனுக்கு நன்கு படித்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 1006.

35. Age 27, 5.7", Vegetarian, Engineer is looking for a suitable vegetarian bride. Ref: 1013

36. American Citizen, Age 32, Tall 5.8", doing network & security final year, working as a Supervisor in a compony in USA, seeks for a educated bride. Ref: 1020

37. Age 39, Tall 5.9" is looking for a suitable bride. Qualification and visa is not a problem. Ref: 972.

38. British citizen, doctor, divorced, age 45, 5.10" looking for suitable bride. Ref: 454.

39. வயது 33, உயரம் 5.6" மணமகனுக்கு தகுந்த மணப்பெண்ணை தேடுகின்றனர். Ref: 880.

40. இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற, வயது 35, உயரம் 5.8, Export Business செய்து கொண்டிருக்கும் மணமகனுக்கு தகுந்த பெண்ணைத் தேடுகின்றனர். Ref: 948.

41. Age 29, Tall 5.8", Indian Nationality, working as a Software Consultant for Investment Bank in London, is looking for a bride in Europe. Ref: 879.

42. வயது 29, உயரம் 5.8". இலங்கையில் வசிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றனர்.Ref: 820

43. British Citizen, 39 years, Tall 5.7", working for London Transport and trainee helicopter pilot is looking for a suitable bride. Ref: 1398

44. வயது 30, 5.10" உயரம் உடைய மணமகனுக்கு இலண்டனில் நிரந்தர பிரஜாவுரிமையுடைய மணப்பெண்ணை தேடுகின்றனர். Ref: 867

45. Accountant, Age 29, tall 5.7", British Citizen is looking for a well educated bride. Ref: 868

46. Age 29, 5.8", working as a Seaman in Sri Lanka, seeks a suitable bride with European citizenship. Ref: 874

47. Age 27, tall 5.2", seeks a educated bride with UK citizen. Ref: 889

## மணமகன் தேவை

1. Age 37, height 5.5" Doctor working in a Jaffna Hospital looking for a suitable Groom Ref: 1063

2. Age 38, height 5.6" Canadian Citizen, Engineer working in a company looking for a suitable Groom Ref: 1322

3. Age 35, height 5.6" French Citizen, in UK Divorcy working as a sales assistant looking for a suitable Groom Ref: 610

4. Age 28, height 5.0" in India looking for a suitable Groom Ref:1347

5. Age 27, height 5.2" British Citizen Accountant working in a company looking for a suitable Groom Ref:1348

6. Age 32 height 5.3" Sri Lanka, finished diploma in Psychology looking for a suitable Groom Ref:1391

7. Age 28, height 5.7" in UK worked as a English teacher in Sri Lanka looking for a suitable Groom Ref:1406

8. Age 30, height 5.7" British citizen, Graduate and working as a Biochemist looking for a suitable Groom Ref:627

9. Age 22, height 5.2" British citizen, Graduate looking for a suitable groom Ref: 1408

10. 24 வயது, 5'3", BSc Degree holder in Mathematics, படித்த, இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகனைத் தேடுகின்றார். Ref: 1243.

11. 28 வயது, 5'0", மணமகள் தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1222

12. 41 years, 5'5", finished MBA in UK, seeks an educated groom. Ref: 1230.

13. 38 வயது, 5'4", Doctor, நன்கு படித்த மணமகனைத் தேடுகின்றார்.Ref: 1232

14. 46 வயது, 5'4", B.Sc. in Science, இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகள் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1667.

15. 43 years, 5'2", working at univercity in sri Lanka, is looking for a grrom with Europe Citizenship. Ref: 1246.

16. 46 வயது, 5'2", British Citizen, தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1210

17. இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற 28 வயது, 5'2" உயரம், BSC Degree in Computer Science & Business Management படித்த பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1160.

18. இலண்டனில் படித்துக் கொண்டிருக்கும் 22 வயது, 5" உயரம் உள்ள பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1040.

19. Accountant, British Citizen, 28 age, 5'5" tall, is looking for a well educated groom. Ref: 1102.

20. Nowagien Citizen, 27 age, 5'4" tall, is looking for a suitable groom. Ref: 1104.

21. Royal Scottish Bank Team Leader ஆக இருக்கும் 28 வயது, 5'5" உயரம் கொண்ட மணமகள் Accountant அல்லது IT Qualified மணமகனைத் தேடுகின்றார். Ref: 871

22. British Citizen, 34 age, 5'2" tall, working as a Information Technology, seeks a well educated & employed groom. Ref: 1076.

23. Australian PR, Accountant, 30 age, 5'10" tall, is looking for a educated groom. Ref: 1120.

24. Living in Sri Lanka, a widow, 36 age, 5'3" tall, seeks a matching groom in UK or Sri Lanka. Ref: 1166

25. இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற, Case Progress Officer ஆக Majestic Courtஇல் வேலை செய்யும் வயது 28, உயரம் 5.2" கொண்ட பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 963.

26. *British Citizen, Age 21, Tall 5.5"* LLB finished, Looking for a well educated groom. It's better if the groom was born in UK or brought up in UK. Ref: 992.

27. Age 26, Tall 5.3", Finished her MA in French and English, is seeking an educated groom in UK. Ref: 897

28. UK PR, பல்கலைக் கழகத்தில் மூன்றாவது வருடம் படித்துக் கொண்டிருக்கும், வயது 22, உயரம் 5" பெண்ணுக்கு நன்கு படித்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1008

29. Working in a Audit Firm in Sri Lanka, Age 29, Tall 5.3" ,is looking for a Roman Catholic groom age between 30 – 36. Ref: 913.

30. இலங்கையில் வசிக்கும் வயது 21, உயரம் 5.2" உடைய பெண்ணுக்கு இலண்டன் அல்லது கனடா குடியுரிமை பெற்ற தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 956.

31. வயது 34, உயரம் 5.3" Sun TVஇல் Web Designer ஆக வேலை செய்யும் பெண்ணுக்கு Europeஇல் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 991.

32. வயது 26, உயரம் 5.2" IT field இல் வேலை செய்து கொண்டிருக்கும் பெண்ணுக்கு ஐரோப்பிய பிரஜாவுரிமை பெற்ற மணமகனைத் தேடுகின்றனர். prefer in UK, Canada & Australia. Ref: 1007.

33. வயது 40, உயரம் 5.5" இலங்கையில் வசிக்கும், செவ்வாய் குற்றம் உள்ள பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 819

34. Age 37, Tall 5.3", doing Administrative Managementin UK, is looking for a groom in Europe. Ref: 1026

35. இலங்கையில் வசிக்கும் வயது 47, உயரம் 5.6" செவ்வாய் தோஷம் கொண்ட பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1027

36. 27 வயது, 5.8" உயரம், Engineer பெண்ணுக்கு, இலண்டன் பிரஜாவுரிமையுடைய நன்கு படித்த மணமகனை அவருடைய பெற்றோர் தேடுகின்றனர். Ref: 865

37. British Citizen, Age 28, tall 5", Pharmacist is looking for a well educated groom. Ref: 866

38. French Citizen, Accountant, Age 29, tall 5.2", is looking for a well educated groom. Ref: 881

39. Age 26, tall 5.3", completed BSC Microbiology and doing MBA now in India, looking for a well educated groom in Europe. Ref: 882

40. வயது 26, உயரம் 5'. இலங்கையில் ஆசிரியை ஆக பணிபுரியும் செவ்வாய்க் குற்றம் உடைய பெண்ணுக்கு படித்த UK இல் வசிக்கும் தகுநத மணமகனைத் தேடுகின்றனர். Ref: 607

41. Age 35, tall 5.2", Finished her LLB Master Degree, looking for a well educated groom with UK, Canadian or Australian citizenship. Ref: 887

42. French Citizen, Age 52, tall 5.4" is looking for a suitable groom. Ref:891

43. British Citizen MSc in IT, Age 37, tall 5.3" is looking for a well educated groom. Ref: 895.

44. Age 40, 5.2", doing MSC in formulation science, is looking for a suitable groom UK PR or citizenship. Ref: 899.

45. English teacher in Sri Lanka, Age 28, tall 5.5" seeks a suitable groom in UK. Ref: 910

46. Age 34, tall 5.6", living in Sri Lanka, self employed, looking for a matching groom. Ref:- 822

47. Age 49, tall 5.6", finished her hotel management, living in Colombo, looking for a suitable groom in UK. Ref:- 804

48. Age 49, 5.6", Canadian Citizen, finished her hotel management, is looking for a matching groom. Ref:- 805

49. இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற, Doctor வயது 27, உயரம் 5.4" கொண்ட பெண்ணுக்கு அவரது பெற்றோர் நன்கு படித்த தகுந்த மணமகனை எதிர்பார்க்கின்றனர். Ref:- 824

50. Age 36, tall 5.3" , Engineer is looking for a well educated groom. Ref: 825

51. Age 30, 5.2" woking as a teacher in Sri Lanka, looking for a groom in abroad. Ref:- 736

52. Age 33, 5.6" tall, A/L finished bride is looking a suitable groom with UK citizenship. Ref:- 826

53. Age 30, 5.8", working as an accountant in Sri Lanka, looking for a matching groom abroad. Ref: 676

54. British Citizen, Age 28, 5.7", Medical Graduate, looking for a graduate groom. Ref: 722.

55. British Citizen, Age 28, 5.6" Assistant Accountant, looking for a suitable groom. Ref:- 585.

56. 25 வயது 5" உயரம் உடைய, Colombo வில் வசிக்கும் பெண்ணுக்கு அவரது பெற்றோர் சிறந்த படித்த மணமகனை தேடுகின்றனர். Ref:- 639

57. Swiss பிரஜாவுரிமையுடைய 25 வயது 4.11" உயரம் Technical Radiography & Accountant படித்த பெண்ணுக்கு மணமகன் தேவை. Ref:- 608

இணையத்தில்
மேலதிக
விபரங்கள்
www.orumanam.com

# விசா பிள்ளையாரும், வெளிநாட்டுப் பிள்ளையாரும்



கொழும்பில் வெள்ளவத்தைக்கு பின்புறமாக கடற்கரை வீதியில் ஆட்டோவில் போய்க் கொண்டிருந்தேன். ஒரு சந்தியில் இருந்த வீட்டு வளவுக்குள் காவலில் வைக்கப்பட்டிருந்தார் நம்மட பிள்ளையார்.

சிறிய கோயில் மாதிரி பில்ட் அப்பும் கொடுத்திருந்தார்கள்.

பிள்ளையாருக்கும் டெர்ரரிஸ்ட் அட்டாக் நடக்கும் என்ற பயத்தில் மதில் எல்லாம் கட்டி மிகவும் பாதுகாப்பாய்த் தான் வைத்திருந்தார்கள் ஆனால் துணைக்குத்தான் எவருமிருக்கவில்லை. ஒரு சொறி நாய் மட்டும் நித்திரையில் பிள்ளையாருக்கு பாதுகாப்பு தந்து கொண்டிருந்தது.

திருநீறு, சந்தனம் இத்தியாதி எல்லாம் முன்னுக்கு இருந்தது. பெரிதாய் ஒரு உண்டியலும் அதில் ஒரு மஞ்சல் துணி கட்டி அதன் முக்கியத்தை இன்னும் அதிகப்படுத்தியிருந்தார்கள்,

ஏதோ.. ஒரு உணர்ச்சிவசப்பட்ட பக்தனின் வீடாக்கும் என்று நினைத்தபடியே கடந்து போனேன். (இது நடந்த போது ஒரு மதியம் 2-3 மணியிருக்கும்).

மாலை மீண்டும் அதே வழியால் போன போது அந்த இடம் பரபரப்பாய் இருந்தது. அழகாகக் கூட்டப்பட்டு, தண்ணீர் தெளித்து, காவலுக்கிருந்த நாய் கலைக்கப்பட்டு பக்தி, முத்திக் கொண்டிருந்தது.

சிலர் வந்து கும்பிட்டு போனார்கள், வந்தவர் சிலர் மதிலோரமாக நின்றுகொண்டார்கள், கூட்டம் கூடத் துவங்கியது. மணியடித்தார்கள், தீபம் காட்டினார்கள்

எனக்கு இது புதினமாயிருந்தது. கூத்தைப் பார்ப்போம் என்றால் நேரம் போதாதிருந்தது.

மாலை, மெதுவாய் விடயத்தை எடுத்து விட்டேன் சற்று சாமிப் போக்காய் இருக்கும் எனது அக்கா ஒருவரிடம்.

டேய் அது விசா பிள்ளையார்டா... (எனக்கு முதலில் விசர்ப் பிள்ளையார் என்று தான் கேட்டது.. பிறகு தான் விசயம் விளங்கியது)

- இப்ப அவர்ட கோயில் தான் இந்த ஏரியாவிலயே விசேசமான கோயில் என்றும்.
- தினமும் காலையும், மாலையும் பயங்கரமாய் கூட்டம் அலைமோதும்
- மாதத்தில் ஒரு நாள் விசேட பூஜை நடக்கும்
- ரெண்டாயிரம் ரூபா தாளில் மாலை போடுவார்கள்
- சிங்களவர்களும் வந்து கும்பிடுவார்கள்

என்றும் கோயிலின் வீக்கீபீடியா தகவல்களைச் சொன்னார்.

உந்த பிள்ளையார் சும்மா தான் இருந்தவர். ஆனா திடீர் என்று ஆக்களுக்கு விசா விடயத்தில அருள் குடுத்ததால இப்ப அவருக்கு விசா பிள்ளையார் என்று பேர் வைச்சிருக்கிறாங்கள் என்றும் சொன்னார். (பிள்ளையாரப்பா! நமக்கும் அந்த விசா எடுக்குற டெக்னிக்க சொல்லக்கூடாதா? நானும் ஏதோ நாலு காசு பார்க்கலாம்)

பிள்ளையார் இருக்கும் வீட்டக்காரர் தான் பூசாரியாம். டக் டக் என்று விசா கிடைக்குதாம்.. (ஷ்சப்பா.. தாங்க முடியலியே) என்றவர்

இதே மாதிரி யாழ்ப்பாணத்திலயும் ஒரு பிள்ளையார் இருக்கிறார் என்றும் அவருக்கு வெளிநாட்டு பிள்ளையார் என்று பெயராம்.. அவரும் பயங்கர பேமஸ்சாம் என்று நம்ம பிள்ளையாரின் பிராஞ்ச் ஒபிஸ் பற்றியும் விளக்கம் தந்தார்.

மீண்டும் மாலை 9 மணி போல் விசா பிள்ளையாரை கடந்து போகும் போது ஒரு வயதானவர் கண்மூடி.. பயங்கரமாய் கும்பிட்டுக் கொண்டிருந்தார்.

என்னடா இது வில்லங்கமா போச்சு.. இந்த வயசிலயும் வெளி நாடு போக விரும்புகிறாறோ அப்பு..(ஏர்போட் வரை கூட தாங்கமாட்டார் போலிருந்தார் அவர்)

என நினைத்தது மனம்

பிறகு மீண்டும் பிள்ளையாரின் பெயர் ஞாபகம் வர... எனது சந்தேகம் தீர்ந்தது..

பெரிசு விசா தான் கேட்குது ஆனால் வெளி நாட்டுக்கு அல்ல.... வேற இடத்துக்கு என்று.

விசா பிள்ளையாரே ! நான் உன்னை நக்கல் பண்ணியதாக நினைத்து எனது விசாவை ரத்துப் பண்ணி விடாதே

நீ அப்படி செய்தாலும் ..... இருக்கவே இருக்கிறது யாழ்ப்பபாணத்தில் வெளிநாட்டுப் பிள்ளையார் கோயில்.

புரிந்ததா மை லோட்?

பிள்ளையாரை நக்கல் பண்ணுகிறேன் என்று சொல்லி போனைத் தூக்காதீர்கள்.. திட்டுவதற்கு. எனது பிள்ளையார் இப்படியானவர் அல்லர். சந்திலே சிந்து பாடி காசு பார்க்கும் மனிதரல்ல அவர். நான் கண்ட யதார்த்தத்தை சற்று நகைச்சுவை கலந்து பதிந்தேன் அவ்வளவு தான்.

வாழ்க லோட் கணபதி

*- விசரன்*

## யாழ்பாணத்தில் சத்தியநேசன்...



உண்ணான நான் லண்டனிலை கவுன்சிலராய் இருக்கிறன். படம் வைச்சிருக்கிறன். பிளீஸ் நம்புங்கோ.

## டவுட்டு கண்ணா டவுட்டு

கரண்ட கண்டுபிடிக்காத காக்கா
குருவியெல்லாம் கரண்டு கம்பியில
ஒய்யாரமா ஊஞ்சலாடுது...
கஷ்டப்பட்டு கரண்ட கண்டுபிடிச்ச மனுசனால
ஆசைக்கு ஒரு தடவ தொட்டுப் பார்க்க
முடியுதா?

-000000-

ஹுரோவோட நண்பனை வில்லன் கத்தியால குத்திட்டா, ஹுரோ சிறுக்கு தலைய தடவி வசனம் பேசுறானே தவிர, ஆஸ்பிடலுக்கு தூக்கிட்டு போறதில்லையே. ஏன்?

-000000-

கோத்தபயா ராஜபக்சேவைக் கொலை செய்ய முயன்ற 3 பேர் இலங்கை போலீசால் கைது... *(செய்தி)*

கொல்லாம ஏண்டா விட்டீங்கன்னு கைது பண்ணியிருப்பாங்களோ!!!!

*- கதிர்*


HARI ॐ AUM HOLIDAYS

2010 ~ Tips Included SUMMER SPECIALS

ace association of cruise experts

PORTUGAL ~ The Algarve
8 DAYS FROM £635PP
DATES: 9 SEP, 21 OCT

SPAIN ~ Barcelona, Lloret-de-Mar
8 DAYS FROM £450PP
DATES: 4, 18 SEP, 2 OCT

SOUTH AFRICA & MAURITIUS~Cape Town, Durban, Kruger, SunCity, J'Burg, Mauritius.
14 DAYS
DATES: 11 NOV

CLASSIC CHINA ~ Beijing, Shanghai, Xian
11 DAYS FROM £1449PP
DATES: 7 SEP, 19 OCT, 9 NOV

KERALA & SRI LANKA~ Kanyakumari, Munnar, Periyar, Kovalam, Kandy Colombo, Sigiriya
18 DAYS
DATES: 9 NOV

CYPRUS ~ Island of Aphrodite - Troodos Mt
8 DAYS FROM £649PP
DATES: 30 SEP, 7 OCT

EGYPT ~ Giza Pyramids Cairo & 5* Nile Cruise
8 DAYS FROM £899PP
DATES: 8,22 SEP; 13,27 OCT

MOROCCO ~ Mt. Atlas, Marrakech, Agadir
8 DAYS FROM £649PP
DATES: 6, 20 SEP; 4 OCT; 1 NOV

Turkey ~ Marmaris, Dalyan, Pamukkale
8 DAYS FROM £625PP
DATES: 18 AUG; 9 SEP; 14 OCT

FAR EAST ~ Thailand, Singapore & Malaysia
Ask us about Hong Kong extension!
15 DAYS
DATES: 23 SEP; 21 OCT

USA ~ EAST COAST New York, Niagara Falls, Toronto & Washington DC ~ Limited Seats!!
8 DAYS
DATES: 20 SEP; 21 OCT

* The Holiday you deserve.
* All tours with Indian meals.
* Regional Airport Departures.
* Our Tour Managers speak Hindi, Urdu, Punjabi & Gujarati as well as English.
* Coach Hire for all ocassions. 15-75 seaters to suit you.

HARI ॐ AUM HOLIDAYS (A DIVISION OF AUM PLC),
560 NORTH CIRCULAR ROAD, NEASDEN, LONDON, NW2 7QA.
TEL: (+44) 020 8452 0350 FAX: (+44) 020 8452 1144
EMAIL: info@hariaum.com
WEBSITE: www.hariaum.com

OUR REPRESENTATIVES IN N.W. ENGLAND:
Manchester: Naginbhai Maisuria T: 07913 443425 OR 07810 448405
Leeds: Rameshbhai Khetani T: 07780 995522

CALL US NOW TO BOOK: 020 8452 0350

# தமிழை கொலை செய்து வரும் தமிழ் சினிமா!



இன்று பல்வேறு வழிகளிலே தமிழ்மொழி கொலை செய்யப்பட்டு வருகின்றது. இன்று எங்கு பார்த்தாலும் தமிழ் மொழியோடு தேவையற்ற விதத்திலே வேற்று மொழியினைக் கலந்து தமிழ் மொழியின் இனிமையினையும், தமிழ் மொழியின் சிறப்பினையும் குழி தோண்டிப் புதைக்கின்றனர்.

தமிழ் மொழியினை கொலை செய்வதிலே இன்று திரையுலகம்கூட விட்டு வைக்கவில்லை. திரையுலகத்தைப் பொறுத்தவரை பல வழிகளிலே எமது தமிழ் மொழியினை வளர்க்க முடியும். ஆனால் இன்று என்ன நடக்கின்றது? தமிழ் மொழியை வளர்ப்பதற்குப் பதிலாக எப்படி எல்லாம் தமிழ் மொழியினை கொலை செய்ய முடியுமோ அப்படி எல்லாம் கொலை செய்து கொண்டிருக்கின்றனர்.

திரையுலகம் சார்ந்த எல்லோரையும் குற்றம் சொல்லவில்லை. தமிழ் மொழியை வளர்ப்போரும் திரையுலகத்திலே இருக்கின்றார்கள். இருந்தாலும் இன்று திரைப்படங்களிலே பல்வேறு வழிகளிலே தமிழ்மொழி கொலை செய்யப்படுகின்றது.

அன்றைய திரைப்படங்களிலே தமிழ் மொழி இன்று போல் கொலை செய்யப்பட்டதா இல்லையே? இன்று என்ன செய்கின்றார்கள்.

இன்றைய தமிழ் திரைப்படங்களை எடுத்துக் கொண்டால் எமது கலாசாரத்துக்கு போருத்தமிலாத குடும்பத்தோடு பார்க்க முடியாத திரைப்படங்களே அதிகம் எனலாம். அதனை விட்டுவிடுவோம். திரைப்படங்களிலே தமிழ் மொழியிலே எத்தனை வீதம் பேசுகின்றார்கள் என்பதனை பார்த்திருக்கின்றீர்களா. ஏன் நாங்கள் தேவையற்ற முறையிலே வேற்று மொழிகளை பயன்படுத்துவதனை தவிர்த்து எமது தாய் மொழி தமிழினை பயன் படுத்துவதிலே என்ன தவறிருக்கின்றது.

இன்று வருகின்ற பாடல்களிலே என்ன செய்திருக்கின்றார்கள் அவர்கள் என்ன மொழியிலே பாடல்கள் எழுதியிருக்கின்றார்கள் என்பதே புரிந்து கொள்ள முடியாமலிருக்கின்றது. ஏன் தமிழ் பாடலிலே வேற்று மொழிகளை கலக்கின்றார்கள் தமிழ் மொழியிலே அழகான சொற்கள் இல்லையா? எத்தனை சொற்கள் இருக்கின்றன. இந்தக் கவிஞர்களுக்கு தமிழ் சொற்களுக்கு பஞ்சமா அல்லது தமிழ் மொழி தெரியாதவர்களா?

தமிழ் மொழியிலே பாடல் எழுதத் தெரியவில்லை என்றால் இவர்களுக்கு எதற்கு தமிழ் கவிஞர்கள் எனும் பட்டம். இவர்களுக்குத் தெரிந்த வேற்று மொழிகளிலே பாடல்களை எழுதலாமல்லவா? ஏன் தமிழ் மொழியை கொலை செய்து தமிழ் மொழியின் சிறப்பை இல்லா தொழிக்க நினைக்கின்றனர்.

இவர்களால் எத்தனை இலக்கியப் பாடல்கள் கொச்சைப் படுத்தப்பட்டிருக்கின்றன. எத்தனை இலக்கியப் பாடல்களை தமது பாடல்களிலே புகுத்தி எமது தமிழ் மொழியினை கொச்சைப் படுத்தியிருக்கின்றனர்.எத்தனை தேவாரங்களை கொச்சைப் படுத்தியிருக்கின்றனர். வேறொரு மொழியிலே இவ்வாறு செய்ய அந்த மொழியினை சார்ந்தவர்கள் விடுவார்களா?

இவர்களால் தமிழிலே பாடல்களை எழுதுவதற்கு என்ன. தமிழ் மொழியிலே சொற்களுக்கு பஞ்சமா? அல்லது இவர்களுக்கு தமிழ்மொழி தெரியாதா? தமிழ் மொழியிலே பாடல் எழுதத் தெரியாதவர்கள் எதற்கு தமிழ் கவிஞர்கள் என்று தங்களை சொல்லவேண்டும். தமக்கு தெரிந்த மொழிகளிலே எழுதலாமே. எங்கள் தமிழ்மொழியை ஏன் சாகடிக்கவேண்டும்.

இன்று இரசிகர்கள் இதனைத்தான் விரும்புகிறார்கள் என்று சொல்லப்போகின்றார்களா? இரசிகர்கள் விரும்புவதை விட அவர்களால் திணிக்கப்படுகிறது. இரசிகர்களை பழக்கப்படுத்தி விட்டது யார்? இவர்களால் திணிக்கப்பட்டபோது ஆரம்பத்திலே சகித்துக் கொண்டு கேட்க ஆரம்பித்தனர். பின்னர் தங்களை பழக்கப் படுத்திக் கொண்டனர் என்றுதான் சொல்லவேண்டும்.

அன்று வேற்று மொழிக் கலப்பிலாத பாடல்கள் வெளிவரவில்லையா? அந்தப் பாடல்கள் இன்றும் மக்கள் மனதிலே இடம்பிடித்திருக்கின்றன. ஆனால் இன்றைய பாடல்கள் எவ்வளவு காலம் நிலைத்திருக்கின்றன? சினிமாப் பாடல்கள் இன்று தமிழ் மொழியினைக் கொலை செய்வதனை ஒரு தொடர் பதிவே எழுத முடியும்.

**தமிழ் மொழியிலே பாடல் எழுதத் தெரியவில்லை என்றால் இவர்களுக்கு எதற்கு தமிழ் கவிஞர்கள் எனும் பட்டம். இவர்களுக்குத் இவர்களுக்குத் தெரிந்த வேற்று மொழிகளிலே பாடல்களை எழுதலாமல்லவா? ஏன் தமிழ் மொழியை கொலை செய்து தமிழ் மொழியின் சிறப்பை இல்லா தொழிக்க நினைக்கின்றனர்.**

தமிழ் மொழியினை வளர்ப்பதற்காக தமிழ் மொழியிலே திரைப்படங்களின் பெயர்களை வைத்தால் வரிவிலக்கு... சரி திரைப்படங்களிலே தமிழ் மொழியும் எமது இலக்கியங்களும் கொலை செய்யப்படுவதை என்னவென்றே பார்க்காது.

வேற்று மொழியிலே பெயர் வைப்பதை தடை செய்வதிலே என்ன இருக்கிறது? திரைப்படமே ஒட்டுமொத்தத்தில் தமிழ் மொழியை கொலை செய்கிறது. திரைப்பட பெயரினை தமிழில் வைத்து தமிழை கொலை செய்யும் திரைப்படங்களை என்ன செய்வது.

தமிழ் மொழி பற்றிப் பேசுகின்றவர்கள் திரைப்படப் பாடல்களும், திரைப்படமும் தமிழை கொலை செய்வதை பற்றி சிந்தித்திருக்கின்றார்களா?

இன்று தமிழ் மொழியை வளர்க்கின்ற திரையுலகம் சார்ந்தோரும். திரைப்படங்களும் இல்லாமல் இல்லை. தமிழ் மொழியினை கொலை செய்கின்றவர்கள் எமது மொழியின் வளர்ச்சிக்காக தமிழ் மொழியினை தமது பாடல்களிலே கொலை செய்வதனையாவது நிறுத்தி தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக நல்ல பாடல்களைத் தருவார்களா?

*- சந்துரு*

# Komaram Puli (Telugu)

## திரை விமர்சனம்



எஸ்.ஜே.சூர்யா இயக்கத்தில்,ஏ.ஆர் ரகுமான் இசையில்,பவன் கல்யாண் நடிப்பில் வெளிவந்திருக்கும் படம் 'கொமரம் புலி'.இந்தப்படத்தில் கதை முதற்கொண்டு எதுவுமே கிடையாதுங்க. இருந்தாலும்,கதை என்னன்னு தெரிஞ்சுகிட்டே ஆகனும்னு நினைக்கிறவங்க மட்டும் கீழே இருக்கிறதைப் படிங்க.

பவன் கல்யாண் ஒரு நேர்மையான போலீஸ் அதிகாரி.மக்கள் பிரச்சனையை தீர்க்க வேண்டும் என்பதற்காக ,ஒரு ரூபாய் நாணய தொலைபேசி சேவையின் ஊடாக மக்கள் தன்னை நேரடியாக தொடர்பு கொள்வது போல் ஏற்பாடு செய்கிறார். அதற்கு பின் அவர்களின் பிரச்னையைத் தீர்த்துவிட்டு, படம் பார்த்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு புது பிரச்சனையைக் கொடுத்து, தியேட்டரை விட்டு வெளியே அனுப்புகிறார்.

படம் ஆரம்பத்தவுடனே 1985-ம் ஆண்டு என்று காட்டுகிறார்கள்..அப்போது வரும் காட்சிகளெல்லாம் அந்த ஆண்டில் வெளி வந்த படக் காட்சிகளை விடக் கொடுமையாக இருக்கின்றன. தன் மகனை போலிஸாக்கிப் பார்க்க நினைக்கும் சரண்யா லெஃப்ட், ரைட் சொல்வதும் அதற்கு ஏற்றாற் போல், வயிற்றுக்குள் இருக்கும் குழந்தை காலை ஆட்டுவதும் ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு. பவன் கல்யாணுக்கு படம் நன்றாக வரும் என்று பெரிதாக நம்பிக்கை இருந்திருக்கும் போல. உடம்பையெல்லாம் குறைத்து, ஓவர் ஆக்டிங்கோடு நடித்திருக்கிறார்.ஹீரோயினைப் பார்த்து நாம் பரிதாபப்படுவதா இல்லை படம் பார்த்துக் கொண்டிருக்கும் நம்மைப் பார்த்து அவர் பரிதாபப் படுவதா என்று தெரியவில்லை.

படத்தின் ஹீரோ அடிக்கடி பத்து, பதினைந்து நிமிடங்களுக்கு தொடர்ந்து வசனம் பேச ஆரம்பித்து விடுகிறார். அவர் மூச்சு விடாமல் பேசி முடித்தவுடன், நமக்கு தண்ணீர் குடிக்க வேண்டுமென்பது போல் இருக்கிறது.அதுவும் வில்லன் மனோஜ் பாஜ்பாய் பொய் சொல்கிறார் என்பதை 'நடந்ததை உண்மையிலேயே,யோசித்து சொல்றவங்க மேலே பார்த்து பேசுவார்கள் பொய் சொல்பவர்கள் அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் முகத்தைப் பார்த்து பேசுவார்கள்' என்கிறார் பாருங்கள்.சே ! எஸ்.ஜே.சூர்யா மேலே பார்த்துட்டே கதை சொன்னதைப் பார்த்து, பவன் ஏமாந்துட்டார் போல.

ஏற்கெனவே கடுப்போடு படம் பார்த்துக்கொண்டிருக்கும் நமக்கு,மனோஜ் பாஜ்பாயின் நடிப்பும், வசன உச்சரிப்பும்,அதிரடியாக எதிரணி ரன்கள் குவித்துக் கொண்டிருக்கையில், இஷாந்த் சர்மாவிடம் பாலைக் கொடுத்து பவுலிங் போட சொல்வது போல் உள்ளது.ஷ்ரேயா ஒரு பாடலுக்கு கெஸ்ட் ரோலில் வருகிறார்.

படத்தில் உள்ள ஒரே உருப்படியான விசயம் ரகுமானின் இரண்டு பாடல்களான தோட்சே மற்றும் மாராலன்ட்டே.(ஸ்லம்டாக் மில்லியனரில் வந்த Gang star blues பாடலையே கொஞ்சம் மாற்றி 'தோட்சே' என்று போட்டிருந்தாலும், ஸ்ரேயே கோஷலின் அழகிய குரலில்,ஸ்ரேயாவின் அழகிய இந்தப் பாடல் நம்மைக் கிறங்கடிப்பது உண்மை).

எஸ்.ஜே.சூர்யா முதல் முறையாக முழு நீள ஆக்ஷன் படத்தை இயக்கியிருக்கிறார்.நல்ல வேளைக்கு இந்தப் படத்தை இவர் தமிழில் இயக்கவில்லை. படம்தான் நன்றாக வரவில்லையே,படத்தையாவது இரண்டு அல்லது இரண்டே கால் மணிநேரத்தில் முடித்துத் தொலைத்தால் என்ன?.அட தேவுடா, மூன்று மணி நேர அளவிற்கு நம்மைக் கொடுமைப்படுத்தி வெளியே அனுப்புகிறார்கள்.

*கொமரம் புலி - நிஜப் புலிகிட்ட மாட்டியிருந்தால் கூட.. இந்த அளவிற்கு கஷ்டம் ஏற்பட்டிருக்காது.*

*- மோகன்*



NAG & Co.
SOLICITORS

✓ CRIME
✓ CONVEYANCING
✓ MATRIMONIAL
✓ IMMIGRATION
✓ TRAFFIC MATTERS
✓ LANDLORD & TENANTS
✓ POLICE STATION MATTERS
✓ EMPLOYMENT MATTERS
✓ WORK PERMITS

Tel: 020 7737 1211 | Fax: 020 7731 1431
Email : nagandco@yahoo.co.uk
Unit 3 Holles House, Myattsfield south, London SW9 7JN
Nearest Underground - Brixton Station on Victoria Line and Oval Station on Northern Line

# பாஸ்(எ)பாஸ்கரன்

## திரை விமர்சனம்



பாஸ் என்கிற பாஸ்கரன் பட்டப் படிப்பில் அரியர்ஸ்களை வகை, தொகையாக வைத்துக் கொண்டு அதனைப் பற்றிக் கவலைப்படாமல் வாழ்க்கையை என்ஜாய் செய்யும் ஒரு சராசரி தமிழ் வாலிபன்.

இந்தச் சினிமாவில் கதையை நகர்த்த வேண்டுமென்பதற்காக ஒரு வல்லிய ஹீரோயின் அவனை கிராஸ் செய்கிறாள். அவள் அவனது அண்ணனின் கொழுந்தியாளாகவும் நெருக்கமாக வந்துவிட, இன்னமும் அவளைக் காதலிக்கத் துவங்குகிறான்.

வேலை வெட்டியில்லாத அவனை நம்பி எப்படி என் தங்கையைக் கட்டிக் கொடுப்பது என்று பாஸ்கரனின் அண்ணி கேட்க.. ரோஷப்படும் பாஸ்கரன் 'நானே சுயமாகச் சம்பாதித்து அந்தப் பணத்தில் என் தங்கச்சி கல்யாணத்தையும், என் கல்யாணத்தையும் நடத்திக் காட்டுறேன்..' என்று கற்பூரம் ஏற்றாத குறையாகச் சத்தியம் செய்துவிட்டு வீட்டைவிட்டு வெளியேறுகிறான். கடைசியில் எப்படி இதனைச் செய்து முடித்து தனது காதலியைக் கரம் பிடிக்கிறான் என்பதுதான் மிச்ச, சொச்சக் கதை..

ஹீரோ ஆர்யா, ஹீரோயின் நயன்தாரா, ஹீரோவைக் காப்பாற்ற சந்தானம், இசைக்கு யுவன்சங்கர்ராஜா, கதை சொல்லத் தெரிந்த இயக்குநர், நகைச்சுவையுடன் இயக்கத் தெரிந்த இயக்குநர் இது போதாதா இந்த டீமுக்கு..? எந்த லாஜிக்கையும் யோசிக்க வைக்காமல் இறுதிவரை போரடிக்காமல் சிரித்தபடியே கொண்டு போக வைத்து கதையை முடித்திருக்கிறார்கள்.

நான் கடவுள் ஆர்யாவா என்றெல்லாம் யோசிக்க வேண்டியுள்ளது. இதுவரையில் அவர் நடித்த திரைப்படங்களில் இருந்த ஹீரோ மேனரிசத்தை சுத்தமாகத் துடைத்துவிட்டு இயக்குநருக்கு நல்ல பிள்ளையாக நடித்திருக்கிறார்.

நயன்ஸை கல்லூரிக்குள் சென்று பார்ப்பது , அண்ணனின் முதல் இரவைக் கெடுத்துவிட்டு அமைதியே உருவாக இருப்பது, வருங்கால மாமனாரிடம் சீற வேண்டிய நேரத்தில் சீறுவது, நண்பனான சந்தானத்தை இறுதிவரையில் உடன் இழுத்து வைத்துக் கொண்டு கழுத்தை அறுப்பது, கடைசிவரையிலும் புரிந்து கொள்ளாத ஒரு வயசுப் பையனாகவே இருந்து தொலைத்து நயன்ஸை மட்டுமல்ல நம்மையும் சேர்த்தே அவ்வப்போது டென்ஷனாக்குகிறார்.

பிட் அடிப்பதற்காக முனைப்போடு 32 பிட்டுகளை எழுதி வைக்கும் காட்சியும், பஸ்ஸில் நயன்ஸை பார்த்து ஜொள்ளுவிட்டபடியே வந்து வகுப்பறையில் அவரைப் பார்த்தவுடன் செய்யும் தவிர்க்க முடியாத ஆக்ஷன்.. ரெம்பவே யதார்த்தம் அதிலும் வகுப்பறையில் நயன்ஸை சந்தித்தது ஆடியன்ஸுக்குக்கூட சூப்பர் டிவிஸ்ட்டாக இருந்தது.

நயன்தாரா பல முறை ஜாடைமாடையாகச் சொல்லியும் காதலைப் புரிந்து கொள்ளாத மக்குப் பையனாக இருக்கும் ஆர்யா, கடைசிவரையில் அது போலவே இருப்பது சற்று எரிச்சலைத் தந்தாலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

'நண்பேண்டா' என்று சொல்லிச் சொல்லியே சந்தானத்தை ரவுண்டு கட்டும் ஆர்யாவின் சேட்டைகளில் தியேட்டரே அதிர்கிறது. 'அவனவன் பத்து, பதினைஞ்சு நண்பர்களை வைச்சுக்கிட்டு ஓட்டுறாங்க. நான் ஒரே ஒருத்தனை நண்பனா வைச்சுக்கிட்டு படுற பாடு இருக்கே..' என்ற சந்தானத்தின் கமெண்ட்டுக்கு ரசிகர்களின் கரகோஷம் பின்னியெடுத்தது.

சந்தானம் சில வசனங்களை தேவையில்லாமல் ஜவ்வாய் இழுப்பது எரிச்சலைத் தரும் அதே நேரத்தில் இன்றைய தேதியில் அவரைவிட்டால் இளைய ஹீரோக்களைக் காப்பாற்ற வேறு ஆள் இல்லை என்பதும் உண்மை.

சந்தானம், ஆர்யாவுக்காகப் பத்திரத்தில் கையெழுத்துப்போட்டுவிட்டு சாணியள்ளும் வேலையை நினைத்துப் பார்க்கும்போதும், டியூடோரியல் கல்லூரியில் மாணவர்களிடத்தில் படும் பாட்டையும் பார்த்தால் பாவமாகத்தான் இருக்கிறது.. போகப் போக படத்தின் ஹீரோ ஆர்யாவா? சந்தானமா? என்பதே கேள்விக்குறி என்பதைப் போல காட்சிகள் இருந்தது ஆச்சரியம்தான்.

அதேபோல் டியூடோரியல் கல்லூரிக்கு ஷகிலாவை அழைத்து வந்து இரட்டை அர்த்த வசனங்களை வைத்து காட்சிப்படுத்தியிருப்பது தேவையில்லாதது. இது போன்ற காட்சிகளை படத்துக்குப் படம் வைப்பதினால் நிச்சயம் பள்ளிகள், கல்லூரிகள் மீதான இளைஞர்களின் பார்வை தடுமாறும்.. தமிழ்த் திரையுலகம் இந்தப் போக்கை அவசியம் மாற்றிக் கொள்ள வேண்டும்..

தொடர்ந்து அந்த கண் பார்வையற்ற பெண்ணின் காட்சிப் படுத்துதல் அதிர்ஷ்டவசமாக அழகாக அமைந்து போனது இயக்குநரின் திறமையினால்தான்.. பாராட்டுக்கள் ராஜேஷ். ஆர்யாவின் அண்ணனாக வரும் சுப்பு(கவிஞர், தயாரிப்பாளரான பஞ்சு அருணாச்சலத்தின் மகன்) டிவி சீரியல் போலவே சிற்சில இடங்களில் வசனங்களைப் பேச மிகவும் கஷ்டப்பட்டிருக்கும் தோரணையைப் பார்க்க சகிக்கவில்லை. ஆனாலும் களத்தில் குதித்துவிட்டார்..

இரண்டு ஹீரோக்கள் சப்ஜெக்ட் என்றாலே முக்கால் காத தூரம் ஓடும் இன்றைய கோடம்பாக்கத்திய சூழலில் இளம் நடிகர் ஜீவா ஒரு சின்ன கேரக்டரில் நடிக்க முன் வந்திருப்பது பாராட்டுக்குரியது. அதிலும் ஒரு ட்விஸ்ட் வைத்து கலக்கியிருக்கிறார்கள். இது போன்ற காட்சிகள் படத்தினை முடித்து வைப்பதற்கும், ஹீரோவை ரொம்ப நல்லவனாக காட்டுவதற்கும் பயன்படும் என்பதை இயக்குனரே செல்போனில் வந்து சொல்வது தமிழ்ச் சினிமாவுக்கு புதுசு. இந்த அளவுக்காச்சும் வெளிப்படையாக ஒத்துக் கொண்டாரே இயக்குநர். இதற்காக இன்னுமொரு முறை பாராட்டலாம்.

இசை யுவன்சங்கர் ராஜா வழக்கம் போலத்தான். சிவா மனசுல சக்தியைப் போலவே லாஜிக் மீறல்கள் நிறையவே இந்தப் படத்தில் இருந்தாலும், அது பற்றியே நம்மை சிந்திக்க விடாமல் சிரிக்க மட்டுமே வைத்து அனுப்பியிருக்கிறார் இயக்குநர் ராஜேஷ்.

*ஒரு முறை நிச்சயம் பார்க்கலாம்.. தப்பில்லை..*

*- உண்மைத் தமிழன்*

# சினித்துளி

## கிராமிய மணத்துடன் அவன் இவன்!



கோவா, பையா, நான் மகான் அல்ல, பொஸ் என்கிற பாஸ்கரன் என்றவாறு தொடர்ந்து வெற்றிப் பயணத்தில் சென்று கொண்டிருக்கும் யுவனின் அடுத்த படைப்பாக அமைய இருப்பது தான் அவன் இவன். அவன் இவனின் பாடல்களுக்கு இசையமைப்பதில் மிகவும் மும்மரமாக ஈடுபட்டிருக்கின்றார் யுவன். விஷால் திரு நங்கையாகவும் விஷாலின் சகோதராக ஆர்யாவும் நடிக்கும் புதிய படம் தான் அவன் இவன்.

தேசிய விருதுக்குச் சொந்தக்காரரான பாலாவின் இயக்கத்தில் வெளியாகும் படத்தின் தன்மைக்கு ஏற்ற வாறாக பாடல்களிலும் விசேட கவனம் செலுத்தப்படுகின்றதாம். யுவன் இது வரை இசையமைத்த பாடல்களிலும் பார்க்க இந்தப் பாடல்களில் புதிய வித்தியாசமான தன்மையை எதிர் பார்க்க முடியும் என்றும் சொல்லப்படுகின்றது.

## சந்திரமுகி-2இல் அஜித்!



கடந்த சில தினங்களுக்கு முன்பு சந்திரமுகியின் இரண்டாம் பாகத்தில் அஜீத் நடிக்கவிருக்கிறார் என்ற தகவலை. அப்படத்தை இயக்கவிருக்கும் பி.வாசு. பிரபல வார இதழுக்கு அளித்திருக்கும் பேட்டியில் அஜீத் நடிப்பதைப் பற்றி தெரிவித்திருக்கிறார் அவர். தான் ஆப்தரக்ஷா கடத்தைப்பற்றி சொன்னபோது அஜித்தும் படம் பார்த்துவிட்டு நல்லாயிருக்குன்னு சொல்லியிருக்கார். அவருக்கு மங்காத்தா, அப்புறம் இன்னொரு படம் வேறு இருக்கு. அவரோட பதிலுக்காக காத்திருக்கேன். இவ்வாறு அந்த பேட்டியில் தெரிவித்திருக்கிறார் பி.வாசு. ஆக தமிழ் சினிமாவில் மீண்டும் ஒரு வேட்டையன் ரெடி!

## எந்திரன் ரிலீஸ் திகதி மாறியது!



ஆரம்பத்தில் செப்டம்பர் 24-ம் தேதி இந்தப் படம் வெளியாகும் என்று கூறப்பட்டது. இந்தி ட்ரைலரிலும் அதே போல அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் தமிழ் ட்ரைலரில் ரிலீஸ் தேதி குறிப்பிடப்படவில்லை. அக்டோபர் முதல் தேதி உலகம் முழுக்க எந்திரன் வெளியாகும் என்றும் சன் பிக்சர்ஸ் தரப்பில் விநியோகஸ்தர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. படம் தயாரிக்கிறதுலதான் பிரச்சினையெண்டால் இங்க படம் ரிலீஸ் தேதியே பிரச்சினையா..?

## வருவாரா மம்பட்டியான்!



திருமணம் என்ற இடியப்ப சிக்கலில் மாட்டிக் கொண்ட பிரசாந்த் வெளிவர படாதபாடு பட்டுக் கொண்டார். விவாகரத்து பெற்றுக் கொண்டு கிரகலட்சுமியைவிட்டாலும் பிரசாந்தை பிடித்த கிரகம் விடுவதாக இல்லை. பல காலமாக கோட்டும் வாசலுமாக நடந்த பிரசாந் அதிலிருந்து விடுபட்டதன் பின் பூஜை போட்டுக் கொண்ட படங்கள் தான் 'பொன்னர் சங்கர்' மற்றயது 'மம்பட்டியான்'.

இந்த வகையில் தியாகராஜன் தன் சொந்த தயாரிப்பு நிறுவனமான லக்ஷ்மி சாந்தி சார்பாக தற்போது கைவசம் வைத்திருக்கும் 'மம்பட்டியான்' திரைப்படத்தில் நாயகியாக மீரா ஜஸ்மினும் முக்கியமான கதாபாத்திரத்தில் பிரகாஸ்ராஜ் மற்றும் வடிவேலு ஆகியோரும் நடித்திருக்கிறார்கள். விரைவில் படத்தினையும் வெளியிட தீர்மானித்திருக்கிறார் தியாகராஜன்.

அனைத்து வகையான இலங்கை இந்திய உணவுப் பொருட்கள், கடலுணவு வகைகள், பசுமையான மரக்கறி வகைகள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், மளிகைப்பொருட்கள் பாத்திர வகைகள், தமிழ், இந்தி சினிமா DVD, CD, VHS போன்றவற்றை தரமாகவும் நியாயமான விலையிலும் பெற்றுக்கொள்ள நீங்கள் நம்பிக்கையுடன் நாட வேண்டிய இடம்







கடல் கடந்து வாழ்கின்ற உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவதற்கும் அழையுங்கள்....

020 8905 7765

MARUTHI CASH & CARRY

15 - 17 Queensbury Station Parade Queensbury HA8 5NR

Tel: 020 8952 66 55 | 020 8381 3442 | Fax: 020 8905 7546

திருமண பிறந்தநாள் வைபவங்களுக்கு

# Sarasas Restarurant

**(Sri Lankan & South Indian)**

Specialist in Dosa

Lunch Offer Starts From £3.25 (Monday – Thursday 12.00 – 15.30)




We do out door Catering for wedding & other parties

- South Indian
- North Indian
- Srilankan
- Tandoori
- Chettinad
- Chinese



Tel: 020 08561 8188

630- 634 Uxbridge Rd, Hayes, Middlesex UB4 0RY, UK

web:www.sarasasrestaurant.co.uk




# STUDY IN UK!

## From Sri Lanka & India

**Obtain a British Degree! Your best investment in life.**

KMS கடந்த 11 வருடங்களுக்கு மேலாக ஐக்கிய இராச்சியத்தில் கல்வி பயில விரும்பும் இளம் மாணவர் களுக்கு சிறந்த சேவையை ஆற்றி வந்திருக்கிறது.

கடந்த 6 ஆண்டுகளாக 600க்கு மேற்பட்ட மாணவர்கள் பிரித்தானியாவில் உயர்கல்வி பெறுவதற்கு உதவி செய்திருக்கிறது. எமது மாணவர் களில் பெரும்பாலோர் தமது முதல் நிலை பாடத் திட்டங்களைப் பூர்த்தி செய்து தமது தொழில்களில் முன்னேற்றம் அடைந்துள்ளனர்.

KMS திரு. P.K Subanthan அவர்களால் தொடங்கப்பட்டது. இவர் தனது முது நிலைப் பட்டத்தை Masters Degree கிழக்கு இலண்டன் பல்கலைக் கழகத்தில் பெற்றுள்ளார். இவர் ஸ்ரீலங்காவிலும், ஐக்கிய இராச்சியத்திலும் கல்வித்துறையில் 15 வருட அனுபவம் வாய்ந்தவராவர்.

கல்விக் கட்டணங்கள் வருடாந்தம் £4000 இலிருந்து.

உங்களுடைய கல்வியைப் பூர்த்தி செய்தபின் நீங்கள் 2 வருடம் முழு நேரதொழில் செய்வதற்குரிய விசா பெறமுடியும்.

We welcome students from both Sri Lanka and India

**Knowledge Management Systems (Pvt) Ltd** KMS

We are the official representative for 11 UK universities.....

- University of Salford
- Anglia Ruskin University
- Middlesex University
- University of Keele
- University of Bedforshire
- Southampton University
- University of TEESSIDE
- University of Swansea
- Demonford University
- University of Central Lancashire

Your Gate way to British Degree

**London Office**
Knowledge Management Systems (Pvt) Ltd,
30-32, Southend,Croydon,
CR0 1DN,United Kingdom.
Tel :- 020 7112 5999
Fax :- 020 8688 5776
Mob :- 0044 7905 038 050

**India Office**
No 1, First Floor,
First Main Road,
Karpagam Gardens, Adyar,
Chennai 600 020,
South India.
Tel: 044 24900541
Fax: 044 42177335

**Colombo Office**
328, Galle Road,
Meewella Building First Floor,
Southern Wing, Colombo-04,
Sri Lanka.
Tel : +94 11 2555243 /5/6
Fax : +94112555244

Please E.Mail your certificates to pksubanthan@yahoo.co.uk

# 18-19 GUIDING YOU FOR A BRIGHT FUTURE

September 2010
10.30am - 7.00pm

## Indian Schools

### Education Exhibition 2010

Exclusive exhibition happening for the first time on Indian Schools with International Standard. Spot admissions for school education (primary to higher secondary level) with world class boarding facilities across India

**Advantages for NRI parents**

- Quality and fundamentals of School education is very strong
- Individual attention by the school faculties
- Learning with Indian values and ethics
- Opportunity to grow their children with rich Indian culture
- Very strong mathematical learning
- Highly cost effective
- Ideal for young working couples

## India Property

### Exhibition 2010

Apartments, Independent House, Bungalows, Villas, Farm House, Commercial Properties, Home Loans, Beach Resorts, Plots etc.,

**More than 50 Projects across**

Agra, Ajmer, Bangalore, Bathinda, Bhilwara, Bikaner, Chandigarh, Chennai, Coimbatore, Ghaziabad, Goa, Greater Noida, Gurgoan, Hapur, Hosur, Hyderabad, Jaipur, Jodhpur, Kancheepuram, Karnal, Kodaikanal, Kolkata, Kundli, Kurukshetra, Lucknow, Meerut, Mohali, Mumbai, Nainital, NCR, New Delhi, Ooty, Panipat, Pondicherry, Ranchi, Rudrapur, Sonipat, Trichy, Yamuna Nagar, and lot of other locations.

**ENTRY FREE**

Brought to you by INDUS
E-mail : induscbe@sify.com

**India's leading schools / Builders / Developers / Real Estate Co., participating**

Sheraton Skyline Hotel, London Heathrow, Bath Road (A4), Hayes, UB3 5BP, UK

# Southall Travel

## *Redefining Travel*

*Why travel with*
**Southall Travel?**

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

ஏன்
**சவுத்ஹோல் டிராவல்**
மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறார்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

*Call Centre open 24 hours* **0844 855 8017**

ABTA 80626

*Think Travel, Think Southall Travel*

www.southalltravel.co.uk